

ஆசான் சி.வி.வி



மூலம் : ஆசான் ஈ.கே.

THE WORLD TEACHER TRUST

ஆசான் சி.வி.வி



மூலம் : ஆசான் ஈ.கே.

THE WORLD TEACHER TRUST

ஆசான் சி. வி. வி.

எக்கிராலா கிருட்டினமாச்சாரியார்

THE WORLD TEACHER TRUST

முதல் பதிப்பு : டிசம்பர் 1991

14-38-2, Muppidi Colony,
Vishakapatnam,
530002,
Andhra Pradesh,
India.

விலை ரூ 25/-

விற்பனை உரிமை :

ஆதாரம்

காந்தி தெரு எக்ஸ்டென்ஷன்
சித்லபாக்கம், சென்னை-600 064.
தொலைபேசி : 403103

அச்சு :

இராசகிளி பிரிண்டர்ஸ், சென்னை-600 020

1991 டிச 7 டெ 1×8 பி. 2000

ஆசிரியர் முன்னுரை

உலகம் வாழ்க! உயிர்கள் நலம் பெறுக! உள்ளும் வெளியும் உணர்வு ஒளிர்க!

கலகம் ஒடுங்குக! காந்தம் ஏறுக! காதலில் அனைத்தும் கலந்தமுதம் பருகுக!

* * *

எங்குமுள ஒன்றை எங்கெங்கும் தேடி ஏங்குவோரில் ஏழையேனும் ஒருவன். எத்தனையோ பேர்களைச் சந்தித்தேன், ஏதேதோ செய்து பார்த்தேன். எதுவும் வீணில்லை என்றாலும் எதனாலும் நிறைவு நேரவில்லை.

சொல்லின் உண்மை- சொல்வோரின் பொய்மை, இதனால் சுடப்பட்டுச் சமீபத்தில் மிகவும் சலிப்புற்றிருந்த நேரம். வரிக்கொரு முறை "மாஸ்டர்" என்று குறிப்பிடும் கிஷோரின் வருகை. நேர வேண்டியதைக் கோரத் தெரியும் அகமனத்தின் உந்துதல். "அவர் புத்தங்களைக் கொடேன்" காலையில் சொன்னேன்; மாலைக்குள் கட்டாய்ப் புத்தகங்கள். அத்தனை சீக்கிரம்! மனம் மாறிவிடுமாம் அவசரத்தின் அவசியம்.

"MASTER C. V. V." என்ற சின்னச் சிவப்புப் புத்தகம்தான் முதலில் படியென்றது சிமிழுள்ளிறங்கிச் சிலிர்த்தேன்; சிப்பி, கடலாய்ச் சிரித்தது. சொன்னவர் செய்ததில்லை, செய்தவர் சொன்னதில்லை என்ற நிலைக்கு மாறாக, செய்தவர் சொன்னதைச் செய்திவர் சொன்ன வேதமிது. பழைய யோகம்; புதிய வேதம். யுகந்தோறும் கதிரவன் பழையவன்; கணந்தோறும் அவனொளி புதியதே!

நல்லவன் -கெட்டவன், நாத்திகம்-ஆத்திகம், சரி-தவறு போன்ற வெளிவாதங்களை அறவே தவிர்த்து, உடனடியாய் உள்ளிறங்கி, அமைப்பைச் சரி செய்வதால் ஆளைத் திருத்தி, ஆன்மா நிலைக்கும் அற்புத விஞ்ஞானத்தைக் கண்டேன்.

தேவை - மனதை ஒப்புவித்தல், நியமம் - இரண்டுவேளை எளிய பிரார்த்தனை, நிகழ்வு - வரிசை ஒழுங்கு, நேர்வது - விடுதலை! கர்மவினைப் பூச்சாண்டி, சட்டதிட்டக் களேபரம், கல்விக் குழப்பம், கடும் விரத அநாகரிகம் இவை எதுவும் கிடையாது. "தெரிந்தென்ன செய்யப் போகிறாய்," "இப்போதுனக்குப் புரியாது", போன்ற

மழுப்பல்களோ, சாக்குமூட்டைச் சாக்குப்போக்குகளோ இல்லை. விஞ்ஞானம்தான் பதில். பரிசோதித்துப் பார்த்துவிடலாம் இங்கேயே! இப்போதே! கண்ணன் - குசேலனில், கேட்டதார்? பெற்றதார்? இருளிலிருந்து ஒளிபோல், பேதத்திலிருந்து அபேதம்; எதையும் தள்ளாமல் ஏற்றுத் துலக்கும் ஒருங்கிணைப்பு இதுவே யோகம்.

இந்தப் புத்தகத்திலிருந்து இதைத்தான் நான் தெரிந்து கொண்டேன். இந்நூல் ஒரு முன்னுரைதான்: இதிலுள்ள யோக விஞ்ஞானத்தைப் பயின்றால், இதுவே முடிவுரைதான்.

ஆசான் சி.வி.வி.யின் யோக முறையை ஆசான் ஈ.கே. தெலுங்கில் எழுதினார். அதை, சகோதரர் திரு. கே. பார்வதிகுமார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இப்போது, தமிழில்! எனவே, இது மொழிபெயர்ப்பின் மொழி பெயர்ப்பு. விளக்கேற்றிய விளக்கு! மூலமும் அங்ஙனமே.

நூலைப் படித்ததும், மாஸ்டரைப் பார்க்க ஆவல். அவரை அறிந்த செல்வி இந்திராணி என்னுடன் பணிபுரிகிறார். அந்தப் பெண்ணின் உதவியால், ''மாஸ்டரின்'' நோக்கங்களைத் தற்போது செவ்வனே நிறைவேற்றி வரும் பீகேயை (பார்வதிகுமார்) மனைவி, குழந்தைகளுடன் சந்தித்தேன்.

கடலைப் பார்த்து மேற்தட்டில், இருவரும் அகம் திறந்தோம். மனம் கலந்தோம். வியக்கவைக்கும் அறிவு, வினவ முடியா அனுபவ ஞானம், வணங்கச் செய்யும் அடக்கம். இவற்றைக் காட்டிலும் அவரது காந்தமயமான அன்பே என்னைக் கவர்ந்தது. அகத்தே அமைதி வாய்த்து விட்டதால் ஆனந்தம் தேகமாகி, புறத்தே நிதானம், செயல் திறன், சாந்தம் இவை ஒளிவீசுகின்றன. கவர்தற்குரிய அவரது சுபாவத்தின் லேசுத் தன்மை விசித்ரமானது; சான்றாண்மையே அதன் அத்திவாரம்.

வாழ்வில், அவரது நுழைவால் எனக்குப் புதியபாதை, புதிய நம்பிக்கை; புதிய தெம்பு, ஒவ்வொரு சந்திப்பும் சம்பவங்களைச் சரித்திர மாக்குகிறது. இப்போதைக்கு அவரது சிநேகம்தான் நான் பற்றிக் கொண்ட சுட்டுவிரல்.

''ஜகத்குரு அற நிலையம் (World Teacher trust) என்ற அமைப்புக்கு அவர்தான் தலைவர். மாஸ்டர் ஈகேயின் புத்தகங்களைத் தக்கபடி அச்சிடுவதோடு மட்டுமின்றித் தானும் நிறைய எழுதுகிறார்; நிறைவாய்ப் பிரசங்கம் செய்கிறார், நிறையப் பேர்களின் நிம்மதிக்கு வழிகாட்டியாய் விளங்குகிறார். உள்ளும் வெளியும் ஓயாமல் பயணம் செய்கிறார்.

இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் இவர் பலரால், 'மாஸ்டரா'கவே மதிக்கப்படுகிறார்.

அவரது சங்கத்தால் யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம். இந்த மொழி பெயர்ப்புகள் தொடரும். இது எனக்கொரு வேலையன்று; என்னைச் சுத்திகரிக்க ஒரு வாய்ப்பு.

நூலைத் தந்துதவிய கிஷோர், பீகேயைச் சந்திக்க உதவிய இந்திராணி, எழுதுவதில் உதவிய என் மனைவி, தங்கை இவர்களோடு எனக்குத் தெரிந்தும் தெரியாமலும் என்னைத் தெரிந்தும் தெரியாமலும் என் உய்வுக்கு உதவிவரும் அனைவர்க்கும் என் நன்றி.

ஆசானுக்கிந்நூல் அர்ப்பணம். அகத்தியமாமுனி வகுத்த தமிழ் கூறும் நல்லுலகம் ஆன்மிகமேன்மை எய்துதல் நிச்சயம்,

விசாகப்பட்டினம் அன்புடன்
29-10-91 ரமணன்

பொருளடக்கம்

முதற் பகுதி

ஆசிரியரைப் பற்றி

''மாஸ்டர் ஈ. கே.'' என்று வழிபடப்படும் குலபதி திரு. எக்கிராலா கிருட்டிணமாச்சாரியார் நவயுகத்தின் ஆசிரியர், நலம் தரும் மூலிகை ; நவீனயோகி.

பொருள் - ஆன்மா என்று படைப்பைப் பேதம் செய்யும் போக்கைப் புறக்கணித்து, பொருள், ஆன்மாவின் மகவே என்பதைத் தெளிவாக்கினார். பொருளான உலகில் அருளான வாழ்வு வாழ்தல் சாத்தியம் என்று வாழ்ந்து காட்டினார்.

தன்னைப் பின்பற்றியோருக்குப் புராதன மறை நூல்களின் ஒருமையை வெளிச்சமாய்க் காட்டினார். அன்றுடவாழ்வில் அவற்றின் பயனை விளக்கினார். ஆன்மிக வாழ்வு நடத்த விரும்பியோர்க்குச் சமூகப் பொருளாதார ஆதாரம் அமைத்துத் தந்தார்.

தாய்மொழியான தெலுங்கு, வடமொழி, ஆங்கிலம் இவற்றில் விற்பன்னர். ஆசுகவி; அற்புதப் பேச்சாளர்; அள்ளக் குறையாத ஆன்மிகச் செல்வம் வழங்கிய அதிசய எழுத்தாளர்.

கிழக்குக்கும் மேற்குக்கும் ஆன்மிகப் பாலமிடக் கீழிறங்கி வந்த கீர்த்திமான். அண்டத்தை நிர்வகிக்கும் குருவரிசை, குறிப்பாய்க் கீழனுப்பிய பிரதிநிதி.

ஆனந்த மயம்; அன்பின் உரு; ஆசான்.

ஆசான் சி. வி. வி. (Master C.V.V.)
ஆசிரியர் முன்னுரை

உத்தேசம்

எளிய நடையில், எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடியமொழியில், நுணுக்கங்களைத் தவிர்த்து, ஆசான் சி.வி.வியின் வரலாறும், யோக விஞ்ஞானம் பற்றிய தொகுப்பு விளக்கமும் வெளிவரவேண்டும் என்பது சகோதரர்களின் உத்தேசம். இந்த உத்தேசத்தை, நான் ஆசானின் கட்டளையாகவே ஏற்றேன். ''வண்டி ஓடும் நிலையில் உள்ளபோதே பழுது பார்த்து விட வேண்டும்'' என்பது அவர் வாக்கு. அதற்கேற்ப, இந்தப் புத்தகம் இரவுகளில் எழுதப்பட்டு, பகல் நேரங்களில் அச்சிடப்பட்டது. இவ்விதம், ஆசான் தனது உத்தேசத்தையே நிறைவேற்றிக் கொண்டார்.

இந்தப் புத்தகம் ஆசானைப் பற்றியதாதலின், இது, அவருக்கே அர்ப்பணமாகிறது. அன்னாரது வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பற்றிய விவரங்களைத் தந்தமைக்காக சகோதரர்களுக்கு என் நன்றி.

எக்கிராலா கிருட்டினமாச்சார்யா

விசாகப்பட்டினம்
டிசம்பர் 22, 1977.

வாழ்க்கைச் சுருக்கம்

புனித நதிகள் கடலில் கலக்கப் போகும் வழியிலெல்லாம், மனித விடுதலைக்காகப் புண்ணியத் தலங்கள் தோன்றும்; அதனால் நதிகள் ஏற்றம்பெறும். கூர்ந்து கவனித்தால், நதிமுகங்கள் எளிமையாகவும், சாதாரணமாகவும், அமுக்கியமாகவும் தோன்றும். ஒரு மனிதனின் சாதாரணப் பார்வையில், அந்த இடத்திலிருந்து தோன்றும் நதியின் போக்கு, அது உருவாக்கும் ஈர்ப்பு சக்தியுள்ள ஆன்மீக நிலையங்கள், இவையெல்லாம் தோன்ருது. லட்சக்கணக்கான ஏக்கராவுக்குப் பாசனமும், கோடிக்கணக்கான மனிதர்களுக்கு வாழ்வும் கொடுக்கும் நதி, சில பாறைகளின் இடையில், ஒரு சிறிய ஊற்றி லிருந்து புறப்படுவது நம்பற்கரிதானதே. இது போலவே மகான்கள் தோன்றும் விதமும் எளிமையாகவும், சாதாரணமாகவும் பெரும் பாலும் அமுக்யமானதாகவும் இருக்கும். படிப்படியாய், காலச் செலவில் உள்ளொளி விரிந்து (இரண்டாம் பிறப்பில்) முடியும். மனித நன்மைக்காக அந்த ஒளி, தன்னையும் நிறுவிக் கொண்டு, கருவி யையும் (உடல்) ஆட்சி செய்யும். ஆராயுங்கால், ஆசான் சி. வி. வி. அவர்களின் வாழ்வினிலும், இது போன்ற நிகழ்ச்சிகளே வரிசையாய் நடக்கக் காண்கிரேும்.

ஆசான் சி. வி, வி, தமிழ்நாட்டின் திருத்தலங்களின் ஒன்றான கும்பகோணத்தில் 1868ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் நான்காம் தேதி பிறந்தார். தந்தையார் திரு. குப்புசாமி அய்யங்கார் தாயார் திருமதி காமம்மா. விஜயநகர மன்னர்கள் ஆண்ட காலத்தில், அவர்களது குடும்பம், ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிற்குக் குடி பெயர்ந்தது. நடுத்தர வர்க்கம்; நியோகி ப்ராம்மண வகுப்பு. பிறந்த பதிஞேரும் நாள் குழந்தைக்கு வீர வெங்கசாமி ராவ் என்று பெயர் சூட்டப் பட்டது. புத்த பகவானைப் போலவே, இந்தச் சிறுவனுக்கும் ஐந்தாம் வயதிலேயே, உபநயன (பூணூல்) உபதேசம் செய்யப் பட்டது. பொதுவாக, மேற்படி உபதேசம் ஏழாம் வயதில் தான் செய்ய வேண்டும் என்று சாத்திரங்கள் கூறும். ஆனால், உள்ளொளி மிகுந்த பிறவிக்கோ இது ஐந்தாம் வயதிலேயே நடந்தேறும்.

இதன் பிறகு, சிறுவன் அத்தை திருமதி கஞ்சுபதி சுப்பம் மாளுக்கு தத்து வழங்கப்பட்டான். அவனது ஆரம்பப் படிப்பு கும்பகோணத்திலும், மேற்படிப்பு திருவரங்கத்திலும் அத்தையின் தயவால், நடந்தது.

பன்னிரண்டாவது வயதில் வெங்கசாசிக்கும். ருக்மிணியம்மாளுக்கும் திருமணம் நடந்தது. அந்த நாள் அந்தணராய் இல்வாழ்வில் புகுந்த அவர், 18 வயதிற்குள் ஆங்கிலம், வடமொழி. தெலுங்கு இவற்றைக் கற்றதோடு, யோக சாதனையிலும், ஆத்மஞான விஞ்ஞானத்திலும் செம்மாந்து இருந்தார். அவரது 36ஆம் வயதிற்குள் மூன்று பிள்ளைகளுக்கும், மூன்று பெண்களுக்கும் தந்தையானார். அந்த நேரத்தில் ருக்மிணியம்மாள் மறைந்தார்.

தனது 38ஆம் வயதில், மத்தூரி குடும்பத்தைச் சேர்ந்த வெங்கம்மாளை அவர் திருமணம் செய்து கொண்டார். அன்னார் மூலம் அவருக்கு மூன்று பிள்ளைகளும், ஒரு பெண்ணும் பிறந்தனர். புறவாழ்க்கையைப் பொறுத்தமட்டில், முதல் மனைவியோடிருந்த காலம் கோலாகலமும் மகிழ்ச்சியுமாய்க் கழிந்தது. அந்நாளில் அவருக்கு சிற்றரசர்கள், ஜமீன்தார்கள் இவர்களோடு நெருங்கிய தொடர்பிருந்தது. அவர்களும், அவர்மேல் பெரும் மரியாதை வைத்திருந்தார்கள். அந்தக் காலகட்டத்தில், அவரது உள்ளொளி முகையவிழ முயலும் மலராய் மணம்வீசிக் கொண்டிருந்தது. தெய்வீக அனுபவங்கள், மகிழ்ச்சியான வாழ்வு. ஆழ்ந்த வசீகர சக்தி, ஈர்ப்பு, அஹிம்சை, பொறுமை - சினம், கவலை இவற்றால் இடறாத சமநிலை-என்று அவர் வாழ்க்கை திகழ்ந்தது.

ஆத்மாவில் ஒருங்கிய ஒளிப்பிறவிகள், அதாவது மகான்கள், காலத்திற்கும், தேவைக்கும், காணும்திறனுக்கும் ஏற்றபடியே அடையாளம் காணப்படுவார்கள். புறத்தே வெளிவரும் தேவை அதிகமாகும்போது, அதிசயம் நடைபெறும். அதுவரையில். அவ்வொளி, ஊரார் அறியாமலும், உடையேக்கு முழுநிலானு வழங்கும் வண்ணமாயும் இருக்கும்.

வெங்கம்மாளின் சேர்க்கையால்தான், மற்றவர்கள் ஆசானது உள்ளொளி, அன்பு இவற்றை அங்கீகரிக்க முடிந்தது. தான் ஆசான் நிலையை அடைய வெங்கம்மாளின் தோழமை காரணமாக இருந்தது என்று அவரே கூறி இருக்கிறார். எதிர்கால மரம் இன்றைய விதையில், காலத்தின் தயவில் விடப்படுகிறது. விதை சீராகவும் முழுமையாகவும் வளர நன்னிலம் துணை புரிகிறது. யோக வாழ்க்கைக்கு இல்லறம் தடையென்பது ஆதாரமற்ற முரட்டுவாதம். ஒரு மனிதனின் ஆன்மீக மேம்பாட்டுக்குப் பெண் பெருந்தடையென்பது, இடைக்காலத்தில் வந்த முட்டாள்தனமான சித்தாந்தமாகும். இந்தக் கருத்து, வேதங்களுக்கு மட்டுமல்லாமல், ராமர், கிருஷ்ணர், ராமகிருஷ்ண பரமஹம்சர் போன்ற பலரது வாழ்க்கைக்கும் வாக்குக்கும் முரணானதாகும்.

மனித சமுதாயத்தின் ஆன்மீகத் தோட்டத்தில் இப்படிப்பட்ட நச்சு எண்ணம் காட்டுச்செடி போல் வேரூன்றிப் பரவி விட்டது. இதை விடாப்பிடியாய்க் களையெடுத்தே தீரவேண்டும் உண்மையில், முழுமையான யோக சாதனைக்கு இல்லறம் அத்யாவச்யமானதாகும். ஆரிய தர்மத்தில் இந்த உண்மை சதுராஸ்ரமம் என்ற பெயரில் உறுதி செய்யப்படுகிறது. அதாவது, குழந்தை, வாலிபம், இல்லறம், முதுமை என்று மனிதவாழ்வின் முக்யமான நான்கு நிலையங்களைப் பற்றி அது குறிப்பிடுகிறது. யோக சாதனைக்கு, ஆதர்சமான குடும்ப வாழ்க்கை தேவை என்று ஸ்ரீவித்தையும் கோடிட்டுக் காட்டுகிறது. இந்த அம்சத்தின் முக்யத்துவம் வெங்கசாமி - வெங்கம்மா ஆதர்ச தாம்பத்யத்தில் வெளிப்படுகிறது.

உயர்வான ஆத்மாக்கள், ஆதர்ச பதிகளுக்குக் குழந்தைகளாக இறங்கி வருகின்றன. அப்படிப்பட்ட உயிர்களுக்கு உடல் கொடுப்பது உடலை உருவாக்கக் காரணமான பித்ருக்களுக்கு நன்றிக் கடன் செலுத்துவதாகும். பாலுணர்ச்சியை, இந்த நோக்கத்திற்கு மட்டுமே செயற்படுத்தும் மனிதன், யோகியென்று அழைக்கப்படுகிறான். திருமண வாழ்க்கை, உடலுறவை அனுபவிக்கமட்டுமே என்று கருதும் மனிதன் மிருகமாகிறான். முதற்குறிப்பிட்ட ஒழுங்கில் நடக்கும் மனிதன் ஆசானாகிறான். அதுபோல் பாலுணர்ச்சி தூக்கலாக இருக்கும் தம்பதிக்குப் பிறக்கும் குழந்தைகளும் அவ்விதமே இருப்பார்கள். சந்ததி தொடரவும், பித்ருக்களுக்கு நன்றி கூறும் பொருட்டும் இல்வாழ்வில் ஈடுபடும் இடங்களிலெல்லாம் உயர்வான ஆத்மாக்கள் ஈர்க்கப்படுகிறார்கள். மிருகங்களுக்கேற்ற தற்போதைய குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் மனிதனின் மிருக நிலையையே சுட்டுகின்றன.

மக்கட் செல்வத்திற்காகவே மணவாழ்க்கை என்பது வேதகால வாழ்வின் அடிப்படை. பல மனைவிகள் இருந்தும், குழந்தைகளுக்காகக் கண்ணன் தவம் செய்தாக ''ஹரிவம்ஸா'' கூறுகிறது. வேதவாழ்வின் அடிப்படையையே இக்கதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. மகாத்மாக்களின் வாழ்வை ஆராயுங்கால், இந்த அம்சம் தெளிவாய்ப் புலனாகும். இப்படிப்பட்ட பழமையான யோக நெறியில்தான் ஆசான் சி. வி. வி. தன்னுள் விரிந்து ஆசான் நிலையை அடைந்தார்.

இங்கே ''ஆசான்'' என்னும் சொல் பற்றிய சிறு விளக்கம் அவசியமாகிறது. அதன் ஆங்கிலப் பதமான ''மாஸ்டர்'' ஆன்மீகத்தில் 'தேர்ச்சியுற்றவன்', 'முதன்மையானவன்' என்று பொருள் படும். 19-20ஆம் நூற்றாண்டுகளில் அண்டங்களெங்கும் பிரும்ம

வித்தையை விநியோகித்த உயர்வான ஆத்மாக்களை, பிரும்ம ஞான சபை, ''மாஸ்டர்ஸ்'' என்று முக்கியமாய்க் குறிப்பிடும். ருசியாவில் பிறந்த தீக்கையரான பிளாவட்ஸ்கி அம்மையாரே இந்த ஆசான் (மாஸ்டர்) என்ற சொல்லை முதன் முறையாய்ப் பயன் படுத்தலானார். வெங்கம்மாள் - பிளாவட்ஸ்கி அம்மையார் ஆகியோரின் ஆத்மப் பண்புகளுக்கிடையே நிலவிய அபூர்வ ஒற்றுமையை, சில ஆன்மீக ஆர்வலர்கள் தெளிவாய்ப் புரிந்து கொண்டிருந்தார்கள்.

பரம்பொருளின் பொறியே பாமரன், புத்தி, மனம், பொறிகள், பிராணன், வெப்பம், காற்று, திரவம், திடம். இவையெல்லாம் அவனைச் சுற்றிக் கூடு வேய்கின்றன. நத்தை, தன்னிலிருந்தே தன் ஓட்டை அமைப்பது போல, தூல உடலும் அதன் தொடர்பான விசையும் (சக்தியும்) சிலந்தியிலிருந்து வலை போலே மனிதனிலிருந்தே வெளிப்படுகின்றன. இவ்விதம் உருவான தேகங்களின் சட்டதிட்டங் களினால், உள்மனிதன் தாற்காலிகமாய்த் தொலைந்து போகிறான். பரிமாணத்தின் போக்கில், மையமான பிரும்மத்தால் ஒவ்வொரு பாளமும் ஒளியூட்டப் படுகிறது. இது செப்புக் கம்பியில் மின்சாரம் பாய்வது போலாகும். இந்தப் போக்கு தொடருங்கால், ஆவியின் சக்தியால், மனிதனின் தனித்தன்மையும், தன்னிலையும் காந்தமேறி ஒளிமயமாகின்றன. உள்ளொளி விரிய விரிய இதுகாறும் மனிதனைக் காத்த தன்னியல்பு தன் பிடியைத் தளர்த்தி, அவனது சுதந்திரமான செயலுக்கு வாய்ப்பளிக்கிறது. இந்தச் செயற்போக்கு முழுமை யெய்தும் போது, உள்ளிருக்கும் ஆவி, எல்லாப் பாளங்களின் மூலமாகவும் ஒளி வீசுகிறது. இந்த நிலை எய்தியவரை 'ஆசான்' என்று பிரும்ம ஞான சபை குறிப்பிடுகிறது. உடல், மனம், பொறிகள்- இவை ஆசான்களின் ஆன்மாவில் எந்த பாதிப்பும் ஏற்படுத்தாது; சுற்றுப் புறமும் அவ்விதமே. சொல்லப் போனால், சூழலை அவர்கள் பாதிக்கிறார்கள். மற்றவர்களுடைய உணர்ச்சிகள், செய்கைகள், கடமைகள் இவைகளால் அவர்களிடம் எந்த விளைவும் கிடையாது. அடுத்தவர்களைப் பற்றி அவர்கள் அபிப்ராயங்களை வளர்ப்பதில்லை. ஆசைகளை நோக்காமல் தேவைகளை அனுசரித்தே அவர்கள மற்றவர் களோடு ஒத்துழைக்கிறார்கள். அவர்களிடம் எந்தப் பூசலும் இல்லை. அதுபோல், மற்றவர் பூசல்களில் அவர்கள் தலையிடுவதுமில்லை. யோக ஆனந்த அனுபவத்தில் மற்றவர்களை நிலைநிறுத்துவதே அவர்களது முதன்மையான நோக்கம். அவர்களது செயல் இந்த முடிவை நோக்கியே. விளக்கமளித்தல், விரிவுரை செய்தல். பிணி நீக்குதல், ஏற்ற ஆன்மீகப் பயிற்சிகளைத் தருதல் - இவ்விதமாக அவர்கள் உயிர்களுக்கு ஒத்தாசை செய்கிறார்கள். விவரங்களையும், விமர்சனங்களையும் அவர்கள் கவனமாய்ப் புறக்கணிக்கிறார்கள். தனது இருப்பால் இரும்பைக் கவரும் காந்தம்போல் ஆசான்கள்,

உயிர்களைக் காந்தப் படுத்தித் தரமாக்க முயல்கிறார்கள். அவ்விதம் செய்யுங்கால், எதுவுமே தெரியதவர்களுக்குக் கூட அவர்கள் எந்த உணர்ச்சித் தொந்தரவும் ஏற்படுத்துவதில்லை.

வெங்கம்மாளைத் திருமணம் செய்து கொண்டதிலிருந்து ஆசான் சி வி. வி. அவர்கள் உள்ளும், புறமும் உள்ள பொருள்களின் மீது படிப்படியாய் ஆளுமைப் பெற்றதோடு, சுற்றுப்புறச் சூழல் மீதும் செல்வாக்கோச்சத் தொடங்கினார். அம்மாளின் தொடர்பு அவருக்கு ஆத்ம ஊக்கங்களைத் தூண்டி விட்டது. சூக்கும, தூல சரீரங்களையும் அவற்றின் இயல்புகளைப் பற்றியும் அவருக்கு சுத்தமான அறிவு இருந்தது. அந்த அறிவின் மூலம் அவற்றின் மேல் ஆளுமையும் அடைந்தார். இவ்விதம் ஆளுமை அடைந்த பின்னால், அவர் முதலில் தனது மனைவியின் வாழ்க்கையில் காந்த சக்தியைச் செலுத்த முயற்சி செய்தார். தனது மனைவியின் தூல, சூக்குமச் சரீரங்களில் இணக்கத்தை ஏற்படுத்தி அவற்றை வரிசைப்படுத்தினார். அம்மை யாரின் தேகத்தின் ஒவ்வொரு பாளமும் தன்னிச்சையாய்ச் செயல் படும்படிச் செய்தார். அவர்களது ஆத்மாவை, எல்லாப் பாளங்களி லிருந்தும் விடுவித்து அதை ஒவ்வொரு பாளத்திலும் தனியே செயல் படும்படிச் செய்தார். இப்படி அந்த ஆத்மா ஒவ்வொரு பாளத்திலும் செயல்படும் போது அவர் அம்மையாரை அந்த அனுபவங்களை உரைக்கச் சொல்லி அந்த விஞ்ஞானத்தைக் குறித்து வைத்துக் கொண்டார். இதே விதமாகவே குண்டலினி அனுபவத்தையும், தனி மனிதன் மற்றும் பூமி இவை இரண்டுக்கும் பொதுவான குண்டலினி அனுபவம் பற்றிய சேதியையும் தருவித்துக் கொண்டார். மேலும், கோள்களின் குறுக்கு - நெடுக்கு அமைப்பு, அவற்றின் அசைவு பற்றிய சேதியையும் அவர் வரவழைத்தார். இந்தப் பரிமாண விஞ்ஞானத்தைச் செவ்வனே தெரிந்து கொண்ட பிறகு, மனிதனின் ஆன்மீக மலர்ச்சிக்கான தனது கடமையை நிறைவேற்றத் தொடங் கினார். இதன் விளைவாக 1910ஆம் ஆண்டு, பல அதீதமான, அசாதாரணமான அனுபவங்களைப் பெற்றார். சாதகர்களின் ஆர்வத்தைத் திருப்தி செய்ய வேண்டி, நான்கு அனுபவங்கள் மட்டும் இங்கே சுருக்கமாக விளக்கப்படுகின்றன.

அனுபவங்கள்

1910 ஆம் ஆண்டு வரை, ஆசான் பயின்று வந்த அதீதமான பயிற்சிகள் பற்றி யாருக்கும் தெரியாமல் இருந்தது. ஒரு நாள், நள்ளிரவில், பேரொளி ஒன்று மின்னல்போல் ஆசானின் வீட்டுக்குள் நுழைந்தது. அப்போது பூமியின் வழியில் இருந்த ஹேலி வால் நட்சத்திரத்தோடு தொடர்பானது அந்த ஒளி. பூமி, அந்த நட்சத்திரத்தின் வால் வழியே அப்போது சென்று கொண்டிருந்ததாக பிற்பாடு ஆசான் விளக்கினார். எனவே, வால் நட்சத்திரத்திலிருந்து ஓர் ஒளிக்கற்றை, கும்பகோணத்தில் இருந்த ஆசானின் அறைக்குள் நுழைந்தது! அந்த ஒளி பார்ப்பவர் கண்களெல்லாம் கூசும்படிச் செய்தது. மின்னல், இடியோடு ஆசான் வீட்டில் விழுந்தது போலிருந்தது. சுற்றியிருந்த மக்களெல்லாம் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டார்கள். வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருந்தவர்களோடு, அவர்களும் என்ன சேதம் விளைந்ததோ என்று எண்ணியபடி ஆசானின் வீட்டுக்குள் நுழைந்தனர். உள்ளே நுழைந்தால், ஆசான் ஆழ்ந்த தியானத்தில் இருப்பதைக் கண்டார்கள். தனது எதிர்காலப் பணிக்குப் பொறுப்பான புவியின் பரமஅணு அந்த இரவு தன்னோடு ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொண்டது என்று ஆசான் அவர்களுக்கு விளக்கினார். அந்த நேரத்திலிருந்து அவரைப் பார்த்தவர்கள், அவரோடு பேசினவர்கள், அவரது காந்த சக்தி மற்றும் புனித வசீகரத்தை வெளிச்சமாய்க் கண்டார்கள். ஒரு பகுதியினர், இதெல்லாம் அவரது தந்திர சாதனையின் சக்தி என்று கருதினர். வேறு சிலர் மக்களை அடக்குவதற்காக அவர் செய்யும் மந்திரவாதி வேலை என்று எண்ணினார்கள். சிலர் மாயாஜாலம் என்று கருதினார்கள். சிலரோ, அவரைக் கண்டு அஞ்சினார்கள்.

II

ஒரு நாள் அவர் ஆழ்ந்த த்யானத்தில் இருந்த போது இடிப்பது போல் ஒலி ஒன்று கிளம்பலாயிற்று. சுற்றியிருந்தவர்களால் அந்த ஒலி மூன்று நாட்கள் கேட்கப்பட்டது. முதலில் அவர்கள் இது ஆசானின் வீட்டில் ஏதோ அரவை யந்திரத்தினால் ஏற்படுகிறது என்று தவறாய்க் கருதிவிட்டார்கள். மக்களில் ஒரு பகுதினர் ஒலி அவரது இதயத் துடிப்பிலிருந்து வருவதாக எண்ணினார்கள். இது அவருக்குமிகவும் விபரீதமானது என்று கருதி, ஆசான்பால் அவர்கள்

இரக்கமுற்றார்கள். வெட்டவெளியின் ஒலி அதிர்வுகள் ஆசானின் திட்டத்தோடு ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்ளுகின்றன என்றும், அதனால்தான் இப்படி அசாதாரணமான ஒலிகள் தொடர்ந்து கேட்டன என்றும் அவர்கள் அறிந்து கொண்டார்கள்.

III

அந்த நாளில், ஆசான் தெருவில் நடக்கும் போது பார்ப்பவர்கள் அவருடைய தோற்றத்தில் மூழ்கி விடுவார்கள். சிலர் தங்கள் கையிலிருந்த வேலையை அடியோடு மறந்துவிட்டு அனிச்சையாக அவரையே உற்று நோக்குவார்கள். சிலர், பிரமை உற்றது போலாகி முழுதும் மௌனமாகி விடுவார்கள். ஆசான் அவர்களது பார்வை யிலிருந்து மறையும் வரை இவ்விதமாக அவர்கள் ஆழ்ந்த த்யான நிலையில் இருப்பார்கள். அவரது உருவம் மறைந்த பிறகுதான் இவர்கள் மீண்டும் தங்கள் உணர்வுக்கு வருவார்கள்.

IV

ஒரு நாள், த்யானத்தில் ஆசான் மூச்சை உள்ளிழுத்துக் கொண்டிருந்தார். அந்த உள்ளிழுத்தல், ஒரு நாசி துவாரத்தின் வழியே தொடர்ந்து ஆறு மணி நேரம் நடைபெற்றது. இரண்டாவது நாசித் துவாரத்தின் வழியே அதே போல் தொடர்ந்து அவர் ஆறு மணி நேரம் மூச்சை வெளியே விட்டார். மீண்டும் ஆறு மணி நேரத் திற்கு அவர் மூச்சேயின்றி இருந்தார்.

ஆசான், தனக்கு உள்ளிருந்து கிடைத்த திட்டத்திற்கேற்ப மற்றவர்க்குக் குண்டலினியைத் தூண்டி விட நல்ல நாளைத் தேர்ந் தெடுத்துக் கொள்வதுண்டு. மேலும் ஆர்வமுள்ளோரைக் குழுக்களாக அழைத்து, கூட்டுக் குண்டலினியை ஏற்பாடு செய்து அதைப் புவியின் குண்டலினியோடு வரிசைப்படுத்தினார். அதிலிருந்து சிலரை அவர் தனது செய்தியை வாங்கும் சாதனர்களாக ஏற்றுக் கொண்டார் (இங்கே சாதனர் என்பது ஆங்கிலப் பதமான 'medium' என்பதை குறிக்கின்றது.) இந்த உயிர்ப் பரிவர்த்தனை ஒழுங்காக நடக்கவும், அதற்கேற்பச் சுருதி சேர்த்துக் கொள்ளவும் ஆசான் "C. V. V." என்னும் யோக எழுத்துக்களைத் திறவுகோலாக அளித்தார். பூமியின் காந்த சக்தியோடு தொடர்புள்ள ஒலி அதிர்வு களைக் குறிப்பிட்ட வெளியில் ஏற்படுத்தவும், தூண்டவும், குறியீட்டால் இந்த மூன்று எழுத்துக்களை ஒலிச் சாவிகளாக நிறுவினார். 1910 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் தேதியே அந்தப் புனித நாள். அன்றி லிருந்து ஒவ்வொரு மே மாதம் 29 ஆம் தேதியும் கூட்டு உபதேசத் திற்கு உகந்த நாளாகக் கருதப்படுகிறது. அதை மே அழைப்பு தினம் என்றும் பரவலாக அழைப்பர். அன்றிலிருந்து ஆசானின்

சாதனர்கள் அவருடைய இருப்பைத் தங்களுள் தருவித்து அதை சி. வி. வி. என்று புனித எழுத்துக்கள் உபதேசம் பெற்றவர்களிடமும் அனுப்புவார்கள். சாதனர்களின் ஒத்துழைப்போடு ஆசான் தனது காரணசரீரத்தை வியாபகம் செய்து படிப்படியாக அதைப் புவியில் நிரந்தரமாக நிறுவினர். இவ்விதம் தனது காரணசரீரத்தை அமரம் செய்த பிறகு, 1922இல் தனது பூத உடலை விட்டு நீங்கினர். மிகச் சுலபமாகத் தனது புனிதத் திட்டத்தை நிறைவேற்றும் போது, தன்னேடிருந்தவர்களை மகிழ்விக்க வேண்டி சில அதிசயச் செயல்கள் அவர் செய்வதுண்டு. படிப்பவர், பயிற்சியாளர் இவரில் சிலரின் ஆர்வத்தை நிறைவேற்ற வேண்டி இங்கே மூன்று அதிசயச் செயல்கள் குறிப்பிடப்படுகின்றன.

அதிசயச் செயல்கள்

ஆசானின் திட்டத்தோடு தற்காலிகமாக ஒத்துழைப்பதற்காக சுயம்பிரகாசமான மகாத்மா ஒன்று வெங்கம்மாளின் கருவில் குழந்தையாய் உருவானது. ஆசானின் 41 ஆவது வயதில் அது அவருக்கு மகனுய்ப் பிறந்தது. குழந்தை வெங்கம்மாளின் கருவில் இருக்கும் போதே, ஆசான், தனது மனேவியைத் தயார் செய்த விதமாகவே, அந்தக் குழந்தையின் காரண சரீரத்தைத் தூலம் மற்று திட சரீரங்களிலிருந்து விடுவித்து அதைச் செம்மைப் படுத்தினர். இவ்விதமாக ஒன்பது மாதங்கள் உள்ளே வளர்ந்த அந்தக் குழந்தைக்கு 'சந்து' என்று பெயரிடப்பட்டது. ஆசானின் எண்ணப்படி அவரது புனிதமான திட்டம் நிறைவேறும் வரை அந்தக் குழந்தை தனது தூல சரீரத்தில் இருந்தது.

அந்தக் குழந்தையின் செயல்களும், அனுபவங்களும் சாதாரணக் குழந்தையுடையது போலத் தோன்றவில்லை. அது இரண்டு மாதக் குழந்தையாக ஆசானின் மடியில் இருந்த போது அவரது மோர்க் குவளையைத் தன்பால் இழுத்துக் கொண்டு வயிறு முட்ட மோரைக் குடித்துவிட்டது. அன்றிலிருந்து தந்தையும் மகனும் ரகசியமாக ஆசானின் அறையில் மோர் குடிக்கத் தொடங்கினார்கள். ஒருநாள் அந்தக் காரியத்தை வெங்கம்மாள் பார்த்துவிட்ட போது, அந்தக் குழந்தை ஒன்றும் தெரியாதது போல், மோர்க் குவளையை தந்தையிடம் தள்ளிவிட்டு மௌனமாகி விட்டது. அது நான்கு மாதக் குழந்தையாக இருந்த போது, உயிரின் ஏழு நிலைகள் பற்றிய அபிப்ராயங்களை ஆசானேடு சம்பாஷணை செய்தது. எந்தப் புதியவர் எப்போது வீட்டுக்கு வந்தாலும், அந்தக் குழந்தை ஆசானிடம் அந்த மனிதனின் கடந்தகாலச் செயல்கள், அதனல் நடந்த விளைவுகள் பற்றி உடனே கூறி விடும், இமாலயக் குகைகளில் வசித்து வந்த மகாத்மாக்கள்,

ஆசானைக் காண வருவார்கள். அவர்களுடனெல்லாம் அந்தக் குழந்தை உரையாடும். வீட்டில் இருந்தவர்கள், ஆசானின் அறையி லிருந்து பலவிதமானக் குரல்களைக் கேட்பதுண்டு, அவர்கள் சில நேரங்களில் அந்தக் குரல்களைக் கேட்டு அஞ்சுவதுண்டு. ஆறு மாதக் குழந்தை மூன்று வயதுக் குழந்தை போல் தோற்றமளித்தது. ஒரு முறை அது ஆசானிடம் தனக்கு M. T. A. (Matter, Time, Atom) பொருள், காலம், அணு) என்ற மந்திரத்தை 21 நாட்கள் உபதேசிக்கு மாறு கூறியது. 21ஆவது நாள் அந்தக் குழந்தைக்கு காக்காய் வலிப்பு தோன்றி அது இறந்து விட்டது. அன்னை, ஆசானிடம் தீவிரமாகப் பிரார்த்தனை செய்து குழந்தையை மீண்டும் உயிர்ப் பிக்குமாறு வேண்டினார். ஆசானோ அந்தக் குழந்தை பிறந்த நோக்கம் நிறைவேறி விட்டது என்றும், தனது மனைவியின் வேண்டு கோள் இயற்கைக்கு மாறானது என்றும் அறிந்திருந்தார். இருந்தும் குழந்தையின் மறைவால் மிகவும் துயருற்ற அன்னையின் திருப்திக்காக அவர் சிசுவின் ஆத்மாவை மீண்டும் அழைத்தார். அதுவும் மறுபடித் தனது உடலுள் புகுந்து கொண்டது, தன் அன்னையின் திருப்திக்காக. ஆயினும், மிகக் குறுகிய காலத்திலேயே தன் உடலை விட்டு விட்டது. மறுபடியும் அம்மையார் ஆசானிடம் குழந்தையை உயிர்ப்பிக்குமாறு வேண்டினார். இந்த முறை ஆசான் வெங்கம்மாளின் ஆன்மாவை தேகத்திலிருந்து பிரித்து அதைக் குழந்தையின் ஆன்மா இருக்கும் பாதையில் செலுத்தினார். வெங்கம்மாளின் ஆன்மா பயணம் செய்யும் நேரம் முழுவதும், ஆசான் அதற்கு குறிப்பால் உணர்த்தினார். அதை ஜாக்கிரதைப் படுத்தினார். அதை வழிப்படுத்தினார். செல்லும் வழியில் அம்மையாரை மாயை சூழ்ந்து "உன் மகன் மீண்டும் தேகத்திற்குத் திரும்பி விட்டான் எனவே நீயும் திரும்பிடுக" என்று யாரோ சொன்னது போல் ஒரு எண்ணம் ஏற்பட்டு விட்டது. வெகுளியான அம்மையாரின் ஆன்மா, உடனே திரும்பிச் செல்லும் பாதைக்கு வந்தது. ஆனால், ஆசானோ தந்திரத்தோடு தந்திரம் செய் (Trick the Trick) என்னும் மந்திரத்தை அவருக்கு உபதேசித்து மறுபடியும் அதை ஏறுமுகமாக ஏவினார். அந்த மந்திரத்தின் மூலம் அம்மையார் மாயைகளின் திரைகளைத் துளைத்துக் கொண்டு தனது குழந்தையை அடைந்தார். குழந்தையும் தனது அன்னையோடு தனது தேகத்தில் மீண்டும் புகுந்து கொண்டது. ஆனால் மறுபடியும் மிகக் குறுகிய காலத்திலேயே குழந்தை தனது உடலை விட்டு விட்டது. மறுபடியும் அன்னையின் வேண்டுகோளுக்கிணங்க ஆசான் அன்னையைக் குழந்தை யிடம் அனுப்பி அவரை மீட்டு வரச் செய்தார். நான்காவது முறையாக தனது தேகத்தை விட்டு நீங்கும் போது குழந்தை ஆசானிடம் சொன்னது; ஒரு காரியத்திற்காக வேண்டி நான் பிறந் தேன். அது பூர்த்தி ஆனதால் இந்த தேகத்திற்கான தேவையும்

முடிந்து விட்டது. இனியும் என்னால் இதிலிருக்க முடியாது. எனக்கு இறப்பில்லை என்று தெரிந்திருந்தும் நீங்கள் மாயை வசப்பட்டு என் தேகத்தோடு பந்தப்படுவானேன்! மேலும், இந்த ஆத்மா இனி இதில் தங்கியிருக்க வழியே இல்லாத அளவில் இந்த தேகத்தின் ப்ராண சக்தி காலச் செலவால் கரைந்து போய் விட்டது. அன்னைக்கு இந்த ஞானத்தை ஏற்படுத்தி அவர் துயருறும் மாயையிலிருந்து அவனை விடுவிப்பீராக" ஆசானும் புன்னகையோடு இந்த உத்தேசத்தை ஏற்றுக் கொண்டு வெங்கம்மாளின் ஆன்மாவுக்கு ஏற்றம் வழங்கினார்.

1911ஆம் ஆண்டில், ஆசானின் இரண்டு வயதுப் பேரன் விளையாடிக் கொண்டிருந்தபோது ஒரு ரப்பர் பொம்மையை விழுங்கி இறந்து போய் விட்டான். பெற்றோர்கள், குழந்தையை அவரிடம் கொண்டுவந்து, "அவன் உயிர் போய்விட்டதே" என்று அழுதார்கள். ஆசான், தொலையில் இருந்தே ஒரு சோதனையைச் செய்தார். அதன் மூலமாக குழந்தை தான் உண்டிருந்த உணவோடு அந்தப் பொம்மையையும் துகள் துகளாக வாந்தி யெடுத்து விட்டது. அங்கிருந்த உறவினர்கள் எல்லாம் அவரைக் கடவுள் என்று கொண்டாடிப் பாராட்டி வழிபட்டார்கள்.

ஒரு முறை, ஆசானின் அன்னையான சுப்பம்மாள் காவேரியில் நீராடச் சென்ற போது கரையிலேயே கீழே விழுந்து இறந்து விட்டார்கள். அங்கிருந்தவர்கள், வீட்டுக்கு உடலைக் கொண்டு வந்து சேர்த்தார்கள், உறவினர்கள், உடலை எரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யலானார்கள். ஆசான் குறிக்கிட்டுத் தான் அன்னையை மீண்டும் உயிர்ப்பிப்பதாகச் சொன்னார். உறவினர்களும் உடலைத் தங்களால் இயன்றவரை 16 நாட்கள் பாதுகாத்தார்கள். 16ஆவது நாள் தூக்கத்திலிருந்து எழுவது போல் ஆசானின் அன்னையார் எழுந்திருந்தார். அதன் பிறகு அவர் மூன்று வருடங்கள் உயிரோடியிருந்தார்.

இது போன்ற திடுக்கிடும் சம்பவங்கள் அவர் வாழ்க்கையில் ஏராளம். வெறும் பார்வையிலேயே ஆசான் ஒரு மனிதனின் முக்காலத்தையும் அறிந்து விடுவார். அன்னியர் யாரேனும் அவரை உபதேசத்திற்காக அணுகிய போதெல்லாம், ஆசான் தனது மனைவியையோ அல்லது சீடர்களில் ஒருவரையோ துயிலில் ஆழ்த்தி, சம்பந்தப்பட்ட நபர் பற்றிய முழு விவரங்களைத் தருவித்து விடுவார்.

ஆசான், ஒவ்வொரு கோளின் வரப்பிலும் சென்று, இருந்து, அதன் தொடர்பான விஞ்ஞான விஷயங்களைக் கொண்டு வருவார். அதேபோல் ஒவ்வொரு கோளுக்கும் உரிய மறைபொருளான ஒலிகள், எழுத்துக்களையும் அவர் கொணர்ந்து, குறித்து வைத்துக் கொண்டார். அவருடைய இறுதிக் காலத்தில் சனிக்கிரகம் பற்றிய பல விஷயங்களைக் கொண்டு வந்தார். அது பற்றி அவர் சொன்னதாவது; ''மனித இனத்திற்குக் கர்ம வினையினால் ஏற்பட்ட கலியை அகற்ற தற்போது சனி பணி செய்து கொண்டு வருகிறது. கர்ம வினையைச் சரிக்கட்டும் இந்தச் சிக்கலான கடுமையான சனியின் பணியை, மனித சமுதாயத்தின் மேன்மைக்காகவும், சனியின் பழியை அகற்றுவதற்காகவும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ''அது போல் அவர் வெள்ளிக் கோளின் வரம்புகளில் ஆழ்ந்திருந்த போது கூறியதாவது:'' மனிதர்களின் மேன்மைக்காக இந்தக் கோளின் அதிசயத்தை நான் ஆராயும் போதே என் தூல உடலை விட்டுநீங்குவேன். அதன் பிறகு என் சாதனர்கள் மூலம் என் ஆராய்ச்சியைமுழுமை செய்து, தேவையான செய்திகளைப் பரப்புவேன்'' என்றார், அவர் சொன்னது போல் வெள்ளியை ஆராயும் பணியில் அவர் இருந்த போதே பூத உடலை நீத்தார்

ஆசானின் யோகம்

யோக சாதனைக்காக. சீடர்களுக்குக் குறிப்பிட்ட மந்திரங்களை ஆசான் வழங்கினார். அவற்றில் பெரும்பகுதி ஆங்கிலத்தில் உள்ளன. ஒலி வலிமைக்குப் பெயர் போன வடமொழியை விட்டு விட்டு மந்திரங்களை ஆங்கிலத்தில் ஏன் அவர் அளித்தார் என்று பலருக்கு இன்னும் புரியாத புதிராகவே உள்ளது. ஒலி அதிர்வுகள் ஒரு மந்திரத்திற்கு அவசியமேயொழிய மொழியோ பொருளோ அன்று லய ஒழுங்குள்ள ஒலி அதிர்வுகளை ஏற்படுத்தி, ஒரு குரு, மந்திரத்தை எந்த மொழியில் வேண்டுமானாலும் அளிக்கலாம். ஓரளவுக்குப் பொருள் முக்கியமே ஒழிய மற்றபடி ஒலி அதிர்வுகளின் பாங்கே மந்திரத்திற்கு வலியுறுத்தப்படுகிறது. ஆசான் கொடுத்துள்ள மந்திரங்கள், நிச்சயமான பொருள் தொனிக்கும் இலக்கண சுத்தமான வரிகளல்ல. யோக சாதனையின் இலக்கை நோக்கி மனதை ஒத்துழைக்க வைக்க மந்திரத்தின் பொருள் உதவுகிறது. பொதுவாய், தெரிந்த பரிச்சயமான பொருள் மனதால் புறக்கணிக்கப்படுகிறது. பொருள் முழுதும் தெரிந்து விட்டால், பரிச்சயமாகிவிட்டால், அந்த மந்திரத்தில், மனதுக்கு அலட்சியமே ஏற்படுகிறது. அப்படிப்பட்ட மந்திரம், மனதின் ஒத்துழைப்பைக் கோர முடியாது. சற்றே தெரிந்தும், முற்றும் புரியாமலும் உள்ள மந்திரத்தின் பொருள்தான், ஆர்வமுள்ள மனதைத் தூண்டி, அதன் கவனத்தை மந்திரத்தின் பால் ஈர்க்கிறது. அர்த்தத்தைத் தேடி அலையும் மனம், மந்திரத்தில் திரும்பத் திரும்ப லயிக்கத் தொடங்குகிறது ஒலி வீரியங்களால் நேரும் அதிர்வுகளின் பாங்கில் ஆழ்ந்துவிடுகிறது. தெரிந்த நிலையிலிருந்து, ஒலி வீரியங்களால் நேரும் (இது காறும்) அறியாத அனுபவங்களில் பிரவேசிக்கிறது. அங்கிருந்து அது அழைத்துச் செல்லப்படும். அனுபவம், தனது இருப்பை ''நான் உளேன்'' (IAM) என்று அறிவதாகும். இவ்விதமாக, அறிந்தும் அறியாமலுமுள்ள தன்மையின் மூலமாகவே ஆசானின் மந்திரங்கள் ஆர்வமுள்ள மனதை அறியாததைத் தேடுவதில் தூண்டி ஒற்றை இருப்பு (ஏகாந்தம்) என்னும் அனுபவத்தில் சேர்க்கின்றன.

ஆங்கிலத்தில் மந்திரங்களை வழங்குவதில் இன்னொரு முக்கியத்துவமும் உண்டு. வரப்போகும் ஆண்டுகளில் பிரும்ம வித்தை ஆங்கிலத்தில் வெளிப்படும் என்றும், ஆங்கிலம் யோகிகளின் மொழியாகி விடும் என்றும் ஓர் ஆசான் குறியுரைத்துள்ளார். இந்தக் காரணங் கருதியே, முனிவர்களும், ஒலிக்குரிய தேவர்களும் முன்பு

வடமொழிக்குச் செய்தது போல் தற்போது ஆங்கிலத்திற்கான வழி முறைகளையும், வகைகளையும் செய்து வருகிறார்கள். இது காரணந் தொட்டே, ஆங்கில மொழியின் அசைகள், உலகெங்குமுள்ள ஆன்மீகர் களின் நியாயத்துக்கான அடையாளங்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டன.

ஆசான் அளித்த மந்திரங்கள் இரு வகையானவை (i) பிரார்த் தனைகள் (ii) வழிமுறைகள்.

வழிமுறைகள், குண்டலினி யோகப் பயிற்சிக்காகவும், நோயுற் றோரைக் குணப்படுத்தவும் ஏற்பட்டன. பிரார்த்தனைகள், மூலம் யோக அனுபவம் மெல்ல மெல்ல மலர்கிறது. அவையே போதும். ஆனால்,மனங்களின் ஆர்வத்திற்கேற்ப பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஆன்ம விடுதலைக்காய் எளிய பயிற்சி முறையை வழங்கினால், சிக்கலான மனித மனம் அதிருப்தியுற்று சிக்கல்களுக்காக ஏங்குகிறது! ரஜோ குணத்தால் நேரும் சாதனை உணர்வு அப்பியாசி களிடம் சகஜம்தான். அவ்விதமானோரின் ஆர்வமும், எதிர்பார்ப்பு களும் நிறைந்த மனங்களைத் திருப்தி செய்ய வேண்டி, விளையாட் டாகவே பல பயிற்சி முறைகளை அவைமூலம் அவர்கள் வெவ்வேறு யோக அனுபவங்கள் பெறும்படிச் செய்தார் ஆசான்.

ஆசான் சி.வி வி. வகுத்த யோக வழி ப்ருக்த ரஹித, தாரக, ராஜ யோகா என்று வழங்கப்படும். இதன் பொருள், சேர்ந்து போன முன்வினையை சரிக்கட்டும் ராஜயோகம் என்பதே! பொதுவாய், மனிதனின் வாழ்க்கை வினையின் நியதியைச் சார்ந்தே இருக்கிறது— விதைப்பதையே அறுக்கிறான். சேர்த்து வைத்த முன்வினை, அவன் நடந்து கொள்ளும் இயல்பாக, மனிதனுடன் சேர்ந்தே வாழ்வதோடு, அவனது மனம், செயல்கள், பேச்சு, அனைத்தையும் தூண்டுகிறது. யோகியைத் தவிர, ஒவ்வொரு மனிதனும், தனது தனிப்பட்ட (நடத்தை) இயல்புக்குக் கட்டுப்பட்டவனே. ஒவ்வொரு மனிதனும், விடுதலை பெறுமுன், தனது கடந்த காலச் செயல்களின் விளைவுகளி லிருந்து தப்பவே முடியாதென்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால், ஆசான் வாக்களித்திருக்கிறார்: ''எவனொருவன் என்னிடம் தன்னை ஒப்புவித்து, நான் பிரேரித்தபடி யோகம் பயில்கிறானோ, அவனது முன்வினை நீக்கப்பட்டு, அதனால் அவன் விடுவிக்கப்படுவான். முன்வினை நீக்கம் பெற, ஒருவன் அவற்றின் விளைவுகளை அனுபவித்தே தீர வேண்டிய அவசியமில்லை.'' அவரது (யோகத்தின்) இந்தப் புதிய முறை போதும். முறை புதிது; ஆனால் யோகம் புராதனமானதும் வழி வழி வந்ததுமான ஒரே ஒன்றுதான்.

நாம் காணும் படைப்பு, அசையும், அசையாப்பொருள்களின் தொகுப்பு. அவையாவும் அணுக்களாலே வடிவாயின. அடிநாதமாய் அவற்றில் செயல்படுவது ஒரு சக்தியே. அதனது மூலம், நிரந்தரமான சாரமாகிய ''உணர்வு'' அல்லது ''பிரக்ஞை'' என்பதாகும், எனவே, அணுப்படைப்பு, சக்தி, பகுதி உணர்வு—இவை படைப்பின் மூன்று முக்கியமான அம்சங்களாகும். இந்த மூன்று அம்சங்களும் தோன்றி நிலவி மறுபடிக் கரைந்து விடும் அந்தப் பொதுவான சாரமே அத்தன், கடவுள் பரம்பொருள் என்று பலவிதமாய் அழைக்கப்படுகிறது. ஒரே உணர்வை, மூன்று அம்சங்களாய் மாற்றுவது புனித இயல்பே. இந்த இயல்பே உணர்வை மூன்று இயற்கைப் பண்புகளாக இறக்குகிறது. மனம், புத்தி, நான் எனும் உணர்வு - மற்றும் பிராணன், அணுக்கள். இந்த அணுக்களே காலக் கிரமத்தில் ஜடப் பொருள்களாய் மாறுகின்றன. ஜடத்தின் கலவையே தாவரம், பிராணி, மனிதன் இவற்றின் உடல்களையும் வடிவங்களையும் ஏற்படுத்துகிறது. இதன்படி, எல்லா மாற்றங்களுக்கும், வளர்ச்சிக்கும் இயற்கையே காரணமாகிறது. மனித உடலில் மேலான நிலையை எய்தும் இந்த இயற்கையான சக்தியே குண்டலினி என்று பெரியோரால் அழைக்கப்படுகிறது. யோகத்தின் பல பிரிவினரும் இந்தக் குண்டலினியை எழுப்பவே முயற்சி செய்கிறார்கள். உணவில் கட்டுப்பாடு, பயிற்சிகள், ஆசனங்கள் போன்றவற்றால் உடலின் திசுக்களைத் தூய்மை செய்து குண்டலினியைத் தூண்டுகிறார்கள். இது ஹடயோகம். இதற்கான வேதமுறை மந்திரத்தை உச்சரித்தல் மனதை, உச்சரிப்புடன் ஒருங்கிணைத்து மூச்சு நெறியின் மூலம் அதை இதயத்தில் மூழ்க வைப்பது. அங்கே, பயில்வோன் மீண்டும் பிறக்கிறான்-அன்பின் அவதாரமாக.

குருவின் அருளால், மனம், புத்தி, சித்தம், பொறிகள் மற்றும் மனதின் ஒவ்வோர் அசைவையும் மாற்றி, ''நான்'' உணர்வில் கொண்டு வந்து அங்கேயே லயித்திருப்பதே கண்ணன் காட்டிய வழி. யோகத்தின் எட்டுப் படிகளில் ஏறி வருவது பதஞ்சலி முனியின் மார்க்கம். இவை, குறிப்பிடத்தக்க பிரதானமான வழிகள். இன்னும் பல உபரி வழிகளும் உள்ளன. கவனமாய்ப் புரிந்து கொண்டால், அவை மாறுபட்ட வழிகளல்ல; ஒரே யோகத்தைப் பயிலும் ஒருவன் கடந்து செல்லும் நிலைகளென்பது புலனாகும். அந்த நிலைகள் கர்மயோகம் (செயல்) ஞானயோகம் (அறிவு) பக்தி யோகம் (அன்பு) என்று பெயர் பூணும். அறிவில்லாதவர்கள் அவற்றை வெவ்வேறு யோகங்கள் என்று தவறாய்க் கருதி, அவற்றில் சில பகுதிகளை ஆவேசமாய்ப் பயின்று மற்றப் பகுதிகளை அறவே ஒதுக்கி விடுகிறார்கள். அவர்களது முயற்சிகள் வீணே. பகவத் கீதை, இந்த எல்லாப் பகுதி

களையும் கூட்டாய்த் தொகுத்து ஓர் அப்யாசி, யோக சாதனை மூலமாகக் கடக்க வேண்டிய நிலைகளைத் தருகிறது. இந்தத் தொகுப்பின் உண்மையைப் புரிந்து கொள்ளும் பொறுமையில்லாத பலர், கீதை ஒரே முரண்பாட்டு மயமாயிருக்கிறது என்று விமர்சனம்வேறு செய்கிறார்கள். அவர்கள் ஜனன மரணச் சக்கரத்திலிருந்து விடுபடாமல் ஊனமடைகிறார்கள். அதில் சிலர், ஆசான் சி வி வி.யின் யோகத்தை விரும்பினார்கள். அங்கேயும் கூட, அவற்றில் பெரும்பாலானோர் அன்னாரது யோகம் தனியானது. மற்றவற்றைக் காட்டினும் மேலானது என்னும் மாயையால் உந்தப் பட்டார்கள். ஆசானின் யோகம் மற்றவற்றிலிருந்து எப்படி வித்யாசமானது என்பதை நிரூபிக்கும் முயற்சியில் அவர்கள், யோகத் திலிருந்து விலகினார்கள்!

ஆசான் சி.வி.வி. பலவிதமான யோக மாணக்கர்களுக்கு இடையே ஒற்றுமைத் தத்துவம் நிறுவ வேண்டி தனது ''உணர்வை'' இன்னும் பரப்பி வருகிறார். ஆசான்களைப் பொறுத்த மட்டில் வெவ்வேறு யோகங்கள் கிடையாது. யோகம் என்பது ஒன்றே. இருமை என்னும் சகதியில் இறங்குவதல்ல. ரஜோகுணத் தமோ குணத் தூண்டுதலால், அறிவிலார், யோகம் பற்றி, இதுவே தனியானது, அதுவே மேலானது என்பதெல்லாம் வெறும் கூற்றே.

ஆசான் உரைத்தது போல், ''விளக்கங்களாலும், விரிவுரை களாலும் ஆன்ம அனுபவம் பெற முடியாது.'' அப்யாசிகள் தமது பலங்கள், பலவீனங்களோடு தாம் ஆசானின் உணர்வுக்குப் பணிய வேண்டும். அவ்வொளியில் உள்வட்ட உறுப்பினர்கள், வெளிவட்ட உறுப்பினர்கள், அறிவிலாப் பாமரர்கள் என்றெல்லாம் பிரித்துக் காணும் நோய் நீங்கும். ஆசான், யோகம் வழங்கியது ''எல்லாம் ஒன்றில்; ஒன்றே எதிலும்'' என்னும் ஒற்றைப் பொது உணர்வை அடைவதற்கே. தான் மற்றவர்களிலிருந்து தனிப்பட்ட ''ஆன் மீகன்'' என்று ஒருவன் தன்னைக் கருதிக் கொள்வதற்காகவல்ல.

உடல், மனம், ஆவி இவற்றை வரிசை செய்து, ஒருங்கிணைத்து, அதன் மூலம் தேகத்தின் ஒவ்வோர் அணுவையும் செம்மைப்படுத்து வதே ஆசானின் ஒற்றுமை யோகம். தனித்துவம், பிரிவுணர்வு மற்றும் பிறப்பிறப்பால் நேர்ந்த நிபந்தனை நிலைகள் இவற்றிலிருந்து மனித உடலிலேயேயுள்ள குண்டலினியைத் தூண்டுவதன் மூலம் அமர நிலைக்கு அழைத்துச் செல்வதே ஆசானின் யோகம். அவ்விதமெழுந்த குண்டலினி, பிரபஞ்சக் குண்டலினியோடு தான் ஒத்திருப்பதைக் காண்பதால் அப்யாசி உடலிலுள்ள போதே அமர நிலை எய்துகிறான். பரிணாமத்திற்கும், தாவர, பிராணி. மனிதக் கருவிகளின் விருத்

திக்கும், ஞானத்தை மூடியிருக்கும் மனப் பாளங்கள் மலரவும், இருப்பின் வியாபகத்திற்கும், ''நான்'' என்னும் இருப்பின் அனுப வத்தின் மலர்ச்சிக்கும், துளியிலும் தொகையிலும் நடக்கும் பிரபஞ்ச நாடகத்திற்கும் - எந்தக் குண்டலினி காரணமோ, அதே குண்டலி னியைத்தான் செம்மையான யோக சாதனைக்கு, யோக அனுபவத் திற்கும் உரிய முக்கிய சாதனமாகக் கொண்டார்.

இந்தக் குண்டலினியின் ஒத்துழைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும்? பண்டைக் காலம் தொட்டே முனிவர்கள் இதற்கான பல வழிகளைக் கண்டார்கள். விஞ்ஞானிகளும் பக்கம் பக்கமாக எழுதிக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். மந்திரம், தந்திரம், மூச்சுப் பயிற்சி, ஆசனங்கள் மூலமாகக் குண்டலினியைத் தூண்ட சிலர் முயற்சித் தார்கள். இன்னும் சிலர், மூலிகை மருந்துகள் மூலம் குண்டலினி யைக் கிளப்பி உடலிலுள்ள ஆறு சக்கரங்களையும் தகர்க்க முயன் றார்கள். வேறு சிலரோ, நாம சங்கீர்த்தனத்தின் மூலமாக மனதை ஆன்மாவில் லயிப்பித்து குண்டலினியின் சக்தியால் உணர்வு நிலையை அடையத் தலைப்பட்டார்கள். எது செய்தாலும், அன்றிலிருந்து இன்றுவரை மேலானதும் செம்மையானதுமான யோக நிலையை அடைவது, பலருக்கு அவிழாத புதிராகவே இருந்து வருகிறது. அடைந்தவர்கள், மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். அவர் களில் ஒரு சிலரால்தான் வழிகாட்ட முடிகிறது. ஆனால், வழி யின்றியோ கற்றுக்குட்டிகள் அடைய முடியாது. இந்த இருவர்க் கிடையே ஒத்துழைப்பும் பாங்கும் ஏற்படுவது ஆசானின் அருளினால். மட்டுமே விளையும் இந்த அருள், சட்டத்திட்டங்களுக்கும் காலவெளிக் கும் அப்பாற்பட்டது. அருள், உருவானால் அவ்விதம் ஆனது தெரி கிறது. ஆனால், அது உருவாகும் முன்னால், இன்ன இடத்தில், இன்னாரில் உருவாகப் போகிறது என்பதை யாரும் அறியார். அருள் நிகழ்வதற்கான நிபந்தனைகளை யாராலும் விளக்க முடியாது. இந்த அம்சத்தை, ஆசான் மிக உறுதியாகச் சொல்லி இருக்கிறார். பரம்பொருள் நிலையை எய்திய பின்பு, ஆசான் தம் மோடே தங்க முடிவெடுத்தார். இது, விளக்க முடியாத மேலான நிலையிலிருந்து குண்டலினியை அவரால் சீடர்களுக்கு அலைபரப்ப உதவியாயிருந்தது. சாதனையின் போது, பயிற்சியாளர்கள் என்னதான் தன்னிச்சையாயிருந்தாலும், பேறடைவது என்பது ஆசானின் அருளை நம்பியே இருக்கின்றது. எனவே தான் ஆசான், யோக சாதனையோடு தொடர்புள்ள சட்டங்கள், கட்டுப்பாடுகளைக் களைந்து, பயிற்சியை நேரானதாய், எளிமையானதாய், பயிலத்தக்க தாய் ஆக்கினார்.

சாதனையில், சட்டத்திட்டங்களுக்கு முக்யமான இடம் உண்டென் றாலும், அவற்றால் நேரும் சடங்குகளில் பயிற்சியின் ஜீவன் மடிந்து

விடக் கூடாதென்று அவர் கருதினர். பயிற்சியாளருக்குக் குண்டலியின் ஒத்துழைப்பு, அவரால் வழங்கப்படுகிறது. எனவே, ஆசானைப் பணிந்து, தேகத்திலிருக்கும் போதே அமரநிலை எய்தலாம்.

படைப்பு, நிபந்தனைக்குட்பட்ட தோற்றமென்றும், அதிலிருந்து தப்பிப்பதே முக்தி என்றும் பரவலாய் நிலவிய கருத்தை அவர் அடியோடு களைந்தார். பரம்பொருளிலிருந்து தோன்றும் சக்தியே-அதாவது பிரபஞ்ச சாரமே குண்டலினி அந்த சாரத்தின் மலர்ச்சியே படைப்பு. அணுவிலிருந்து அண்டமாய் விரிந்து, அண்டம் அணுவில் ஒடுங்குவது குண்டலினி சக்தியின் கம்பீரமான விளையாட்டு அதனுடைய வட்டச்சுற்றில், ஆன்மாக்கள் பொறிகளாய்த் தோன்றி நிலவி அதனுள்ளேயே கலந்து விடுகின்றன. இந்த உட்பாடு—வெளிப்பாட்டில் ஓர் ஒழுங்கு இருக்கிறது. இதை ஏற்பதும் மறுப்பதுமான திறன் மனித மனத்திற்கு உண்டு. மறுப்பு, துயரமாய் அனுபவிக்கப்படுகிறது. இந்த இயல்புக்காக ஒழுங்கையும், அதன் நியதிகளையும் ஏற்றால், படிப்படியாய் மனம் மலர்ந்து, யோகானந்த நிலை கிடைக்கிறது. எனவே, இயற்கையின் சக்தியோடு ஒத்துழைப்பதல்லாமல், வேறெந்த விதமாகவும் யோகநிலை எய்த முடியாது.

ஆசான் வழங்கிய யோக வழியில், தனிப்பட்ட சுய விடுதலைக்குரிய யோகப் பயிற்சிக்கு இடமில்லை. ஆன்மீக சகோதரத்துவத்தை அடைய வழிமுறைகள் வழங்கப்படுகின்றன. உடல் நலக் கோளாறு, பணத்தொல்லை, மேம்பாட்டில் தடைகள் போன்ற இடர்களெல்லாம் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்டு, குழுவே மொத்தமாய் முன்னேறுகிறது. பகிர்ந்து கொள்ளப்படுவதால், தாங்க முடியாத துன்பங்களும் லேசாகி விடுகின்றன. அதுபோல், தேர்ந்த சீடனின் ஆனந்த நிலையும் குழுவிலுள்ள மற்றவரின் பண்பு உணர்ச்சிக்காக விநியோகிக்கப்படுகிறது.

ஆட்களின் மன உறுதியைப் பொறுத்தே, அவர்கள் அடைந்த ஆன்மீகப் பக்குவத்திற்கேற்பவே சாதாரண குருமார்களால் உபதேசங்கள் செய்யப்படுகின்றன. மனஉறுதி உள்ள ஒருவனுக்குச் குரு தேவையில்லை என்பது போல்! ஆனால், ஆசான் சி.வி.வி.யின் வழியிலோ, மனதை ஆசானுக்கு ஒப்படைத்தலே முறை. மனதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பெதுவும் அப்பியாசிக்கில்லை. ஆசானின் பிரார்த்தனை முறையில், ஏதேனும் ஒரு எண்ணம், உருவம், மந்திரம் இவற்றில் ஒருநிலைப்படுத்துகிறேன் பேர்வழியென்று மனதைச் சிறைப்படுத்துதல் கிடையாது. மெலிதாய் விழிகளை மூடி, ஆசானின் பெயரை மூன்று முறை சொல்லி,

மனதைக் கொடுத்துவிட வேண்டும். அதன் பிறகு என்ன எண்ணங்கள் விளைந்தாலும், அவற்றைத் தடை செய்யக் கூடாது. மிகக் குறுகிய காலத்திலேயே, உடலில் மெல்லியதாய் ஒரு மின்சார ஓட்டம் நேரும். மின்சார மயமான பிராண சரீரத்தை, அது ஒளி செய்கிறது. கடந்த கால, நிகழ்கால நடத்தைகளின் விளைவாய் பிராணனில் அடைப் பெதுவும் இருக்குமானால், அவை மெல்ல மெல்லச் சரியாக்கப்படும். தீர்க்க முடியாத நோய்களும் அவ்விதமே வழிவிட்டு ஒளி வீசுவதன் மூலம் உடல் நலம் நிறுவப் பெறும். தூல உடலென்பது அணுக்களின் தொகுதியே. அவை உயிரதிர்வுகளின் நேர்த்தியான நெசவே! பிராண நடப்பைச் சுத்தம் செய்வதால் அணுக்களும் சுத்தமாகின்றன. அதனால், அவற்றால் ஆன தூல சரீரமும் தானாகவே சுத்தமடைந்து நலம் பெறுகிறது. இவ்விதமாக பிரார்த்தனையால் சூட்சும சரீரம் சுத்தியும் நலமும் அடைகிறது. ஆசானின் அருளால், அவரிடமிருந்து வரும் மெல்லிய மின்னோட்டத்தால் சூட்சும சரீரம் அமரத்வமடைந்து கணக்கிட முடியாக் காலம் முழுவதும் நிற்கிறது. கீழ் நிலைகளிலிருந்து விடுபட்டு, மனம், ஆசானின் உணர்வால் நிறைகிறது. பிறகு மனம், மனோதிடம் (WILL) மற்றும் மேல் நிலைகளான அன்பு, ஒளி இவற்றோடு தொடர்பு நேர் செய்யப்படுகிறது. அதாவது, உயிரின் எல்லாத் தளங்களிலும் ஒழுங்கு பூர்த்தியாகி, அவை எல்லாவற்றிலும் உணர்வு, வெள்ளமாய்ப் பாய்கிறது.

இந்த யோகத்தில், ஓர் அப்யாசியின் எல்லாக் கருவிகளிலும் இணக்கம், பிரார்த்தனையின் மூலமாகவே நடைபெறுகிறது. தூல, சூக்கும, மனோ நிலையங்கள், சமமான முறையில் தூய்மையும், ஒளியும் பெறுகின்றன. குண்டலினியால் வாதையோ துள்ளலோ இல்லை. அளவுக்கு மீறிச் செய்தாலும், இணக்கமென்பது தேவைக் கேற்பவே நடைபெறுகிறது. அவனது பரிணாம வளர்ச்சிக்கேற்ப, அப்பியாசி, பிரார்த்தனையின் மூலம் தேவையான தூண்டுதல் பெறுகிறான், வேறெதற்கும் சாத்தியமில்லை இதில் பட்டினி கிடத்தல், மதம், பரம்பரை வழக்கம் என்ற பெயரால் கடைப்பிடிக்கப்படும் கடும் விரதங்கள் இவை அவசியமாய்க் கருதப்படவில்லை. உட்புறத் தூய்மை, தற்கட்டுப்பாடு இவை அத்யாவசியமானதால் தவிர்க்க முடியாது. புறத்தூய்மை பிரார்த்தனைக்குத் தேவையில்லை என்பது அசுத்தமான வாதம். குளிக்க வாய்ப்பில்லை யென்றால், பிரார்த் தனையைத் தவிர்க்க வேண்டாம் தான். அதற்காக, பிரார்த்தனைக்குக் குளியலே அவசியமில்லை என்று பொருள்கொள்ளக் கூடாது. (சோம்பலும் உக்கிரமும் கொண்டவர்களால் ஆசானின் கூற்றுகள் தவறாய்ப் புரிந்து கொள்ளப்பட்டு தவறான விளக்கங்களும் நேர்ந்து விட்டன). அதே சமயம், தீவிரமான மதச்சடங்குகளால் நேரும் அழிவான உழைப்புக்கும் இடமே இல்லை. பயங்கரமான பயிற்சிகளால்

உள்ளிருக்கும் உயிரை வருத்துவோர் தலையற்ற மூடர்கள் என்று கண்ணன் கீதையில் சொல்கிறார்.

பிரார்த்தனைக்கு முன்னால் எதுவும் உண்ணவோ, அருந்தவோ கூடாது, என்பது மனிதனே ஏற்படுத்திக் கொண்ட விதியே ஒழியே, அது ஒரு தெய்வீக ஒழுங்காய் ஆகாது. எல்லா உயிர்களுக்கும் தந்தையான இறைவன், தனது குழந்தைகள் பிரார்த்தனைக்கு முன்னால் ஏதாவது உண்டு விட்டால் தொந்தரவோ, கோபமோ, அதிருப்தியோ அடைவதில்லை! தான் கொடுத்த யோக வழியைப் பயிலும் எவனும் பிரார்த்தனைக்கு முன் தனது உடல்நிலைக்கு ஏற்ப சிறிதளவேனும் உண்ண வேண்டும் என்பது ஆசானின் யோசனை. "பசித்த வயிற்றோடு தியானிப்பவன், அளவுக்கு மீறி உண்பவன், சோம்பேறி, பட்டினி கிடப்பவன் தூங்கு மூஞ்சி, முறையாய்த் தூங்காதவன் இவர்களுக்கு யோகம் இல்லை. எவன் ஒருவன் அடக்கமுடன் உழைக்கிறானோ, இயற்கை விதிப்படி ஓய்வெடுக்கிறானோ, அவனே யோகியாகத் தகுதி பெற்றவன்." என்று கண்ணபிரான் கூறுகிறான். பிராணயாமம் செய்வதற்குமுன் சிறிதளவு நீராவது உட்கொள்ள வேண்டும் என்று வேதமுறையும் விதிக்கிறது.

ஒரு முறை கும்பகோணத்தில், ஆசானைப் பின்பற்றும் சிலர் தியானத்திற்காக அமர்ந்தார்கள். அதில் சிலர் சிறிதளவு உண்டிருந் தார்கள். சிலரோ எதுவுமே உண்ணவில்லை. பிரார்த்தனைக்குப் பிறகு உண்ணாதவர்கள் கடும் பசியால் அவதியுற்றார்கள். உண்ட வர்களோ சாதரணமாக இருந்தார்கள். இன்னொரு முறை தனது முன்னிலையில் சீடர்கள் தியானம் செய்யும்போது, உண்பவர்களிட மிருந்து, உண்ணாதவர்களுக்கு உணவை ஆசான்செலுத்தி எல்லோரும் பயனுறுமாறு செய்தார். அவர் அளிக்கும் இட்டிலியையும், காப்பியையும் ஏற்காதவரை அவருடைய ஆச்ரமத்தில் பிரார்த்தனை செய்ய அவர் அனுமதித்ததே இல்லை. துரதிஷ்டவசமாக இன்று கூடச் சிலர் அவருடன் ஒத்துப் போவ தில்லை. வேறு சிலருக்கோ பிரார்த்தனை என்றாலே விருந்து மயம் என்று பொருள், இவை இரண்டுக்கும் இடையே முறையான ஒரு நிலையே யோகம்.

வெங்காயம் உண்ணலாமா கூடாதா என்பது போன்ற விஷயங் களில் விதிமுறை ஏற்படுத்த ஆசானுக்கு நேரம் இருந்ததில்லை, எண்ணெய்யின் தூய்மையைப் பொறுத்தே விளக்கின் பிரகாசம் இருப்பது போல் மனஉறுதி, உணவின் தூய்மையைச் சார்ந்தே அமைகிறது ஆசானின் பொன்னான நேரம், இது போன்ற சில்லறை விஷயங்களுக்காக வீணாக கூடாது. இந்த உணவுதான் சிறந்தது,

இந்த உணவு லாயக்கற்றது என்று பொதுவான விதியெதுவுமில்லை. ஒவ்வொருவரும் தத்தம் உழைப்பு, உடற்கூட்டின் விநோதங்கள், இவற்றிற்கு ஏற்ப தனக்குந்த உணவைத்தான் தேடிக் கொள்ள வேண்டும். எனினும், ''யோகம் பயில்வோர் புதிய, சாறுள்ள எளிதில் செரிமானமாகும் உணவைத் தேர்ந்து, பதப்படுத்தப்பட்ட, பழையதான, வீரியம் மிக்க, காரமான வறுத்த உணவுகளைத் தவிர்த்து விட வேண்டும்'' என்கிருர் கண்ணபிரான். இப்பேர்ப்பட்ட கட்டளைகளை மனத்தில் கொண்டு ஒவ்வொருவரும் தனது உணவு வழக்கத்தைத் தகுந்தவாறு கடைப்பிடிக்க வேண்டும். நமது விருப்பு வெறுப்புகளை ஆசான் மேல் செலுத்துவதில் ஒரு பயனுமில்லை.

ஆசானின் யோக வெளிப்பாடு

ஆசான் சி.வி.வி. தான் இந்த பூமிக்குக் கொண்டு வந்த யோக முறையை மற்றவர் அனுபவிக்கவும், பரப்பவும் வேண்டி சிலரை இந்த வழியில் முதல் நிலையில் உபதேசித்தார். இவர்கள் சாதனர்கள் (Mediums) என்று அழைக்கப்படுவர். ஆசான் சி.வி.வி. தூல உடலில் வாழ்ந்த காலத்தில் நூற்றுக்கணக்கான சாதனர்கள் தயார் செய்யப்பட்டார்கள். இந்தத் தொகை ஓராயிரத்தைத் தொட வேண்டும் என்றும், அவர்கள் மூலம் யோகானுபவம் இந்தப் புவியில் நிறுவப்படும் என்றும் ஆசான் சொன்னார். தூல நிலையத்தை விட்டு அவர் விலகிய பிற்பாடு இந்தத் தொகை ஆயிரத்தைத் தொட்டதோ இல்லையோ என்று மக்கள் ஐயுற்றார்கள். ஆனால் ஆசான் அவர்களே தான் தூல சரீரத்தை விட்டுப்போன பிறகு உபதேசிப்பேன் என்று கூறியிருக்கிறார். 1973 ஆம் ஆண்டு வரை 973 சாதனர்கள் தயார் செய்யப்பட்டார்கள்.

இதில் ஒருவர் கிழக்கிலும், மேற்கிலும் இந்தக் கட்டுமானத்தை விரிவாக்கும் பணியில் விவரமாக ஈடுபட்டிருக்கிறார். மேற்படிப்புக்காக அமெரிக்காவுக்குச் சென்ற ஒரு இந்தியத் தம்பதிக்குத் துருவ நட்சத்திரம் போலிருந்து அவர் பாதுகாத்து வழிகாட்டினார். ஓர் அமெரிக்க ஆஸ்பத்திரியில் குழந்தையைப் பிரசவிக்கும் தருவாயில் இருந்த அந்தப் பெண்மணியின் முன் அவர் தோன்றுவதும் மறைவதுமாய் இருந்தார். அந்தத் தாய், அவர் அங்கு பணிபுரியும் மருத்துவர்களில் ஒருவர் என்றே எண்ணினார். பிரசவம் முடிந்து உணர்வு திரும்பியதும், அந்தப் பெண்மணி அங்கிருந்த மருத்துவர்களிடம் அவரைப் பற்றி விசாரித்தார். அவர்களோ, அந்த ஆஸ்பத்தியில் அப்படி ஒரு மருத்துவர் கிடையவே கிடையாது என்றும்; ஆண் மருந்துவர்கள், பிரசவத்தின் போது அந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதேயில்லையென்றும் கூறினார்கள். இந்த நிகழ்ச்சியை விவரித்து அந்தத் தம்பதியர் எழுதிய கடிதம் என்னிடம் இன்னும் பத்திரமாக இருக்கிறது. இந்தச் சாதனர் மூலமாக உலகம் முழுவதும் ஆசானின் யோக முறை கட்டாயம் பரிச்சயப்படுத்தப்படும். இது போல் அவரால் தயார் செய்யப்பட்ட ஏழு மகாத்மாக்கள் இது போன்ற வேலையில் மூழ்கி இருக்கிறார்கள். இவர்கள் மனிதனின் துயரை நீக்கி, அவனை யோக நிலையில் நிறுவுவார்கள். இந்த சாதனர்களில் சிலர் உலகின் பல பகுதிகளிலும் பரிசோதனை முறையில், யோகப் பாடங்கள் நடத்துகிறார்கள். யோக மாணாக்கர்கள் தங்கள் தியானத்தின் போது அந்தப்

பாடங்களின் பயனை உள்ளுணர்வால் அறிந்து, அவற்றை மற்றவர்களின் நன்மைக்காகக் குறித்தும் வருகிறார்கள். அவ்விதமான மாணாக்கர்கள் தற்போது வெவ்வேறு நாடுகளில் உள்ளார்கள். இந்த மகாத்மா, மொழிக்கு அப்பாற்பட்ட நிலையில், எண்ணம் மூலமாக இந்தப் பாடங்களைப் பரப்புகிறார். மாணவர்களும் அவ்வாறே அவற்றை வாங்கித் தங்கள் மொழி அறிவிற்கு ஏற்ப எண்ணங்களைத் தத்தம் மொழிகளில் பதிவு செய்கிறார்கள். காலக்கிரமத்தில் இந்த வெவ்வேறு பட்ட மாணவர் குழுக்கள் சந்திக்கும் போது ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டு கொள்கிறார்கள். தாங்கள் எழுதி வைத்தவற்றைப் பரிவர்த்தனை செய்து கொள்கிறார்கள். தங்களது நம்பிக்கையை வலுப்படுத்தும் இந்தப் பாடங்களின் அழகைக் கண்டு அவர்கள் இன்ப வியப்பு அடைகிறார்கள். அலஸ்பெய்லி மூலம் ஆசான் டி கே வெளியிட்ட ''புதிய யுகத்தில் கல்வி'' என்னும் புத்தகத்தில், இந்தப் புதிய கல்வி முறை பற்றி விவரிக்கப்படுகிறது. ஒரு அப்பியாசியின் விசாலமான நோக்கு மற்றும் தியாக மனப்பான்மையைப் பொறுத்தே அவனுக்கு 'யோகம்' என்னும் ராஜ மார்க்கம் திறக்கப்படும் என்று அவரதில் குறிப்பிடுகிறார்.

தேகத்தில் அசுத்தத்தால் அந்த ராஜ மார்க்கம் ஒரு சிலருக்கே என்று சில அப்பியாசிகள் கருதி விடுகிறார்கள். இது அவர்களுடைய மனக்கோளாறே ஆகும். அப்படிப்பட்ட அப்பியாசிகளின் மத்தியில் தீவிரமான கருத்து வேற்றுமை நிலவுகிறது. இதன் விளைவாக அவர்கள் ஒரு குழுவிலிருந்து வெளிவந்து ஸ்தம்பித்த நிலையிலிருக்கிறார்கள். இந்த ஸ்தம்பித்த நிலையில் அவர்களால் யோகத்தை அனுபவிக்க முடிவதில்லை. அவர்கள் மற்றவர்களைப்பற்றிக் கொள்ளுகின்ற அபிப்ராயங்களால், தங்களது வாழ்க்கைகளைச் சிக்கலாக்கிக் கொள்கிறார்கள். அவர்களில் சிலர் தங்களை மையமாக வைத்தே ஒரு சகோதர வட்டம் அமைய வேண்டும் என்று முயற்சி செய்கிறார்கள். இந்தப் புகழாசையால் அவர்கள் யோகத்திலிருந்து விலகி, உடல் நலக்கேடு, வறுமை. துன்பம் போன்ற பல நிலைகளில் தங்களையே கொண்டு சேர்க்கிறார்கள். ஆசானிடத்தில் தங்களை ஒப்புவித்தவர்களுக்கோ கனவில் கூட சிக்கல்கள் இல்லை. அவர்களுக்கு வாழ்க்கையில் எந்தப் பிரச்னையும் இருப்பதில்லை. அவர்களுக்கு எந்த விதமான வறுமையும் கிடையாது. தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள அவர்கள் யாரிடமும் எதையும் கோர வேண்டியதில்லை. தன்னிடம் தங்களை ஒப்புவித்தவர்கள் மேல், ஆசான் முழுப் பொறுப்பேற்று அவர்களுடைய தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறார். இதுவே எங்களது நித்ய அனுபவம். எங்கள் வாழ்வில் உறுதியாக்கப்பட்ட உண்மை யாதெனில் ஜாதி, சமயம், மதம், இனம், நாடு மற்றும் சமூக,

அரசியல் அமைப்புகளால் ஆசானிடம் தங்களை ஒப்புவித்தவர் களுக்கு எந்த விதமான செயல்விளைவும் பாதிப்பும் கிடையது என்பதே. ஆசான் கொண்டு வந்த யோகத்தைப் பயில யாரும் எவரிடமும் அனுமதி கேட்கத் தேவையில்லை. உள்ளிருந்து எழும்பும் உத்தேசம் ஒன்றே இதற்குத் தேவையானது. எல்லாம்வலானை, எங்குமுள்ள ஈசனைக் கோயில்களிலும், குருசடிகளிலும், மசூதி களிலும் வரம்பு கட்ட முயலுவது அறிவிலிகளின் செயலே ஆகும். எங்குமுள்ள கதிரவனின் ஒளி தன்னைக் கவனிப்பவனுக்குத் தன்னையே வழங்குகிறது. இந்த விதமாகவே எங்கே அவரது பெயர் உச்சரிக்கப் படுகிறதோ அங்கெல்லாம் ஆசான் தனது அருளை மழையாய்ப் பொழிந்து உயிர்களைத் தன் வசம் தூண்டுகின்றார்.

"ஒரே நோக்கில் முழுக்காட்சி"

29.5.1990 (மே அழைப்பு தினம்) அன்று ஸ்பெயின் நாட்டின் பார்சலோனு நகரத்தில், சகோதரர் க. பார்வதி குமார் அவர்களால் இது அளிக்கப் பட்டது. 1988இலிருந்து, ஒவ்வொரு மே அழைப்பு நாளன்றும், ஐரோப்பிய நாடுகளில், அங்குள்ள ஆன்மிகக் குழுக்கள் சங்க அனுபவம் காணும் பொருட்டு, குருபூசைகள் நடத்தி வருகிருர் அவர்.

இந்த விவரங்கள், அப்பியாசிகளின் நடைமுறைக்குப் பயனுள்ள வையாயிருப்பதால், அவை, ஒரு சிறு புத்தக வடிவில், ஜகத்குரு அமைப்புச் சகோதரர் குழாமால், ஆசான் சி.வி.வி. அவர்களது பிறந்தநாளன்று வெளியிடப் பட்டது.

தமிழக மக்களின் நன்மைக்காக, அவ்விவரங்களையும் இந்த மொழிபெயர்ப்போடு இணைப்பதில் மகிழ்வடைகிரேம்.

ஆசான் சி.வி.யின் யோகமுறை
(பயிற்சிக் குறிப்புகள்)

1. மே அழைப்பு நாள்

மே மாதம் 29-ஆம் தேதி, மே அழைப்பு நாளாய் அறியப் படுகின்றது. அன்று, ஆசான் அழைக்கக் கூடும் என்பதே இதன் பொருள்!

அகத்திய மாமுனியின் ஆச்ரமத்திலிருந்து (நீலகிரி மலைத் தொடர்) வரும் ஒருமையின் சக்தி அலைகள், புவிக்காகவும், புவியின் உயிர்களுக்காகவும், 29-5-1910 அன்று, வகுக்கப்பட்டன.

இந்த ஆச்ரமத்தின் தலைவரான ஆசான் சி.வி.வி. 29-5-1910 அன்று மேற்சொன்ன சக்தி அலைகளை எழுப்புதற்கான ஒலிச் சாவியை வழங்கினுர்.

அது, வாழ்வின் ஒருமையை உணர்வதற்கான மந்திரமாய், காலையும் மாலையும் ஒலிக்கப்படுகிறது. அந்த மந்திரம் இதோ :

"NAMASKARAMS MASTER CVV"

("நமஸ்காரம்ஸ் மாஸ்டர் சிவிவி")

2. **யோக நோக்கங்கள்**

1. உயிர் முழுமையாய் வெளிப்பட, வடிவத்தைச் செம்மை செய்தல்.
2. உயிரின் தொடர்ச்சியை அனுபவிக்க "புதிய மூளையடிச் சுரப்பி" மூலம் மனதின் வாணுடலை மேம்படுத்தல்.
3. மரணத்தை வென்று, மகா உணர்வில் ஒன்றுதல்.
4. அன்பு விகசிக்குமாறு, அகக் கருவிகளைத் தயார் செய்தல்.
5. வடிவில், உணர்வை அனுபவித்தல்; அதாவது, உடல்-உயிர் ஒருமையை ஆன்மாவில் உணர்தல்.

3. **யோகத்தின் அடிக்கோள்கள்**

1. காலையும், மாலையும் தவருமல் ஆசானை உள்ளெழுப்பி (அழைத்து) உள்நடப்பைக் கவனிக்க.
2. அப்போது நிகழும் அனுபவங்களையும் நேரும் எண்ணங் களையும், நேர்மையுடன் ஓர் ஆரஞ்சு நிற டயரியில் குறிக்க.
3. எல்லா வடிவுக்கும் வேர், மகா உணர்வில்தான் உளது என்று புரிந்து கொள்க. எல்லா வடிவங்களிலும் நிலவும் இந்த ஒரே உணர்வைக் காணப் பழகுக. அன்ருட வாழ்வின் நிகழ்ச்சிகளில், இந்த உணர்வைக் காணத் தவறிய விவரங் களைக் குறிக்க.
4. அடுத்தோருக்குப் பயனுள்ளதாகவும், உதவிகரமாகவும் வாழ்வு நடக்க மனதைப் பழக்குக.
5. ஒலி, ஒரு மின்சார அதிசயம். அதை, ஒளி பெறுவதற்குப் பயன்படுத்துக.

4. **யோகப் பயிற்சிக்கான தகுதிகள்**

1. தனது சொந்தச் சமயப்பற்றைக் குறித்த முறையான அறிவிருக்க வேண்டும். அதற்குப் புறம்பாய் நடக்கக் கூடாது.
2. பொருளாதாரத்தில் தன் காலில் நிற்க வேண்டும். சமூகப் பொறுப்போடு வாழ வேண்டும்.
3. பால்வினை நோய்கள் பற்றியோராய் இருக்கக் கூடாது.

4. வாழ்க்கை சரியான / முறையான வழிவகைகளோடிருக்க வேண்டும்.

5. மது, போதைமருந்துகள் போன்ற கேடு தரும் பழக்கங்களிருக்கக் கூடாது.

6. குறைந்தபட்சம் பத்து வருடங்கள், இடைவிடாமல் யோக சாதனை பயிலும் மன உறுதி வேண்டும்.

7. தகுந்த கண்காணிப்பின்றி மூச்சுப் பயிற்சிகள் செய்யக் கூடாது.

5. **யோக ஒழுங்குமுறைகள்**

1. நேரத்தை வீணாக்காதீர்.

2. சிற்றறிவைக் கொண்டு, இது சரி என்றும். அது தவறென்றும் தீர்ப்பு வழங்காதீர்.

3. உம் நோக்கையே அனைவரும் கொண்டுளர் என்ற மாயையில் ஆழாதீர்,

4. வளைந்து கொடுமின்; பிடிவாதமாய் இராதீர்.

5. முழுமை, முழுதுமாய் உம் கைகளில் இல்லை என்பதைப் புரிந்து கொள்வீர்.

6. உடனடியாக அல்லது தற்காலிகமாகத் தீர்க்க முடியாத விஷயங்களைக் குறித்துக் கவலையுற வேண்டாம்.

7. சிறு விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்; மற்றோர் பலவீனங்களைப் தாராள மனப்பான்மையுடன் நோக்குங்கள்.

8. செய்யக் கூடிய உதவியைச் செய்யாதிருக்காதீர்.

9. உம்மால் முடியாதது மற்றவராலும் முடியாதென்று எண்ணாதீர்.

10. மூட நம்பிக்கையைக் களைமின்; எதையும் உமது சில்லறை நம்பிக்கைக்கு குறுக்காதீர்.

11. நல்லனவாய்க் காண்பதிலெல்லாம் ஆவல் கொள்ளாதீர்; கையிலுள்ள வேலையைச் செய்மின் (ஏற்றுக்கொண்ட பயிற்சியைப் பழகுமின்).

12. செம்மையே விழைக, அந்நலம், உம்மால் என்று கருதற்க.

6. பிணி தீர்த்தல்

பிரார்த்தனை

Master, please let us receive the influx of Thy plenty of prana into our systems, so that we may resist disease, decay and death, realise the Highest Truth, the pure Love and the Bliss of Existence and serve humanity according to thy plan.
Master C.V.V. Namaskarams.

ஆசானே! தயைகூர்ந்து தங்கள் மிதமிஞ்சிய பிராணன் எங்கள் அமைப்புக்குள் வந்து மண்டுவதாகுக. அதனால் நாங்கள் பிணி, மூப்பு, மரணத்தைக் கடந்து, மேலான உண்மை, தூய நேயம், பெரும் மானந்தம் இவற்றை உணர்ந்து, தங்கள் ஏற்பாட்டின்படி மன் பதைக்குத் தொண்டு புரிவோமாக.
ஆசான் சி.வி.வி. வணக்கங்கள்

பயிற்சி

1. ஒவ்வோரிரவும், உறங்கச் செல்லுமுன், உடலையும் சுற்றுப் புறத்தையும் தூய்மையாக வைத்திருந்து, இந்தப் பிரார்த் தனையைச் செலுத்தவும்.

2. உறங்கும் போது, அண்மையில் ஊதுவத்தி கமழ்வதும், மெழுகுவத்தி துலங்குவதும் நல்லது.

3. பகலில் சந்தித்த பிணியுற்றோரை, இரவில் நினைவு கூர்ந்து, அவர்கள் நோயகலும் முகமாக இந்தப் பிரார்த்தனையைச் செய்தல் நன்று.

4. நோயாளிகளின் துயர்தீர்க்க, விரைந்து செயற்படுதல் நன்று. நேரம் இருக்கும் பட்சத்தில், அவர்களுக்குத் தொண்டு செய்வதைத் தவிர்க்கலாகாது.

7. அவிட்ட தியானம்

சந்திரன், அவிட்ட விண்மீன் குழுவில் இருக்கும் காலம் (ஆசான் சி.வி.வி.யின் பிறப்பின் போதிருந்த நிலை) இந்த மந்திரங்களைப் பயில மிகவும் ஏற்றதாகும்.

சந்திரன், அந்த விண்மீன் குழுவிலிருக்கும் இரவு ஒன்பது மணி, இந்த அதிசயமான, மர்மமான மந்திரங்களை உணர்வதற்கான

தியானத்திற்கு உகந்த நேரம். ஆசான் சி.வி.வி. வழங்கிய இந்த மந்திரங்கள், பயிற்சியாளரின் ஆன்மிக ஆற்றல் நிலையில் மர்மமான விளைவை ஏற்படுத்துகின்றன. அதன் மூலம், மனம்—புலன்கள்—உடல், இவை ஆன்மாவோடு விரைவில் வரிசை ஒழுங்குபெற ஏதுவாகிறது.

பயிற்சி செய்வோரின் நலனுக்காக, அந்த மந்திரங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. நிதானமாய்ப் படிப்படியாய், இந்த மந்திரங்களை ஒன்றன்பின் ஒன்றாய் உச்சரிக்கவும். விழிகளை மூடிச் செவிகளைத் திறந்து அவற்றை முழுமையாய், கவனமாய்க் கேட்கவும். பின், 15 நிமிடங்கள் அமைதியில் இருக்கவும். (தியானத்திற்கான முன்னேற்பாடு அறியப்பட்டதாய்க் கருதுகிறோம்.)

ஆன்மிக அனுசரணைக்கான அதிசய மந்திரங்கள்
(அமாவாசைத்தியானத்தின் போது சொல்ல வேண்டியவை)

ஆங்கிலத்திலேயே சொல்லவும்

Namaskarams Master	நமஸ்காரமஸ் மாஸ்டர்
Dip Deep	(டிப் டீப்)
Axis Arranged Hours	(ஆக்ஸிஸ் அரேன்ஜடு அவர்ஸ்)
Higher Bridge Beginning	(ஹையர் பிரிட்ஜ் பிகினிங்
Truth Levels	(ட்ரூட்த் லெவல்ஸ்)
Nil None Not Levels	(நில் நன் நாட் லெவல்ஸ்)
Normal Temparament	(நார்மல் டெம்பரமென்ட்)
Time Expand	(டைம் எக்ஸ்பேன்ட்)
Electric Hint	(எலெக்ட்ரிக் ஹின்ட்)
Ether Work Out	(ஈதர் வொர்க் அவுட்)
Equator Equal	(ஈக்வேட்டர் ஈக்வல்)
Pituitary Hint	(பிட்யூடரி ஹின்ட்)
Hidden Circumference	(ஹிடன் சர்க்ம்ஃபரன்ஸ்)
Side Ways	(ஸைடு வேய்ஸ்)
Miller Form Center	(மில்லர் ஃபார்ம் சென்டர்)
Vertical Levels	(வர்டிகல் லெவல்ஸ்)
Meet Centres	(மீட் சென்டர்ஸ்)
Namaskarams Master	(நமஸ்காரம்ஸ் மாஸ்டர் சி வி.வி.டு
C. V. V.to your lotus feet	யுவர் லோடஸ் ஃபீட்)

(இவை பற்றிய விளக்கம் தனியே வெளியிடப்படும்)

எனது சாதனர்கள் (ஏற்கப்பட்ட சீடர்கள்) யாரெனில்

1. காலையும், மாலையும் தவருமல் ஆறு மணிக்கு, ஆசானைக் குறித்துத் தியானிப்பவர்.

2. எல்லோரிலும், எப்போதும், எவ்வடிவிலும், எப்பெயரிலும், எவ்விடத்திலும் என்னைக் காண்பவர்.

3. தனிப்பட்ட ஏக்கங்கள் மற்றும் மற்ருேரிடமிருந்து தனிப்பட்ட தேவைகளுக்காய்க் கோருதல், இவற்றுக்கு அப்பாற்பட்டு வாழ்பவர்.

4. மரணம் என்பது மாற்றத்தின் போக்கே வாகன மாற்றமேயன்றி விஷயங்களின் முடிவல்ல என்று புரிந்துகொள்பவர்.

5. எனது கட்டளைகளை ஓர் ஆன்ம டயிரியில் குறித்து அவற்றைப் பின்பற்றுபவர்.

—ஆசான் சி.வி.வி.

இரண்டாம் பகுதி

சாதனர்கள்

1. திரு. மைலும்பட்டி நரசிம்ஹம் (ஆசான் எம் என்.)

ஆசான் எம்.என். அவர்கள், ஆசான் சி,வி.வியின் யோகவழியில். ஆயிரக்கணக்கான பயணிகளை இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் செல்லும் துருவ நட்சத்திரமாய் நினைக்கப்படுகிறார். குண்டூர் மாநிலத்தில், ஒரு நியோகி பிராம்மண வகுப்பில் பிறந்தார். வக்கீலாகப் பணியாற்றினார். ஆசானின் யோக வழியால் கவரப்பட்டு, அன்னாரது கட்டளைக்கு ஏற்ப, அவர் ஓங்கோலில் வக்கீல் தொழிலையும் செய்து கொண்டு தனது வாழ்க்கை முழுவதையும் யோகத்தைப் பரப்புவதில் செலவழித்தார். ஆயிரக்கணக்கான குடும்பங்களை யோக வழியில் ஈடுபடுத்தி அவர்களுக்கு யோக வசீகரம் ஏற்படுத்தி வினைத்தளையிலிருந்து அவர்களை விடுவித்தார். பலருக்கு அவர் உயிரினும் மேலாகத் திகழ்கிறார். அவருடைய சீடர்களால் அவர் கடவுளாகவே கருதப்படுகிறார். மக்கள் அன்புடன் அவரை ''சின்ன ஆசான்'' என்றும் ''ஓங்கோல் ஆசான்'' என்றும் ''ஓங்கோல் ஸ்வாமி'' என்றும் வழிபட்டார்கள். அவர் வக்கீல் என்பதைக் காட்டிலும் யோகி என்ற முறையிலேயே பெரும்பாலும் அறியப்பட்டார். அவரைப் பின்பற்றுபவர்கள் தியானத்தில் அவருடைய பெயரை ஆசான் சி.வி.வியின் பெயரோடு சேர்த்தே அழைக்கிறார்கள். யோகத்தின் உச்சம், ஒப்புவித்தலே அல்லது சரணமெய்தலே என்று கண்ணன் காட்டியதற்கு இலக்கணமாக இருந்தது ஆசான் எம். என். அவர்களது வாழ்க்கை.

அவரது வாழ்வின் ஒவ்வொரு அங்கமும் யோகமயமாய்த் திகழ்ந்தது. ஓங்கோலில் இருந்த அவர் வீடு எப்போதும் ஜனங்களால் நிரம்பி இருந்தது- அவர்கள், அவருடைய புண்ணிய சந்நிதானத்தில் அடைக்கலம் நாடினார்கள். வருடம் முழுவதும் அவர் வீடு திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. எண்ணற்ற நோயாளிகள் அவரது பிரார்த்தனைகளால் தீராத நோய்களிலிருந்து விடுதலை பெற்றார்கள். அவருடைய பிரார்த்தனையால் பயனுற்ற குடும்பத்தாரில் ஒவ்வொருவரும் அவர்களுடைய வீட்டில் அவர் பெயரில் விளக்கேற்றி வழிபட்டார்கள். ஆயிரக்கணக்கான அந்தக் குடும்பங்களால் அவர் இன்னும் கடவுளாகவே வழிபடப்படுகிறார். இந்த வீடுகள் ஒவ்வொன்றிலும் அவரது ஓவியம் காட்சி அளிக்கிறது. ஒவ்வொரு மே மாத, டிசம்பர் மாத இறுதியிலும் அதாவது ஆசான் இறந்த தினம், மற்றும் ச்ரவண பௌர்ணிமா தினத்திலும் ஆசான் எம்.என். அவர்கள் திரளாக மக்களைக் கூட்டிப் பிரசங்கம் செய்வது வழக்கம்.

அப்பியாசிகளின் ஆவலுக்கு ஏற்ப, ஆசான் சி.வி.வி. அவர்கள் விதம் விதமான வழிமுறைகளை வழங்கியதுண்டு என்று போன அத்தியாயத்தில் கண்டோம். அவரால் தோன்றிய முதல் சாதனைர் களின் குழு, இந்த வழிமுறைகளைக் குண்டலினியை எழுப்புவதற் காகவும், சக்கரங்களைத் தூண்டுவதற்காகவும், மனித உடலுக்கும், கோள்கள், நட்சத்திரக் கூட்டங்கள் இவற்றுக்கும் தொடர்பு ஏற்படுத்தவும் அந்த வழிமுறைகளைப் பயின்றுர்கள். இந்தப் பயிற்சி, சீடர்களின் வேண்டுகோளுக்கிணங்கக் கொடுக்கப்பட்டது. அது அவசியமில்லாமல் போனதால் பிற்பாடு ஆசான் சி.வி.வி. அவர்களால் அது நிறுத்தப்பட்டது.

இந்த முறைகளைப் பயிலும் போது, ஆசானின் சாதனர்கள் பல விதமான உணர்வுகளைத் தங்கள் உடலில் அனுப விக்கத் தொடங்கினார்கள். அவர்கள் தங்களது காரண தேகம் மற்றும் நுண்ணிய கருவிகள் சக்திமயமாவதையும் ஆக்ஞா சக்கரம் என்று அழைக்கப்படும் பீனியல் சுரப்பியும் பெரு மூளையின் அடியில் உள்ள பிடியூடரி சுரப்பியும் தூண்டப்படுவதையும் உணர்ந்தார்கள். அந்தக் காரண சரீரம் நிறுவப்படும் வேளையில், கீழ் மனம் மேல் மனத்தோடு இணைக்கப்படுவதையும் அனுபவித் தார்கள். இவையெல்லாம் பூர்வஜென்மம், பின் விளைவு போன்ற விஷயங்களில் சீடர்களின் ஆவலை மேலும் தூண்டி விட்டன. எனவே அதிசயச் செயல்கள், விநோதமான அனுபவங்கள் இவற்றில் விருப்பம் ஏற்பட்டு விட்டது. இப்படிப்பட்ட அனுபவங்கள் வேடிக்கைக்காகவே ஒழிய யோகானந்த நிலையை அனுபவிக்கவும், விடுதலை பெறவும் அமரத்வம் எய்தவும் அன்று. அதிசயச் செயல்கள், விநோத அனு பவங்கள் போன்றவற்றில் சீடர்களுக்குத் தோன்றும் ஆவல், யோக வழியில் தடைகளாகவே அமையும். எனவே அறிவார்ந்த ஆசான்கள் இந்தப் பயிற்சிகளில் உற்சாகம் காட்டுவதில்லை. ஆசான் சி.வி.வி. அவர்கள் தனது சாதனர்களை இந்த அம்சங்களை அனுபவிக்க மட்டும் அனுமதித்தார். அவற்றை அவர்கள் அனுபவித்த பிறகு, மேற்கண்ட பயிற்சிகளை அவர் நிறுத்தி விட்டார். விடுதலை பெறப் பிரார்த்தனை மூலம் தன்னை ஒப்புவிப்பது ஒன்றை ஆசான் காட்டிய வழி. ஞான ஆசான்கள் தாங்களாக ஒரு செயல் முறையை உத்தேசிப்பதோ, அப்பியாசிகளின் உத்தேசங்களை ஒடுக்குவதோ, அவர்களை ஏதேனும் ஒரு செயலில் கிண்டி விடுவதோ கிடையாது. ரஜோ குணங்களின் தூண்டுகோலுக்கு ஏற்ப, உத்தேசங்கள் அப்யாஸி களிடமிருந்தே கிளம்பும். அவர்கள் சகதிபடிந்த நீரைப்போல, தன்னியல்பு, தனித்வம், போன்றவை நிரம்பியவர்களாக இருப்பார்கள். ஆசானின் அணுக்கம், வடிகட்டும் ஒழுங்கை ஏற்படுத்தி, தெள்ளிய நீர் மேலெழும்ப ஒத்தாசை, செய்கிறது, இதன் போக்கில் தனித்வம்

குணங்கள் இவை திருத்தப்பட்டு, கருவி சீர்பெற்று ஒளிவீசுகிறது. சித்திரை மாத நிலவைப் போல, மேகங்களால் மூடப்படாமல், தட்ப வெப்பங்களால் பாதிக்கப்படாமல், நிகழ்ச்சி பெற்றுத் துலங்குகிறது. இந்தப் பூமி தோன்றியதிலிருந்து, எத்தனை முறை இந்த அனுபவம் மனிதத்தால் உணரப்பட்டிருக்கிறது எனபதற்குக் கணக்கே கிடையாது.

ஒரு யாத்ரிகனின் பயணத்தில், ஆவல் என்பது ஒரு நிலையம். எனவே அப்யாஸிகள், ஆசான் எம். என். அவர்களைச் சூழ்ந்து, மேற்குறிப்பிட்ட வழிமுறைகளைத் தருமாறு வேண்டினார்கள்.

திரு ப்ரும்மாண்டம் குடும்பராவும் அவரது குழுவும் விடாப் பிடியாய் அந்த வழிமுறைகளை உபதேசிக்குமாறு விண்ணப்பித்தார்கள். அந்தப் பயிற்சிகள் ஆனந்த நிலையை எய்துவதற்கு ஒவ்வாதவை என்று தெரிந்திருந்ததால், சின்ன ஆசான் வெகு நேரம் மௌனம் சாதித்தார். தமது மௌனம் அப்யாஸிகளின் மனத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்துகிறது என்று அவர் உணர்ந்தார். அங்கிருந்தபடியே ஆசான் சி.வி.வி. அவர்களது சந்நிதானத்தை ஏற்படுத்தி, அவரிடம் யோசனை கேட்டார். ஆசான் அவருக்குக் கொடுத்த கட்டளை இதோ. "எந்த விஷயமும் தேவையான முக்யத்வம் இல்லாமல் மதிப்பேறு வதில்லை; எழும் ஒவ்வொரு அம்சத்திற்கும் ஒரு காரணமிருக்கிறது" இப்போதைக்கு அவர்களது ஆசைக்கு ஏற்ப வழிமுறைகளைக்கொடு. ஒரு சாதகனாய், இந்த வழிமுறைகளை என்னிடம் ஒப்புவிக்கும் நிலையில் நடத்து; என்றார். இந்த வழிமுறைகள், நுண்ணிய சரீரங்கள் தூய்மை அடைவதற்காக ஏற்படுத்தப் பட்டவை. தூய்மைப்படுத்து வதைப் பெரும்பாலும் ஞான ஆசான்களே செய்தாலும், சில சமயம் அவர்கள் இந்தச் செயற்போக்கை சீடர்களின் ஆசைகளின் மூலமாக நடத்துகிறார்கள்.

ஓரிறைவன் இந்தப் ப்ரபஞ்சத்திற்கு முக்கிய காரணமாயிருந் தாலும் அவன், படைப்பின் குழப்பம், அதன் செயற்போக்கு, இவற்றிக்கு அப்பாற்பட்டவனாகவே இருக்கிறான்.

தோற்றம், ஒடுக்கம் என்பதாய் நடக்கும், படைப்பு என்னும் மஹா நாடகத்தில், அவன் தனது இயல்பின் மூலம், பல பகுதி உணர்வுகளை உருவாக்குகிறான். அவை மீண்டும் படைப்பின் போக்குக்கு உபயோகப்படுத்தப் படுகின்றன. கோடிக்கணக்கான மக்கள், தங்களது பிரச்னைகளுக்கு மற்றவர்களே காரணம் என்ற தவறான எண்ணத்தில் ஆழ்ந்து ஒருவரோடு ஒருவர் பிணக்குக் கொள்கிறார்கள். காரணங்களின், மூல காரணத்தைத் தெரிந்து விடுதலை பெற்ற ஆன்மாக்கள், மேம்போக்காய்த் தெரியும் வாழ்வின் பூசலிலிருந்து விடுபட்டு நிற்கிறார்கள்.

அவர்களே, காரண - காரிய சக்கரத்திலிருந்து தப்பித்து விட்ட புத்திசாலிகள், உண்மையைக் கவனமாய்க் கவனித்தால், ஞான ஆசான்களைக் காட்டிலும் நிபுணர்கள் எவரும் இல்லை என்பது புலனாகும்.

ஆசான் எம்.என். அவர்கள், சீடர்களின் ஆவலுக்கு ஏற்ப, அவர்களுக்கு வழிமுறைகளைத் தந்ததோடு அல்லாமல், பாதுகாப்பாய் அவர்களை யோகானுபவத்துக்கு அழைத்துச்சென்றார். யோகசாதனையில், உள்ளே கடுமையான அசைவுகளை, சரிக்கட்டல்கள் இல்லா திருத்தல் உகந்ததும், பாதுகாப்பானதும் ஆகும். ஏனெனில், சில சமயங்களில் இந்தச் சரிக்கட்டல்கள் அப்யாஸியை அவன் முன் வினைக்கு ஏற்ப, மாயை, கவர்ச்சி போன்ற அபாயகரமான விளிம்புகளில் இழுத்துவிடும்.

எத்தனை விதமான மாயைகள், கவர்ச்சிகள் இவற்றால் அப்யாஸிகள் ஈர்க்கப்படுகிறார்கள் என்று கணக்கிடுவது கடினம். அதே போல் கடினம் அவற்றில் செலவாகும் கால அளவைக் கணக்கிடுவதும். இந்த ஒரே காரணத்திற்காகத்தான் இயற்கை அன்னை, உள்ளும் நுண்மையுமாய் விளங்கும் நிலைகளின் இருப்பு, அவை பணி செய்யும் முறை இவற்றை மறைத்தும், மூடியும் வைத்திருக்கிறாள். இவையெல்லாம், அறியாதவரை அபாயத்திலிருந்து காப்பாற்றவே ஆகும். இந்தக் காரணம் கருதியே தேகத்தின் நுண்மையான பாலங்கள் மர்மமாகவே வைக்கப்பட்டுள்ளன. எப்படி ஒரே கண்டிலிருந்து வெவ்வேறு விதமான வண்ணமும், திண்ணமும் கொண்ட நூல் வருகிறதோ, அதுபோல் சக்தியின் இழைகளால் தேகத்தின் பலவிதமான பாளங்கள் நெய்யப்பட்டிருக்கின்றன. இந்தசக்தி இழைகள் உணர்வால் வார்க்கப்படுகின்றன. தேகம் முழுவதும் வார்க்கப்படும் வேலையில் சில முடிச்சுக்கள், நூல் முனைகளை மறைத்து விடுகின்றன. மனித உடலில் இதுபோன்ற முடிச்சுக்கள் நிறைய உண்டு. ஒவ்வொரு முடிச்சும் ஒரு குறிப்பிட்ட சக்தி வெளிப்படுவதற்குத் தோதான விசையாகும். எந்த யோக சாதனையிலும் இந்த விசைகளைத் தொடாமல் இருப்பதே பாதுகாப்பானது. இந்த விசைகளில் ஏதாவது ஒன்று விசைக்கப்பட்டால், அதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட குணம்சம் ஒரேயடியாகத் தூண்டப்படுகிறது.

இதன் ஆதாரம் முன்வினையில் உள்ளது. இதன் விளைவாக இதுவரை அடங்கிக் கிடந்த குணக் கேடுகள் வெளிப்படும். ஒரு சீடன், பேச்சில் ஆளுமை அடைந்த பிறகே, இந்த குணங்களை சமாளிக்க வேண்டும். தனித்வம், குணம்சங்கள் இவை யோக சாதனையால் கடையப்பட்ட பிறகு, அமுதம் விளையும். சக்திகளை

ஒழுங்காய் நடத்தக் கூடிய திறன் பெற்ற ஆசான் ஒருவரே. முதல் முறை இந்தச் சக்தி நிலையங்களைத் தூண்டி விட வேண்டும்; இல்லை யெனில் விளைவு விபரீதம் ஆகிவிடும். இதில் முக்கியமான அபாயம் என்ன வென்றால், ஆசை, உணர்ச்சிகள், கோபம், பாலுணர்ச்சி இவை எல்லாம் வெளிப்படுவதற்கு எந்த நிலையங்கள் பெறுப்போ, அதே நிலையங்களே யோக சக்தியைத் தூண்டவும் ஏதுவாய் ஆகும். அதாவது, குணக்கேடுகளுக்கும் யோக சக்திகளுக்கும் தூண்ட வேண்டிய சக்தி நிலையங்கள் ஒன்றே. இதன் காரணமாகவே ப்ளாவட்ஸ்கி அம்மையார் 'ரகசியக் கோட்பாடு, (Secret Doctrine) என்னும் ப்ரும்மாண்டமான நூலில், யோக சக்திகளைத் தானே சமாளிக்க முயல்வது முதலைகள் நிறைந்த ஏரியில் குதிப்பதற்கு நிகராகும் என்று எச்சரித்திருக்கிறார். ஆசான் சி.வி.வி. அவர்கள் இது போன்ற பயிற்சிகளைப் பயில அனுமதி தந்தாரே ஒழிய, அவற்றை ஒரு உத்தரவாகவோ, யோசனையாகவோ சொல்லவில்லை. அனுமதி என்பது ஆசையால் உந்தப்பட்ட சீடன் இரண்டாம் முறை ஆசானை அணுகும் போது அளிக்கப் படுகிறது.

உத்தரவு என்பது ஒரு சீடன் ஒரு குறிப்பிட்ட பயிற்சியைக் கோராதிருக்கும் பொழுது கொடுக்கப்படுகிறது. சின்ன ஆசான், ஆவலும் உற்சாகமும் நிரம்பிய சீடர்களைத் திறமாய் ஆவல் அலைகளைக் கடக்க உதவி செய்தார்; அப்யாஸிகளிடமிருந்து தோன்றும் ஆசை உணர்ச்சி வெள்ளங்களை அவர் அனாயாசமாகச் சமாளித்து உயிரோட்டத்தால் அவர்களது பிடிவாதங்களைச் சமனப்படுத்தினார். இவ்விதமாக அவர் ஆசான் சி.வி.வி.யின் சாதனர்களிடையே ஒரு துருவ நட்சத்திரமாகத் திகழ்ந்து, ஆயிரக்கணக்கானோரின் விதிகளை வழி நடத்தி, ஆசானின் யோகத் திட்டம் வெளிப்பட உறுதுணையாய் இருந்தார். ஆசான் எம்.என். அவர்களிடம் தங்களைப் பண்படுத்திக் கொண்டவர்கள் யோக சாதனையை இறுதிவரை பயின்று, யோகத்தில் தேர்ச்சியும் பெற்று, அதை மற்றவர் நலனுக்காகச் சொல்லிக் கொடுத்தும் வருகிறார்கள். ஆசானின் அனுமதி இல்லாமல், அவரது வழிமுறைகளைத் தானாகவும், ரகசியமாகவும் பயின்றவர்களோ, விநோதமான மாய வலையில் சிக்குண்டு விட்டார்கள். இந்த வலையின் அடிநாதம் ரகசியத்தின் கவர்ச்சியே ஆகும். பண்டைய நாட்களில் கூட ஞானப் பாதைகள், காலத்தின் தேவையைப் பொறுத்து, அவ்வப் போது மறைத்து வைக்கப் பட்டன. மடங்களும், சமயக் குழுக்களும் கருத்துத் தெளிவில்லாமல் ஒரு நோக்கத்தை நிறைவேற்ற முயன்ற பொழுது அந்த மறைப்புகள் தேவைப் பட்டன. அவை உயிரற்ற கட்டிடங்கள், மாளிகைகள், சாம்ராஜ்யங்கள் என்று மேலும் உறுதிப் பட்டன; நிறுவப்பட்டன.

தற்போது அவற்றுக்கு சரித்திர மற்றும் தொல்பொருள் முக்கியத்துவம் மட்டுமே உண்டு. காலத்தின் தேவைக்கு ஏற்ப நிரந்தர மான ரகசியக் கோட்பாடு தன்னை வெளிப்படுத்தி, மனித சமுதாயத்தில் உள்ள தேவையான பகுதிக்கு வெளிச்சம் தருகிறது. அந்த நோக்கம் பூர்த்தியானதும், வெளிச்சமும் அணைந்து விடுகிறது, சமயக் குழுக்கள், மதங்கள், கட்டிடங்கள் மூலமாக. மச்சாவதாரக் காலத்தில் இருந்து, கண்ணனாய், புத்தனாய், மைத்ரேயனாய், சங்கரனாய், ராமானுஜனாய்த் தோன்றியவரை எண்ணற்ற முறைகள் இறைவன் இறங்கி வந்து அலையலையான மனிதக் கூட்டத்திற்கு ஒளியும், உயர்வும் தந்ததுண்டு. கண்ணன், பார்த்தனுக்குச் சொல்லுகிறான் 'தேவைக் கேற்ப நான் மறுபடி மறுபடி அவதரிக்கிறேன்.'

ஆசான் எம்.என். அவர்கள், தன்வழி வந்தவர்களை உயர்வூட்டி, வழி நடத்திச் சென்றதை இன்று பார்க்கும் பொழுதும் ஒரு இனிய கனவு போல் தோன்றுகிறது. அந்த நாட்களில் அப்யாஸிகள் ஒருவருக் கொருவர் ஒளிமயமாய், அன்பு மயமாய்த் தெரிந்தார்களே ஒழிய, வேறுபட்ட தனி மனிதர்களாக அவர்கள் காட்சியளிக்கவில்லை. அவர் களிடையே நிலவியது சமுதாய ஒற்றுமை மட்டும் அன்று, ஆசான் உணர்வு அனைவரிலும் உணரப்பட்டதால் நேர்ந்த ஒற்றுமை அது.

அவர் எப்பொழுது பிரார்த்தனைகளை நடத்தினாலும் மக்கள் வசீகரம் பெற்றார்கள். அவர் முன்னிலையில் சரிக்கட்டல்களும், திருத்தங்களும் இயல்பாகவே நடந்தன. தன்னுடைய பேச்சால், பிரார்த்தனைகளால், வழிமுறைகளால், தியானங்களால் அவர் சந்தித்த குழந்தைகள், கால்நடைகள் உட்பட அனைவர்க்கும் உற்சாகம் தந்தார்: அவரது வயதான, பழுத்த சீடர்களை இன்றும் காண் கிறோம். அவர்கள், ஆசான் எம். என். அவர்களது குரல், குழ லிசையை ஒத்திருந்ததாகக் கூறுகிறார்கள் அவரது பிரார்த்தனைக் கூட்டங்கள், அண்மையில் இருந்த குண்டூர், பாபட்லா, விஜயவாடா போன்ற நகரங்களில நடைபெற்றன. அவை முக்கியமான நிலையங் கள் தோன்றத் தோதாயிருந்து, ஜனத்திரளை யோக வாழ்க்கைக்கு அழைத்தன. இந்த நிலையங்கள் அதே விதமான உந்துதலோடும், அதிர்வோடும் செயல்பட்டிருந்தால் ஆசான் சி வி வியின் யோகப் உலகளாவி இருந்திருக்கும். ஆனால், இறைவனின் நாடகத்தில் இனத்தின் வினை ஒரு இன்றியமையாத தடையாகிவிடுகிறது. இருப் பினும் ஆசான் எம்.என். வாழ்ந்த காலத்தில் அவரது முயற்சியால் உலகமெங்கும் தம்மை விரித்துக் கொள்ளும் திறம் வாய்ந்த யோக விதைகள் தூவப்பட்டன. அன்றிருந்த அவரது சீடர்களில் பலரும் தங்களது தேகங்களைவிட்டு இப்போது உலகெங்கும் மறுபடிப் புதிய உடல்கள் எடுத்திருக்கிறார்கள்.

அவர்கள், அவரது நோக்கத்தை இன்னும் நிறைவேற்றி வருகிறார்கள். அவர்கள் எங்கே பிறந்திருக்கிறார்கள், அவர்கள் முகவரி என்ன என்று தேடுவது எல்லாம் பயனற்ற செயலே ஆகும். பெரும் திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையெல்லாம் நாடி ஜோசியத்தால் கூட அடையாளம் காண முடியாது. வம்பர்கள், சோம்பேறிகள் இவர்களது முயற்சியால் அவர்கள் தொந்திரவு அடைவதும் கிடையாது. சில வீணர்கள், ஆசான் சி.வி.வி. அவர்களின் எதிர்காலப் பிறப்புக்களை நாடி ஜோசியம் மூலமாக அறியத் தலைப் பட்டார்கள். அந்த முயற்சியில், நட்ட நடுவில் அவர்கள் முட்டிக் கொண்டார்கள். ஏனென்றால் ஆசானின் எதிர்காலம் அவர்களுக்கு வெளிச்சமாகவில்லை. எதிர்காலம் என்பது நம்மிலிருந்து நமக்கே நிழலாக வரும் குண்டலினிதான். அதை, தனிப்பட்ட முறையில் ரகசியப் பயிற்சிகள் செய்பவர்களாலும். சுய மேம்பாட்டுக்காகப் பயிலும் சுயநலமிகளாலும், கடும் விரதம் அனுஷ்டிப்பவர்களாலும் அடைய முடியாது. அது, அடுத்தவர்களின் நன்மைக்காகத் தன்னையே விநியோகித்துக்கொள்ளும் ஆசான் எம்.என் போன்றவர் களிடம் தானாகவே சரணடைகிறது. மற்றவர் நலனுக்காகத் தன்னைத் தியாகம் செய்பவன் எவனோ, அவனே அமரன். சுயநலனுக்காகவும், சுயவிடுதலைக்காகவும் யோகத்தைப் பயில்வோர் தனித்து விடப் படுகிறார்கள். அவர்கள் சோகத்தின் குழந்தைகள்.

ஆசான் எம்.என் அவர்களால் யோகானுபவம் பெற்றவர்கள், மேலை நாடுகளில் யோகம் பரவ அஸ்திவாரங்கள் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசான் எம்.என். அவர்களது கண்ணுக்குப் புலப்படாத தேசுமிக்க முயற்சிகளால், ஆசான் சி.வி.வி. அவர்களின் சான்னித்யம் மறுபடிக் கிழக்கில் பரவி, கிழக்கையும் மேற்கையும் ஆன்மீகத்தில் இணைத்து நிறுவும்.

ஆசான் வி. பி. எஸ்
வெட்டூரி பிரபாகர சாஸ்திரி

ஆந்திராவில். படித்தவர்கள் மத்தியில் V.P.S. என்று அழைக்கப்படும் வெட்டூரி பிரபாகர சாஸ்திரி அவர்களை அறியாதவர்களே கிடையாது. தெலுங்கு இலக்கியத்தில் வெளிவராத நூல்கள் பற்றிய பல பிரச்னைகளை அவர் தீர்த்து வைத்தார். விஞ்ஞான வெளிச்சத்திற்குப் பல நூல்களைக் கொண்டு வந்தார். இலக்கிய உலகத்தில், பண்டிதர் மத்தியில் தனது ஆக்கபூர்வமான விமர்சனத்தால் அவர் வைரமாய்த் திகழ்கிறார்.

அவர் ஆசான் சி.வி.வி.யின் முக்கியமான தூதர்களில் ஒருவர் என்பதை வெகுசிலரே அறிவர். அவர் ஆசான் பால் ஈர்க்கப்பட்ட கதை விநோதமானதும் மகிழ்ச்சியானதுமாகும். ஆவலினாலோ, இடர்களிலிருந்து அப்பாற்படவோ. ஆசைகள் நிறைவேறவோதான் மனிதன் இறைவனை நாடுகிறான். சென்னை நகர நூலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த வி.பி.எஸ்.. பல வருடங்களாய், தீராத ஜீரணக் கோளாறால் அவதியுற்றிருந்தார். எந்த மருத்துவ முறையும் பயன் தரவில்லை. நோயின் கடுமையால் எதிலும் சலிப்புற்று, உற்சாகமின்றி வாழ்ந்து கொண்டிருந்தார். அப்போது, சென்னை மாநிலக் கல்லூரியில் தத்துவப் போரசிரியராய் இருந்த திரு. பொட்டராஜூ இதைக் கேள்வியுற்று ஆசான் சி.வி.வி.யின் யோக வட்டத்தில் சேர்ந்து கொள்ளுமாறு வி.பி.எஸ்.ஸிடம் யோசனை கூறி அறிமுகக் கடிதம் தருவதாகச் சொன்னார். தன் வாழ்வுப் பிரச்னையே தீர்ந்து விட்டது போல் வி.பி.எஸ் களிப்படைந்தார். அன்று மாலையே அறிமுகக் கடிதத்தோடு புறப்பட்டு மறுநாள் காலை கும்பகோணம் சென்றடைந்தார்.

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, ருசியான மாம்பழங்களை வாங்கிக் கொண்டு, குதிரை வண்டி பிடித்துக் கொண்டு ஆசான் வீட்டுக்குச் சென்றார். வண்டிக்காரனுக்கு ஆசானையும் அவர் வீட்டையும் நன்கு தெரியும். வழியிலெல்லாம் அவன், அன்னாரது அதிசயச் செயல்கள், சக்தி பற்றி அவருக்குச் சொல்லிக் கொண்டே வந்தான். இறங்கியதுமே அவரைக் காவியணிந்த சீடரொருவர் புன்னகையுடன் வரவேற்று (அவர் பெயர் சச்சிதானந்தேந்திர சரஸ்வதி ஸ்வாமி, மசிலிப் பட்டினத்துக்காரர்) உள்ளே அழைத்துச் சென்றார் ஆசானிடம், வி.பி. எஸ். வந்திருப்பதை அறிவித்தார்.

ஆசானைக் கண்ட 'முதற்பார்வை" எப்படி இருந்தது என்பதை அவர் போல் விளக்க முடியாததாலின் அவரே சொல்லக் கேட்போம்: ''சிலிர்த்தேன் அவரைக் கண்டதும்! ஆசானிடமிருந்து காலைக் கதிரொளியின் அற்புதம் பரவிக் கொண்டிருந்தது. அற்புதமான வெண்ணிற மேனி. ஒடிசலுமில்லை. உப்பலுமில்லை. நெட்டையோ குட்டையோ இல்லை. கரங்குவித்து வணங்கிக் கடிதத்தைக் கொடுத்தேன், படித்தார். இன்முறுவல் பரவியது. நீராடி, உணவருந்தி, ஓய்வெடுக்கச் சொன்னார், தன் வீட்டில். பல வருடங்களாக நான் உணவில் காரம், மசாலா இவற்றைத் தவிர்த்து வந்தேன். என் உடல் நிலை குறித்து ஆசானிடம் சொன்னேன். அவரோ, அந்தக் கணத்திலிருந்து அது அவரது பொறுப்பு என்று மற்றவர்களோடமர்ந்து எல்லோரையும் போல் உணவருந்தச் சொன்னார். அன்று அவரளித்த உறுதியின்படி, பல வருடங்களுக்குப் பிறகு ருசியான உணவை உண்டேன். அன்று வரை, தவறியும் அப்படிப்பட்ட உணவை உண்டால், வயிற்றில் ஒரேயடியாய் எரிச்சல் ஏற்பட்டு இரவெல்லாம் உறங்க முடியாமல் போகும். ஆனால், அன்றோ அவ்விதம் நேராதது எனக்குப் பெரும் வியப்பாய் இருந்தது. அன்று மாலை (22-6-1910) ஆசானின் யோகவழியின் உபதேசம் பெற்றேன். உபதேச முறையைப் பற்றி ஆசான் குறிப்பாகச் சொல்லியிருந்ததால், நான் தக்க விதம் அதற்குத் தயாராயிருந்தேன். நமஸ்கரித்த பிறகு, ஆசான் சொன்னார். வணக்கத்துடன் நேராய் அமர், உபதேச மந்திரத்தை ஒரு முறை சொல். கண்களை மூடி, உள்ளே என்ன நடக்கின்றதென்று கவனி, மனம், புறவிஷயங்களில் ஆழ்ந்தால் போகட்டும். கட்டுப்படுத்த முயற்சி செய்யாதே. அது தானாகவே திரும்பவரும், சில நிமிடங்கள் கண்ணைத் திறக்காதே, நீ முயன்றாலும் முடியாது. உடலில், செய்யவேண்டியவை செய்யப்பட்டபிறகு கண்கள் திறக்கும்.

தியானத்தில் அமர்ந்தால், இனம் புரியாத மகத்தான சக்தியொன்று என்னுள் அசைவதை உணர்ந்தேன்- இந்த ஒப்பற்ற அனுபவம் என்னுள் விரிந்து கொண்டே போனது. உடலில், ஏதோ புதிய என்ஜின் ஒன்று இயங்கத் துவங்கியது போலிருந்தது. என் உத்தேசமின்றி இடது கை மேலும் கீழுமாய் அசைந்து கொண்டிருந்தது. வலதுகையும் அவ்வாறே வலிக்க வலிக்க அசைந்து கொண்டிருந்தது. சில நிமிடங்கள் கழித்துக் கண்ணைத் திறந்தேன். ஒருமுறை மாட்டு வண்டியிலிருந்து விழுந்ததில் பிசகிப்போன வலது தோள், தியானத்தில் ஆச்சரியமாய்ச் சரியாகிவிட்டதை உணர்ந்தேன்! அற்புதமான ஒப்பற்ற அனுபவம்! கரம்கூப்பி நமஸ்க்கரித்தேன். பல வருடங்களாய், தூக்கமின்மையால் அவதியுற்ற நான், அன்றிரவே அமைதியாய் உறங்கினேன். மறுநாள் காலை ஆசானிடம் அவரோடு

தங்கி சேவை செய்ய அனுமதி வேண்டினேன், ஆசான்சொன்னார்: வண்டி ஓடும் நிலையில் உள்ள போதே பழுது பார்த்துவிட வேண்டும். வாகனம் முறிந்தால் வண்டிக்காரன் வாழ்வுக்கு இடைஞ்சலுண்டாகிறது. யோகத்தில், இயல்பான வாழும் முறைக்கு எந்தத் தடையுமிருக்கக் கூடாது. இது செயலின்மைக்கான பாதையன்று; இது ராஜயோக மார்க்கம். ஒருவன், இல்லறம் பேண வேண்டுமேயன்றி சந்நியாசியாய்ப் போகக் கூடாது வாழ்க்கை வசதியோடிருக்க வேண்டும். நல்ல உடல் நலத்தோடு, உன் தொழிலைச் செய்து கொண்டே யோகம் பயில்க! நான் எப்போதும் உன்னிலிருக்கிறேன், உனது எல்லாத் தேவைகளிலும் நான் உன்னிலிருந்து உதவுவேன். காலையில் செய்த தியானம் மாலை வரை தாங்கும். தேவைக்கேற்ப தியானத்தின் அளவும் அமைகிறது. தியான வேளையில் ரயிலிலோ வண்டியிலோ பயணம் செய்து கொண்டிருந்தாலும் நடந்து கொண்டோ வேறு தவிர்க்க முடியாத வேலையிலோ ஈடுபட்டிருந்தாலும், நேரந்தவறாமல் மனதில் என்னை நினைவு கூர்க. பணி முடிந்து நீ ஓய்வெடுக்கும் போதோ அல்லது உறங்கும் போதோ, தேவையான தியானம் நடைபெறும். பகுத்தறிவு, சத்தியம், தர்மம், இவற்றோடிரு. ஒவ்வொருவரிலும் இருப்பது நானே என்று வழிபடு. ஆழ ஆழ, அவசியமான போதனை கிடைக்கும். எல்லாவற்றிற்கும் மேலாய் உடல் நலம் உனக்கு முதலில்அவசியமாகிறது. அதன் பிறகு அவர் எண்ணிக் கொண்டார்: ''உள்ளே நிகழும் இந்த விளக்க முடியாத தீவிரமான அசைவு என்ன? இதன் துவக்கம் எங்கிருந்து? இதுவரையில் நானும் எத்தனையோ வேதம், ஸ்லோகங்கள், புராணங்கள் படித்தேன். எவ்வளவோ மந்திரங்கள் உருவேற்றினேன். தியானங்கள் பழகினேன். வெவ்வேறு புனிதத் தலங்கள், கோவில்களுக்கெல்லாம் சென்றேன். ஆனால், இந்தப் பிரார்த்தனையில் நேர்ந்த அனுபவம் ஒரு முறையும் நிகழ்ந்ததில்லை. ஒரே ஒரு முறை செய்த பிரார்த்தனை உள்ளே இத்தனை ஏற்படுத்தி அனைத்தையுமே மாற்றி அமைக்குமா? எவ்விதம் இது சாத்தியம்? உண்டு. இல்லை, ஆத்திகம்-நாத்திகம் என்னும் விவாதங்கள் என்நெஞ்சை விட்டு அறவே நீங்கின. உள்ளதைப் பற்றிய தெளிவு, அனுபவத்தில் பிறந்தது. நான் இதில் தொடர்ந்து செல்லவே வேண்டும். என் பிரார்த்தனைகளை உள்ளிருந்து யாரோ கேட்டு, பதிலாய் என்னை வாழ்த்துவதுபோல் தோன்றுகிறது.''

ரயிலில் ஊர் திரும்பும் போது, ஒரே கூட்டமாய் இருந்ததால், கதவருகே நின்றிருந்தார். நெரிசல். அவரைப் பிடித்துத் தள்ளிவிடும் போலிருந்தது. ஒரு பயணி அவரை நோக்கி, 'கதவு திறந்திருக்கிறது விழுந்துவிடப் போகிறீர்கள், நான் அடுத்த ஸ்டேஷனில் இறங்கி விடுவேன். எனவே, இப்போதே என்னிருக்கையில் உட்காருங்கள்' என்றார். வி.பி.எஸ். நிம்மதியாய் ஊர் திரும்பினார்.

சீக்கிரமே தஞ்சாவூர் நூலகத்தில் மேலாளர் பதவி கிடைத்தது. கும்பகோணத்திற்கு மிகவருகே வந்ததில் சாஸ்திரியாருக்கு மிகவும் மகிழ்ச்சி. வாரந்தவருமல் ஆசானைச்சந்திக்க வாய்ப்பானது. படிப்படியாய் அவர் உடல் நலம் சீரானது. யோக ஆட்சியால் எஞ்சிய வாழ்வெல்லாம் அவர் தெய்வீக அன்பிலும், ஏகாந்தத்திலும் திளைத்தார். அந்த ஆனந்த வெள்ளத்தில் வி.பி.எஸ். என்னும் சாதனர் மூலம் பலர் தூய்மையுற்றனர். இன்றும், ஆசான் சி.வி.வி. அவர்களோடு இவர் பெயரையும் அழைத்து விடுதலை பெறுவோருண்டு.

பின்னுளில் அவர் திருப்பதியில் வசிக்க நேர்ந்தபோது. அவரைச் சுற்றி நல்ல யோக வட்டம் ஒன்று ஏற்பட்டது, ஆசானின் அருளால் அவர் எத்தனையோ தீராத நோய்களைத் தீர்த்திருக்கிருர். அவர் பிரார்த்தனை செய்து நோயாளியின் புருவ மத்தியைத் தொட்டதும் கடுமையான நோய்கள் மருந்தின்றிப் பறந்தன. நாட்டின் நாலு புறத்திலிருந்தும் வந்த நோயாளிகள், ரோகம் தீர்ந்ததோடு, தெய்வீகமான யோகானுப்பவத்தாலும் ஈர்க்கப் பட்டார்கள், ஆசானின் பாதையில் வி.பி.எஸ்.ஸால் ஈடுபடுத்தப் பட்டவர்களிடம் தனி விசேஷம் இருக்கிறது. அது, பகுத்தறிவும், பக்தியும் சேர்ந்த உண்மையான நடத்தையாகும். எளிமையே அவர்கள் வாழ்வின் அடிநாதம்.

ஒரு முறை, வி.பி.எஸ் தம் மனைவியோடு கும்பகோணம் சென்ருர். மாலைப் பிரார்த்தனைக்குப் பிறகு, ஆசான் அவரிடம், ''இன்றிரவு, நான் வழக்கமாய் உறங்கும் தியானக்கூடத்தில், நீ உன் மனைவியோடு படுத்துறங்கு" என்ருர். மௌனமாய்ச் சம்மதித்தாலும் இந்த யோசனையைக் கேட்டதுமே அவர் சங்கடப் பட்டார். அதை அவரே சொல்லக் கேட்போம். ''நான் மிகவும் பயந்தேன். ஆசானுறங்கும் அறை! நான் நடுங்கினேன். இரவு ஆனதற்குப் பிறகு, என் மனைவி மற்ற பெண்களோடும், நான் வாசல் வராந்தாவில் மற்ற சீடர்களோடும் படுத்தோம். இரவு முழுவதும் ஆசான் சொன்னதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தேன். காலையில் எழுந்து கதவுகள் திறந்ததும், ஆசான் வெளியே ஒரு மடிப்புக் கட்டிலில் மெல்லிய போர்வையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.

படுக்கையைச் சுற்றி தரையில் மல்லிகை மலர்கள் உதிர்ந்திருந்தன. அருகே பட்டுறை போட்ட தலையணை. ஆசானும் வெண்பட்டு உடுத்திருந்தார், கட்டிலைச் சுற்றிக் கொசுவலை ஒன்று. அவர் பாதங்களைத் தொட்டு வணங்கினேன். ''இரவு எங்கே உறங்கினுய்?" என்று கேட்டார். உண்மையைச் சொன்னேன். ஆசான் ஏமாற்றத்தோடு ''என் யோசனையை உன்னுல் கேட்க முடியவில்லையே! காலை எட்டு மணிக்கு உன் மனைவிக்கு உபதேசம். அதற்கான ஏற்பாடு

களைச் செய்" என்றார். அன்றிலிருந்து வி.பி.எஸ்.ஸின். மனைவியும் ஆசான் சி.வி.வி.யின் மனைவியும் யோக வட்டத்தில் சேர்ந்தனர்.

உபதேசமான ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் அம்மாளின் உடல் மரக்கட்டை போல் விறைப்பாகி விட்டது. சச்சிதானந்தர் அருகில் சென்று அழைத்த போதும் பதிலில்லை. பின் ஆசானின் துணைவியார் அவருடலை நீவிவிட்டு உணர்வுக்குக் கொண்டு வந்து உணவளித்தார். சற்றும் உணவருந்தாமல் தியானத்திற்கு அமர்ந்ததே இதன் காரணம் 15 நிமிடங்கள் ஆழ்ந்த தியானத்தில் அம்மாளிருந்த போது ஆசான் தனது மிகுந்த சக்தியைச் செலுத்தினார். அன்றிலிருந்து தம்பதியர் உயிர் நேசத்தை முழு உணர்வோடு தொடர்ந்து அனுபவித்தார்கள். அவர்களது சந்நிதியில், ஆசானின் யோக முறையில், பலரும் விடுதலை பெற்றார்கள். அவர்களது தெய்வீக அனுபவங்கள் ஆசான் வி.பி.எஸ். எழுதிய "பிரக்ஞா பிரபாகரம்" என்னும் நூலில் விளக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர, இவை பற்றி இன்னும் விரிவாய் அவர் ஒரு நூலெழுதினார் என்று கேள்விப்படுகிறோம். அந்தப்பிரதி யாரிடமிருக்கிறதென்று தெரியவில்லை. அவர் சீடரான திரு. ராமகோட்டய்யா, "எங்கள் சாஸ்த்ரியவர்கள்" என்றொரு நூல் (தெலுங்கு) எழுதியிருக்கிறார். அதில் சாஸ்த்திரியாரின் தினசரி வழக்கம், நேசம், சகோதரப் பான்மை, அஹிம்சை இவை விளக்கப்பட்டுள்ளன. இன்றும் தியானத்தில் திரு. ராமகோட்டய்யா, வி.பி. எஸ்ஸின் சாந்நித்யத்தை உணர்கிறார். அவரிடமிருந்து உத்தரவுகள், வழிமுறைகள், செய்திகள் அவற்றைப் பெறுகிறார். இவை சில சமயங்களில் கவிதை வடிவத்தில் வருவதுண்டு.

திரு. ராமகோட்டய்யாவின் வாழ்வில் ஆசான் வி.பி.எஸ்ஸின் அருளால் ஒரு புதிய சகாப்தம் தோன்றியதை நான் அறிவேன். 1970 மே மாதம் ஒரு முறை அவர் என்னோடு விசாகப்பட்டினத்தில் உரையாடிக் கொண்டிருந்தார். பேச்சு, அரவிந்தரின் யோகானுபவம் பற்றியும், அவர் ஆங்கிலத்தில் எழுதிய முக்கியமான நூலான 'சாவித்ரி' பற்றியும் திரும்பியது. திரு. ராமகோட்டையா அந்தப் புத்தகத்தை காண ஆவலாக இருந்ததால், மறுநாள் நூலகத்திலிருந்து தருவித்து அவருக்குச் சேர்ப்பித்தேன். அவர் சொன்னார்: "இது சிக்கலான நூல் என்றும், இதைப் படித்து அறிவது யாராலும் முடியாது என்றும் நாங்கள் கேள்விப்படுகிறோம். இதை நான் எப்படிப் படித்துப் புரிந்து கொள்ளப் போகிறேன். சொல்லப்போனால், திரு. ராமகோட்டையாவின் ஆங்கில அறிவு சராசரிக்கும் கீழே என்று எனக்குத் தெரியும். உடனே, வி.பி.எஸ்ஸின் சாந்நித்தியத்தை என்னில் உணர்ந்து அவரால் தூண்டப்பட்டு "நீங்கள் இந்தப் புத்தகத்தைப் படிப்பது மட்டுமல்லாமல், இதைத் தெலுங்கிலும் மொழி

பெயர்ப்பீர்கள், தயவுசெய்து வேறு சிந்தனையின்றி இதைத் தொடர்வீராக'' என்றேன். ராமகோட்டய்யா தன் ஊருக்குப் புத்தகத்துடன் திரும்பிச் சென்றார். வெகு சீக்கிரமே, அதில் ஒரு பகுதியைத் தெலுங்கில் மொழியாக்கம் செய்து திரும்பி வந்தார். உரை நடையும் கவிதையுமாய் இருந்த அவர் மொழிபெயர்ப்பு, மூலத்தின் சிக்கலான கருத்துகளைத் தெள்ளிய நடையில் விளக்கியிருந்தது. ஒரு வருடத்திற்குள் மொழிபெயர்ப்பை முடித்து விட்டார். நான், அவர் பாண்டிச்சேரிக்குச் செல்ல வேண்டுமென்று அன்புக் கட்டளை இட்டேன். அவர், ஆச்ரமத்தில் அன்னைக்கு வயதாகி விட்டதால், யாருக்கும் பேட்டி தருவதில்லையென்று கேள்விப்படுவதால் அன்னையை சந்திக்க முடியுமோ என்று ஐயுற்றார். நான் சொன்னேன் ''ஆசான் வி. பி. எஸ். உங்களோடிருக்கிறார். நீங்கள் அன்னையின் விசேஷ தரிசனத்தை பெறுவீர்கள். தன்னை வந்து சந்திக்கச் சொல்லி அவர் உங்களுக்கு அழைப்பு அனுப்புவார்."

அவர் பாண்டிச்சேரியை அடைந்து ஆச்ரமத்தில் வரவேற்பறையில் அமர்ந்திருந்தார். அப்போது ஆச்ரமத்தைச் சேர்ந்த அன்பர் ஒருவர் படியிறங்கி வந்து, ''இங்கே ராமகோட்டய்யா யார்?" என்று விசாரித்தார். ''நான் தான்" என்று நம்மவர் சொன்னதும் "அன்னை உங்களைக் காண விரும்புகிறார்" என்றார். அன்னை திரு. ராமகோட்டைய்யாவை அன்புடன் வரவேற்று தொட்டு வாழ்த்தினார். ஆசான் வி. பி. எஸ். அருள் மழைக்கு இதை விடவும் வேறென்ன விளக்கம் வேண்டும். திரு. ராமகோட்டய்யாவின் மொழி பெயர்ப்பு அரவிந்தர் ஆச்ரமத்தின் சஞ்சிகையில் பிரசுரமானது. கணக்கற்ற சீடர்களுக்கு ஆசான் வி. பி. எஸ். மூலம் சென்றடைந்த ஆசான் சி. வி. வி. யின் அருள் மழை பற்றி விளக்குவது அரிதனும் அரிது.

ஆசானை நான் அறிந்த விதம்
ஆசான் ஈ.கே

ஆசான் 1922ஆம் ஆண்டு தனது பூத உடலைத் துறந்தார். நான் 1926ஆம் ஆண்டில் பிறந்தேன். அவரை நான் அறிந்த விதம் விசித்ரமானது. ஆந்திராவிலுள்ள பாபட்லாவில் நான் பிறந்தேன். எனது தந்தையார் டாக்டர். அனந்தாச்சார்யா அவர்கள், வடமொழி, தெலுங்கு, ஆங்கில மொழிகளில் பெரும் பண்டிதராய்த் திகழ்ந்தார். அவர் அறிவின் இறைவியான சரஸ்வதி தேவியின் அவதாரம் என்றே கருதப்பட்டார். ஆயுர்வேத வைத்தியத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்த அவர் வேதங்களுக்கான சொல் இலக்கணத்தையும் வைத்திருந்தார். பகவான் எக்கிராலா ராமச்சந்த்ராச்சார்யாருடைய சீடர் அவர். சிறு வயதிலேயே வேதங்கள், புராணங்கள், உபநிடதங்கள் இவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தார். தனது ஆசிரியரின் முன்னிலையில் யோக சாதனையைப் பயின்று, காலம் முழுதும் ஒரு யோகியாகவே வாழ்ந்தார். தானே படித்து சொந்த முயற்சியில் வேதஞானம், யோக அனுபவம் இவற்றால் ஆயுர்வேத முறையில் அவர் உச்சத்தில் திகழ்ந்தார். பலருக்கும் உடல்நலத்தை வழங்கியதோடு, அவர்களுக்கு வேதவிதிகளை போதித்து யோக வாழ்க்கையைச் சொல்லிக் கொடுத்தார். அவர் வாழ்வில் பெரும் பகுதி விஜயவாடாவில் வாழ்ந்து ஜன சேவை செய்து வந்தார்.

எனக்கு ஐந்து வயதானபோது ஒருநாள், என் தந்தை ஒரு புத்தகம் படித்துக் கொண்டிருந்ததைக் கண்டேன். அது ஆசான் சி.வி.வியின் நேரடிச் சீடரான நாராயணஐயர் என்பவர் எழுதிய 'புதிய யோகம்' (NEW YOGA) என்ற புத்தகம். அந்தப் புத்தகத்தின் அட்டையில் ஆங்கிலத்தில், கொட்டை எழுத்துக்களில் சி.வி.வி. என்று அச்சிடப்பட்டிருந்தது. நான் அப்பொழுதுதான் ஆங்கில எழுத்துக்களைப் பயின்று கொண்டிருந்த நேரம், எனவே அவற்றைக் கண்டவுடன், குழந்தைத்தனமான ஒரு குதூகலத்துடன் 'சி.வி வி.' என்று உரக்க உச்சரித்தேன். என் தந்தை ''அது ஒரு மகாத்மாவின் பெயர், அவர் யோகத்தைப் பரப்பியவர்'' என்று சொல்லி, புத்தகத்திலிருந்த ஆசானின் படத்தை எனக்குக் காட்டினார். நான் வணங்கினேன். நாளடைவில், இந்த நிகழ்ச்சி, என் நினைவை விட்டு மறைந்து விட்டது.

1946-இல் இலக்கிய உலகில் நான் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தேன். இலக்கியக் கூட்டங்கள், போட்டிகள், இவற்றில் பங்கு

கொண்டிருந்தேன். அப்போது ஒரு வயதான இலக்கியப் பண்டிதருக்குத் துணையாக, நான் குண்டூரிலிருந்து நெல்லூர் வரை செல்ல வேண்டியிருந்தது. வழியில், தெனுலியில் நாங்கள் இறங்கினோம். முதியவர், என்னை ஒரு மாளிகைக்கு அழைத்துச் சென்றார். அது திரு. வேதாந்தம் லட்சுமி நாராயணா என்பவர்க்குச் சொந்தமானது. முதியவர் குறிப்பாயுரைத்தார் ''இங்கே ருசியான சாப்பாடு போடுவார்கள். இங்கிருப்பவர்கள் என்ன செய்கிறார்களோ, அப்படிச் செய்வது போல் நாமும் கொஞ்ச நேரம் நடித்தால் போதும்.''

அந்த வீட்டில் ஒரு பெரிய கூட்டம் கூடியிருந்தது. பயனுள்ள உரையாடல்கள் நடந்து கொண்டிருந்தன. நான், அந்தக் குழுவினரோடு அமர்ந்து அவர்கள் பேசுவதைக் கவனமுடன் கேட்டுக் கொண்டிருந்தேன். இதற்கிடையில், முதல் மாடிக்கு வருமாறு அழைப்பு வந்தது; சென்றோம்; அங்கே ஒரு பெரிய கூடம் அதில் ஓரத்தில் ஒரு பீடம்; அதன்மேல் ஓர் ஓவியம்; ஓவியத்தில் ஓர் ஆசாமி; பலம்; நலம்; பக்குவம்; பண்பு; சாந்தி, சக்தி, சமநிலை இவற்றை ஒளி வீசிக் கொண்டிருந்தது அவர் முகம்; எடுப்பான மீசை அவர் யாரென்று தெரியவில்லை. யாரும் எனக்குச் சொல்லவுமில்லை. இவரை எங்கேயோ பார்த்திருக்கிறேன் என்று தோன்றியது; அவரது தோற்றம் என் மனதைக் கவர்ந்தது.

வயதான ஒருவர், அனைவரையும் கண்களை மூடச் சொன்னார். பின்பு, பிரார்த்தனையைத் துவக்கினார். பிரார்த்தனையைச் செவிமடுத்தேன். துள்ளலிடும் சள்ளைமனம் பிள்ளைபோல் ஒடுங்கியது; ஓவியத்து ஆசாமி யார்? தந்தையாரின் நண்பர்களில் ஒருவரோ? வீட்டுக்கு வந்த போது பார்த்திருக்கிறேனோ? எண்ணங்களால் சமாதானம் பெற முடியுமா என்ன? திடீரென்று யாரோ மின்னதிர்வு தந்தது போல் முதுகெலும்பில் மின்னோட்டம் மேனியெங்கும் மெலிதான மின்சாரத்தின் சஞ்சாரம். உடல் லேசானது; புற உணர்வு மறைந்தது. சிறுவயதில், காரமான பீடாவை விழுங்கி இதே போல் உடல் லேசானது நினைவுக்கு வந்தது. கொஞ்ச நேரம் சென்ற பிறகு கண்களைத் திறக்கவும் என்ற உத்தரவு கேட்டது; முயன்றும் முடியவில்லை. இமைகள் விலக மறுத்தன; கால்களும் கைகளும் காற்றுமின.

மெள்ளச் சுதாரித்துக் கொண்டு படியிறங்கிக் கீழே வந்தேன். உச்சிப் பகல், பண்டிகை போல் பலவிதமான பலகாரங்களுடன் பலத்த சாப்பாடு. உடனேயே கிளம்பலாம் என்றார் பெரியவர் போகும் வழியில் அந்தப் பிரார்த்தனைக் கூட்டத்தாரைப் பற்றி விசாரித்தேன், அவரோ ''செய்வதெல்லாம் யோகமென்றும்

பைத்தியக்காரர்கள் அவர்கள். அவ்வப்போது கூடி, ருசியான சாப்பாட்டை வயிறு முட்டச் சாப்பிடுவார்கள். இதைத் தவிர வேறெந்த யோகமும் செய்வதில்லை அவர்கள். ஓட்டலில் நல்ல சாப்பாடு கிடைக்காதல்லவா, அதனால்தான் இங்கே உன்னை அழைத்து வந்தேன்'' என்றார். இந்த நிகழ்ச்சியும் நினைவை விட்டு மெல்ல மெல்ல நீங்கியது.

அதே வருடம் (1946) ''அர்ப்பணா'' என்னும் எனது முதல் இலக்கிய நூலைப் பிரசுரித்தேன். தெரிந்தவர்க்கெல்லாம் இலவசப் பிரதிகள்; கேட்க விருப்பமிருக்கிறதோ இல்லையோ விடாப்பிடியாய்ப் படித்துக் காட்டினேன். தந்தையார் அழைத்தார். ''பாபட்லாவில் என் நண்பர் வெலகாப்புடி சுப்பாராவ் உள்ளார்; நல்ல மனிதர். நீ அங்கே சென்றுகொண்டிருப்பதால் அவரைப் பார். என்மகன் என்பதைச் சொல்லி, நூலைத் தந்து அவரது ஆசிகளைவாங்கிக் கொள். அவர் மிகவும் மகிழ்வார்'' என்றார்.

அவ்வாறே பாபட்லா சென்றேன். சாய்வு நாற்காலியில் அமர்ந் திருந்த திரு. சுப்பாராவ் அவரிடம் பிரதியைத் தந்து விவரம் சொன்னேன் புத்தகத்தைப் புரட்டியபடி ''ஓ! அனந்தாச்சார்யாவின் மகனா நீ!ரொம்ப சந்தோஷம். ஊரை விட்டுக் கிளம்பும் முன், மறுபடி வந்து, என்னோடு உணவருந்தி விட்டுச் செல்'' என்றார்.

அதற்குப் பிறகு அதுபற்றி விவாதிக்காமல், அவர் உத்தரவுப் படியே செய்தேன். நான் விடைபெறும் முன்பாக அன்புடன் என் முதுகில் தட்டிக் கொடுத்து ''உன்னுடைய புத்தகத்தைப் படித்துப் பார்த்தேன், நன்றாக இருக்கிறது. நீ இலக்கியத் துறையில் மேலுக்கு வருவாய், ஆனால் உன் வாழ்வில் இது உனக்கு முக்யமல்ல. பாண்டித்யம் பயனற்றது, நீ பிரகாசிக்கப் போகும் பாதை வேறு. உன் தந்தையிடம் உன்னைப் பார்த்ததில் நான் ரொம்பவும் சந்தோஷப் பட்டேன் என்று சொல்'' என்றார். என் மரியாதைகளைத் தெரிவித்து நான் கிளம்பினேன். பிற்பாடு திரு. சுப்பாராவ், ஆசான், சி.வி.வியின் நேரடிச் சீடர் என்று தெரிந்து கொண்டேன். ஆசான். அவரை அனைவருக்கும் உணவளிக்கவும், மக்களைத் தொட்டுக்குணப்படுத்தவும் ஆசிகள் வழங்கியிருந்தார் என்று தெரிந்து கொண்டேன்.

1949இல் குண்டூரில் இருந்த ஹிந்து கல்லூரியில் நான் தெலுங்கில் விரிவுரையாளராகச் சேர்ந்தேன். அப்பொழுதுதான் நான் புதிதாய்க் குடித்தனம் போன நேரம். வீட்டில் ஒரு பூஜை அறையை உருவாக்க வேண்டி, காயத்ரியின் படம் ஒன்று வாங்கச்

ஆ—4

கடைத்தெருவிற்குச் சென்றேன். என் அதிர்ஷ்டம் அற்புதமான படம் ஒன்று எனக்குக் கிடைத்தது. அது போல் அழகை நான் அதற்குமுன் கண்டதேயில்லை. முறைப்படி அதைச் சட்டமிட்டு என் பூஜை அறையில் வைத்து நான் 'காயத்ரி'யைத் தியானிக்கத் தொடங்கினேன். சில நாட்கள் சென்றபிறகு நான் காயத்ரியைத் தியானிக்கும் பொழுது ஒரு விநோதமான அனுபவம் ஏற்பட்டது.

ஒரு பீடத்தைக் கண்டேன், அதன் மேல் பட்டு வேட்டி உடுத்திக் கொண்டு வீராசனத்தில் ஒரு மனிதர் அமர்ந்திருந்தார். வஜ்ரதேகம், வலிமையின் சின்னம், கீழ்ப் பகுதி மட்டும் என்னால் காண முடிந்தது. த்யானம் முழுதும் இந்தக் காட்சி நிலையாய் இருந்தது. அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் த்யானத்தில் இதே காட்சி. நாளுக்கு நாள் காட்சியில் தெளிவு ஏற்பட்டது. ஆளின் மேல்பகுதியும் மெல்ல மெல்லப் புலனாயிற்று. ஒரு பத்து நாட்களுக்குள் முகம் நன்கு தெரிந்தது. கனிவும், கம்பீரமும் பொருந்திய அந்த முகத்திலிருந்து, சக்தி, சாந்தி, சமநிலை இவையெல்லாம் ஒளி வீசிக் கொண்டிருந்தது. அகன்ற கண்கள், பெரிய மீசை. அவர் யார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இவரை எங்கேயோ பார்த்திருக்கிறோம் என்று ஓரத்தில் ஒரு நினைவு. என் தந்தையின் நண்பர்களில் ஒருவராய் இருந்திருப்பாரோ? இரண்டு வாரங்கள் இந்த அனுபவம் தொடர்ந்தது. த்யானத்தில் நுழைந்த அந்த மனிதர், என் இதயத்தில் நிம்மதியாய்த் தங்கிவிட்டார்.

ஒருநாள் அருகிலுள்ள 'கூடவல்லி உயர்நிலைப் பள்ளி' தலைமை ஆசிரியரான திரு. ராஜகோபால ராவ், மத்யானம் என் வீட்டுக்கு வந்தார் பள்ளியில் ரவீந்த்ரநாத் தாகூரின் பிறந்த நாள் விழாவைக் கொண்டடுவதாகவும், நான் வந்து பள்ளிக் குழந்தைகளுக்குத் தாகூரைப் பற்றி பேச வேண்டும் என்றும் பணித்தார். அதை ஏற்று நான் அங்கு சென்றேன்.

மாலை நேரம் திரு. ராஜகோபால ராவ் அவர்களோடு, அவர் வீட்டில் பேசிக் கொண்டிருந்தேன். ஆறு மணி அடிக்க சில நிமிடங்களிருக்கும் போது, அவர் எழுந்து 'தயவு செய்து மன்னிக்க வேண்டும். இது என் மாலைப் பிரார்த்தனைக்கான நேரம், நீங்கள் ஏதேனும் புத்தகம் படித்துக் கொண்டிருங்கள், நான் மாலைப் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு வந்து விடுகிறேன், என்று சொல்லி உள்ளே போனார். நானும் ஏன் ப்ரார்த்தனையில் சேர்ந்து கொள்ளக் கூடாது என்று நினைத்தேன், பிறகு அவருக்கு இதில் ஏதாவது ஆட்சேபமிருக்குமோ என்றும் ஐயுற்றேன். நான் அவ்வாறு எண்ணிக் கொண்டிருந்த போது அவர் வெளியே வந்து 'உங்களுக்கு ஆட்சேபம் இல்லையென்றால் நீங்களும் ப்ரார்த்தனையில் கலந்து

கொள்ளலாம்', என்றார். கால் கைகளைக் கழுவிக் கொண்டு நான் த்யான அறைக்குள் நுழைந்தேன். ஒரு பெரிய புகைப்படத்திற்கு எதிரே அவரது மனைவியும் குழந்தைகளும் அமர்ந்திருந்தார்கள். அவர் ஊதுபத்திகளைக் கொளுத்திக் கொண்டிருந்தார். புகைப் படத்தில் த்யான ஆசனத்தில் இருந்தவரைப் பார்த்தேன். சிலிர்த்தேன். நான் அங்கே ப்ரார்த்திக்க வந்தது, மூன்று வாரங் களாகக் காணுகின்ற அதே ஆசாமியைத்தான். இவரல்லவோ நான் காயத்ரியைத் த்யானிக்கும் போதெல்லாம் தோன்றிக் கொண்டிருக் கிறார். மற்றவர்களோடு நானும் கண்ணை மூடிக் கொண்டேன். திரு. ராஜகோபால ராவ் ப்ரார்த்தனையைத் துவக்கினார். மீண்டும் முதுகெலும்பில் ஆழ்ந்த அதிர்வு ஏற்பட்டது. மெல்லிய மின்னோட்டம் உடல் முழுதும் பரவியது. உடனே என் நினைவிலிருந்து நீங்கிப் போன தெனாலி அனுபவம் நினைவுக்கு வந்தது. மறுபடியும் த்யானத்தில் உடல் லேசாகி விட்டது. இன்னும் சில நொடிகள் சென்ற பிறகு, ஐந்து வயதில் எனது தந்தையின் முன்னிலையில், அவரது புகைப்படத்தைப் பார்த்தது நினைவுக்கு வந்தது. என் தந்தை அப்பொழுது சொன்ன வார்த்தைகளும் சற்றே நினைவுக்கு வந்தன. தனித் தனியாய் நிகழ்ந்தது போல் தோன்றும் இந்த நிகழ்ச்சிகளின் அர்த்தமுள்ள தொடர்பு புரிந்தது. இந்த அனுபவங் களின் ஒற்றுமையை நான் கண்டு கொண்டேன். எனக்காக ஒரு பாதை திறக்கப் பட்டிருப்பதாக உணர்ந்தேன். தியானம் முழுதும் அந்த மின்னோட்டம் இடைவிடாமல் பரவிக் கொண்டிருந்தது. நான் த்யானம் முடிந்து வெளிவந்த போது, என் மனம் ஆனந்தமாய், அமைதியாய்த் தூய்மையாய் இருந்தது. அந்த நிலை த்யானத்தில் எந்தவித சிரமுமில்லாமல் எய்தப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை அதே முழு மனமும், அதே உயிரோட்டமும் தொடர்கின்றன. 1947ஆம் ஆண்டு விருச்சிகப் பௌர்ணமியில் நள்ளிரவில் இதேபோல் அனுபவம் ஏற்பட்டது. என்னுடைய இலக்கிய நூலான 'ராஸ லீலா' துவங்கி இருந்த நேரம் அது. இரண்டு அனுபவங்களும் ஒன்றே; அவை நிரந்தரமாய்த் தங்கி விட்டன.

நாங்கள் தியானக் கூடத்தை விட்டு வெளியே வந்ததும், திரு. ராஜகோபால ராவிடம் அந்தப் புகைப் படத்தில் இருக்கும் ஆள் பற்றி விசாரித்தேன். அவர், அன்னாரது பெயர் சி.வி.வி. என்றும், அவர் கும்பகோணத்தில் வசித்தவர் என்றும் சொன்னார். மேலும் ஆசானின் யோக முறை பற்றிச் சுருக்கமாக விளக்கினார். நான் அவரிடம் ப்ரார்த்தனையைக் கொடுக்குமாறு கேட்டேன். கொடுத்த தோடு மட்டுமல்லாமல் அவர், என்னைத் திருப்பிச் சொல்லச் சொல்லி, எனது டயரியில் அதை எழுதியும் வைத்தார். இன்றும் அவர் கைப்பட என் டயரியில் எழுதிய ப்ரார்த்தனை என்னிடம் இருக்கிறது. மேலும்

அவரிடம் நான், ஆசானின் புகைப்படம் ஒன்றும் கேட்டேன். சென்னையில் வசித்துக் கொண்டிருந்த திரு. நாராயண ஐயர் அவர்களின் முகவரியைக் கொடுத்தார். அவருக்கு உடனேயே நான் புகைப்படம் அனுப்பச் சொல்லிக் கடிதம் எழுத வேண்டும், ஏனெனில், அவர் முதிய ப்ராயத்தில் சாகும் தருவாயில் இருக்கிருர் என்றும் சொன்ஞர். நான்குண்டூர் திரும்பிய பிறகு, சோம்பல் காரணமாய் நாராயண ஐயர் அவர்களுக்கு எழுதாமல் விட்டு விட்டேன். சில நாள் சென்ற பிறகு எனக்குப் பதிவுத் தபாலில், ஆசானின் புகைப் படம் சென்னையிலிருந்து வந்தது. புகைப் படத்தின் பின்னே திரு. நாராயணஐயரின் கையெழுத்து இருந்தது. அதே நாள் பத்திரிகையில் அவர் இறந்த சேதியையும் பார்த்தேன். திகைத்துவிட்டேன். பிற்பாடு திரு. ராஜகோபாலராவ் என் சார்பில், அவருக்கு, எனக்குப் படம் அனுப்பச் சொல்லிக் கடிதமெழுதியதாய்த் தெரிந்து கொண்டேன்.

திரு. ராஜகோபாலராவ் அவர்களது வீட்டிலிருந்து திரும்பிய தினிருந்து, காலையும் மாலையும் நான் தவருமல் தியானம் செய்யத் தொடங்கினேன். ஒவ்வொரு ப்ரார்த்தனையின் போதும் முதுகெலும்பில் சக்தி உந்துதல் தொடர்ந்தது. எத்தனையோ விஞேதமான அனுபங்கள் ஏற்பட்டன. உடல் தாஞகவே பல ஆசனங்களில் மாற்றிக் கொண்டது. மனதில் ஏதேதோ சேதிகள் வந்தன. இந்தப் போக்கால் மனம் உறுதிப்பட்டு அதற்குப் பிறகு தினசரி வாழ்க்கையில் உணர்ச்சி வசப்படுதல் விட்டுவிட்டது. தினமும் தியானத்தில் யந்திரங்கள், மந்திரங்கள் சில தியான முறைகள், அவற்றின் பயன்கள் இவையெல்லாம் தெளிவாகக் காட்டப்பட்டன. துவக்கத்தில் இவையெல்லம் ஏதோ மனக்கோளாறுகள் என்றே நான் நினைத்தேன். இருந்தும், அவற்றைப் புறக்கணிக்காமல் எனது டயரிகளில் தேதிவாரியாகக் குறித்துக் கொண்டேன். அவை எனது கடமைகள், பொறுப்புக்கள் பற்றிய குறிப்புகள் என்று கண்டு கொண்டேன். அன்றிலிருந்து இன்று வரை எனது பணி, எனது நடவடிக்கை இவற்றை இந்தக் குறிப்புக்களை ஆதாரமாக வைத்துக் கொண்டே நான் அமைத்துக் கொள்கிறேன்.

எனக்கு ஆசான்களோடு தொடர்பு ஏற்பட்டது. அவர்களிடமிருந்து பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். அவர்களது உதவியால் விஞ்ஞானத்திற்கும், யோகத்திற்கும் இருக்கும் ஒற்றுமை எனக்கும் புரிந்தது. பயிற்சியாலும் எனக்கு அனுபவம் நேர்ந்தது. என்னேடு ப்ரார்த்தனையில் சில மாணுக்கர்களும் உட்காரத் தொடங்கிஞர்கள். நாள் செல்லச் செல்ல எண்ணிக்கை கூடியது. ஆரம்ப நாட்களில் அவர்களுக்கு விநோதமான ப்ரகாசமும், அதைத் தொடர்ந்து நல்ல அனுபவங்களும் ஏற்பட்டன. எல்லாவற்றுக்கும்

மேலாக அவர்கள் எந்த வித சிரமமுமின்றி. சுய நம்பிக்கையும், பணிவும் கலந்த ஒரு நிலையை எய்தினார்கள், வாழ்க்கையின் ப்ரச்னைகள் அவர்களைப் பொறுத்த மட்டில் இல்லாமல் போயின. எனக்கும், என்னோடு அமர்ந்து தியானித்த சகோதரர்களுக்கும் இடையே ஒரு அறுக்க முடியாத உறவுத் தொடர்பு ஏற்பட்டு விட்டது. அவர்களது வாழ்க்கையின் முக்யமான நிகழ்ச்சிகளெல்லாம் என்னோடு சம்மந்தப்பட்டதாகவே இருந்தன, இந்த எல்லா உடல்களிலும் இருந்து கொண்டு, ஆட்சி செய்து, அதிர்வும் பரப்புவது, ஒரே உணர்வுதான் என்று கண்டு கொண்டேன். அது ஆசான் உணர்வு.

அது எல்லாம் ஒன்றே என்று தொடர்ந்து காணும் அனுபவம். இதைத் தவிர வாழ்வில் வேறெதுவும் பொய்யாகவும், வீணாகவும் தோன்றுகிறது. இதிலிருந்து சிறிது விலகினாலும் எதுவும் செயற்கையானது. சிலர் என்னோடு அமர்ந்து தியானிப்பதால், ஆனந்த நிலை காணுவதாகச் சொன்னார்கள். சிலர் தங்களது பிணிகள் தணிந்தாய்ச் சொன்னார்கள். இன்னும் சிலர் தங்களது ப்ரச்னைகளெல்லாம் தீர்ந்து, தங்களது வாழ்க்கையின் இன்னல்கள் முடிந்து விட்டதாகக் கருதினார்கள். இவையெல்லாம் ஆசானின் சான்னித்யத்தின் பயனாய் விளைந்ததே என்று நான் முடிவாய்த் தெரிந்து கொண்டேன். சில சமயங்களில் இவற்றுக்கு நான்தான் காரணம் என்று நாம் நினைக்கிறோமோ என்று சோதிக்கக் கூட இந்த நிகழ்ச்சிகள் நடப்பதுண்டு. உதாரணமாக, ஒருவன் தனக்குக் குழந்தை பிறக்கவில்லை என்று நம்மை அணுகி, ஒரு தாயத்தோ, மூலிகையோ கேட்கிறான் என்று வைத்துக் கொள்வோம், அவனுக்கு குழந்தைகள் பிறக்கத்துவங்கி அதன் காரணமாய் நமக்கு அவன் மரியாதை செல்லுத்தும் போது, அது நம்முள்ளே கர்வத்தை ஏற்படுத்தக் கூடாது. த்யானத்தால் மற்றவர்களது நோய்களைத் தீர்ப்பதும் இதே விதமே. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஆசானின் அருளுக்குச் சான்றாக அமைகின்றனவே ஒழிய, இவை சீடனின் திறமையில் அன்று. ஒரு சீடனுக்கு இந்த மனப்பான்மை தொடர்ந்து இருந்து, குருவாகத் தான் ஆக வேண்டும் என்ற அரிப்பு இல்லாதிருக்குமானால், ஆசான் அவன் மூலம் தன்னை மேலும் மேலும் வெளிப்படுத்திக் கொள்கிறார்.

பிரதியாக சீடனும் மேலும் மேலும் ஆசானுக்குள்ளே வாழ்கிறான். இறுதியில் சீடன் ஆசானாகும் மாற்றம் நடைபெறுகிறது. தான் என்ற எண்ணம் தவிர்ந்து சீடன் ஏறுவதும், ஆசான் இறங்குவதும் ஒன்றே. அவர்கள் இருவரும் சந்திக்கும் அந்த முனை ஒரே உணர்வே. அந்த உணர்வே 'நான் உளேன்' என்பது. அது அனைவரிலும், அனைத்திலும்

இருப்பதால், அதுவே ப்ரபஞ்ச ஆத்மாவான, பரமாத்மா என்று குறித்துக் கொள்ளப்பட வேண்டும்.

குண்டூரில் ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் கலை விழாக்கள் நடத்திக் கொண்டிருந்த நண்பர்கள் சிலர், என்னை ஆன்மீகச் சொற் பொழிவுகள் நிகழ்த்துமாறு கேட்டுக் கொண்டார்கள். பங்கு கொள் வோரின் தொகை அதிகமானதால், நாங்கள் வேறொரு பெரிய கூடத் திற்கு மாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று. உள்ளூரில் இருந்த ப்ரம்மஞான சபையினரின் அனுமதி பெற்று, அவர்கள் இடத்தில் எங்கள் நிகழ்ச்சிகளை நடத்தத் தொடங்கினோம். ஒரு நாள் சபையின் நூலகத்தில் ப்ளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய 'ரகசியக் கோட்பாடு (SECRET DOCTRINE) என்ற புத்தகத்தை நான் காண நேர்ந்தது. என் குழந்தைப் பருவத்தில் தந்தையார் இந்தப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்ததை நான் பார்த்திருக்கிறேன். ஆவல் காரணமாக அந்த சபையின் உறுப்பினர் ஒருவரை அந்தப் புத்தகத்தை எனக்குப் படிக்கத் தருமாறு கேட்டேன். அவர் 'இது மிகச் சிக்கலான புத்தகம், இதைப் படித்துப் புரிந்து கொள்வது மிகக் கடினம். இந்தத் துறையில் உள்ள முதியவர்களுக்குக் கூட இது பணியவில்லை என்றார். இந்தப் புத்தகத்தை அடுத்த வாரம் டாக்டர். ஏ.எஸ். சலபதி ராவ் அவர்களிடம் நான் கேட்ட போது, 'நீங்கள் படிக்க வேண்டுமென்றால் நாங்கள் ஆட்சேபிப் பானேன். நீங்கள் தாராளமாக இதைப் படிக்கலாம்', என்று சொல்லி அந்தப் புத்தகத்தின் ஒரு பிரதியை எனக்குக் கொடுத்தார். அதை நான் படிக்கத் தொடங்கியதிலிருந்து, ஆவி வடிவில் பல புதியவர் களின் தொடர்பு எனக்குக் கிடைத்தது. அவர்கள் புத்தகத்தில் உள்ள விஷயங்களை, நான் அனுபவப் படும்படியாக விவரித்தார்கள். புத்தகத்தில் வெளியாகியிருந்த தெய்வீகத் திட்டம் எனக்குத் தன்னைக் காட்டியதோடுமல்லாமல், அதில் என் பங்கு என்ன என்பதையும் எனக்குத் தெளிவாக்கிற்று.

ஆன்மீகத்தில் குரு மரபு, அவர்களது வேலைத் திட்டம், உலக உயிர்களின் பரிணமத்தோடு அவர்களுக்கு உள்ள தொடர்பு, மற்றும் ப்ளாவட்ஸ்கி அம்மையாருக்கும், ஆசான்களுக்கும் உள்ள தொடர்பு, இவையனைத்தும் எனக்கு வெளிப்பட்டன. ஜகத்குருவான மைத்ரேயா, ஞான ஆசான்களான மௌர்யா, கூட்ஹூமி, ஜ்வால்குல், ஸேராபிஸ், மற்றும் ஜீஸஸ் இவர்களெல்லாம் மனித சமுதாய விதியை வழி நடத்திச் செல்லும் ஆசான்கள் ஆவார்கள். ஒரு இடத்தின் காலத்திற்கும், தேவைக்கும் ஏற்ப, முக்தி பெற்ற அவர்கள், மனிதனின் ஆன்மீக முன்னேற்றத்திற்காக உடலெடுத்து வருகிறார்கள். படைப்பின் பரிணமப் போக்கு, இனத்தின் கர்மாவை சமனப்படுத்தல்,

இவற்ருேடு அவர்கள் ஒத்துழைக்கிருர்கள். ஷம்பலா, கலாபா என்று இரண்டு ரகசிய இடங்களிலிருந்தே அவர்களது உயிர்ச் செயல் தோன்றுகிறது.

ஆசான் சி.வி.வி. மற்றும் ஞான ஆசான்களின் பணிகள் ஒன்றுக் கொன்று தொடர்பானவை. இந்த ஒன்றுக்கொன்று தொடர்பான இணைப்பு ப்ளாவட்ஸ்கி அம்மையாரால் நடத்தப்பட்டு வியாபக மானது. ஒரு மனிதன் யோக நிலையை அடைவதற்கு ஏழு பொருத் தங்கள் நிகழ்ந்தாக வேண்டும். ப்ளாவட்ஸ்கி அம்மையார் தனது 'ரகசியக் கோட்பாட்டில்' அதற்கான மூன்று சாவிகளைக் கொடுத்திருக்கிருர். புத்தகத்தின் மூலம் மூன்று சாவிகள் மட்டுமே கொடுக்கப்பட முடியும் என்றும், மற்றவை அளிக்கப்பட முடியாது என்பதையும் அவர் விளக்கி இருக்கிருர். ஆசான் சி.வி.வி.யின் முன்னிலையில் ப்ளாவட்ஸ்கி அம்மையாரைப் பற்றி பேச்சு நடக்கும் பொழுதெல்லாம் அவர் அம்மையார் கூற்றை அப்படியே ஆமோதிப் பதோடு, மீதிச் சாவிகள் ஒரு சீடனுக்கு ஆசானால் மட்டுமே கொடுக்கப் பட முடியும் என்று கூறுவார். இப்படி ஆன்மீகக் குரு மரபு, மற்றும் ஆசான் சி.வி.வி இவர்கள் பணியில் தெளிவும், ஒற்றுமையும் இருக் கிறது. ஒற்றுமையை உணர்ந்து கொள்ள விரும்பும் ஒருவர், ஸ்தாபனங்கள் சமயங்கள் போன்ற குறுகிய எல்லைகளை விட்டு வெளியே வரவேண்டும். எந்த ஞான ஆசானும், எந்தவொரு மதத்தையோ, சமயத்தையோ ஏற்படுத்தியதில்லை. அவர்கள் ஒவ்வொரு முறையும் நியதியை நிறுவவும், மனித சமுதாயத்திற்கு உதவவும் வருகிருர்களே ஒழிய, ஸ்தாபனங்களை ஏற்படுத்த அல்ல. அவர்கள் அவற்றை உருவாக்குவதும் இல்லை, அடக்குவதும் இல்லை.

ஆசானின் ப்ரார்த்தனையில் என்னுள்ளே இந்த ஒருமைப்பாடு நிச்சய மாக நிகழ்ந்து கொண்டிருந்தது. நான் அவர் வழியைப் பின்பற்றும் சிலரோடு என் கருத்துக்களைப் பரிமாற எண்ணினேன். அவர்கள் என் கருத்துக்களோடு உடன்பாடு கொள்ளவில்லை. ஆசான் சி.வி.வி. அவர்களுக்கும், ஞான ஆசான்களுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லையென்றும், ஆசான் சி.வி.வி. அவர்களையெல்லாம் விட உயர்ந்தவர் என்றெல்லாம் பகட்டான எண்ணங்கள் கொண்டிருந் தார்கள். நான் ப்ரம்மஞான சபையினரிடமும் பேசிப் பார்த்தேன். அப்படி ஒரு தொடர்பு இருக்கலாமே ஒழிய, இவையெல்லாம் முக்ய மில்லை என்று அவர்கள் ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள். அவர்களில் பலர் ப்ளாவட்ஸ்கி அம்மையாரின் 'ரகசியக் கோட்பாட்டை'த் திறந்து கூடப் பார்த்ததில்லை என்று தெரிவித்தார்கள். எனக்கோ, பணியின் ஒருமைப்பாடு என்னுள் மேலும் மேலும் வெளிச்சமானது நான் இனியும் மற்றவர்களோடு கருத்துப் பரிமாற்றம், உரையாடல் இவை

யெல்லாம் செய்யாமல், என் பணியைச் செய்வதாகத் தீர்மானித்துக் கொண்டேன்.

இதற்கிடையே சில ஆன்மீக சகோதரர்கள், ஒரு ஜோதிட, ஆன்மீக சங்கத்தைத் துவக்கி, அதில் தானும் ஒரு ஆசிரியனாய் இருக்க வேண்டும் என்று வேண்டினார்கள்.

நான் அவ்விதம் பணி செய்து கொண்டிருந்த போது, 'மிஹிரா' என்ற ஜோதிட ஆன்மிக சஞ்சிகையைத் துவங்கி அதற்கு நான் ஆசிரியனாகப் பொறுப்பேற்க வேண்டுமென்றார்கள். நான் அவ்விதம் பொறுப்பேற்ற போது, அப்பொழுது நிகழ்ந்த எட்டுக் கிரகங்களின் சேர்க்கை, உலக எதிர்காலத்திற்கும் அதற்கும் உள்ள தொடர்பு, இவை குறித்து அந்த சஞ்சிகையில் விவாதித்தேன். அந்த நாட்களில் தியானத்தில் நான் ஒரு வால் நட்சத்திரத்தையும், கோள்களின் குழுவில் அதற்கான காரணத்தையும் கண்டேன். பிற்பாடு, ஆசான் சி.வி.வி அவர்களே தனது சீடர்களுக்கு வால் நட்சத்திரம் பற்றிக் குறிப்பிட்டதாக அறிந்து கொண்டேன்.

நான் எழுதிய கட்டுரையால் கவரப்பட்டு, ப்ரும்மஞான சபையின் மேல்நிலை உறுப்பினரான ஆல்பர்ட்ஸாஸ்ஸி என்பவர் சென்னையிலிருந்து குண்டூருக்கு என்னைக் காண வந்தார். நீலகிரி மலையில் ஒரு ஆச்ரமம் அமைத்துக் கொண்டிருந்த அவர், என்னை யோகச் சொற்பொழிவுகள் செய்ய அழைத்தார். 1963இல் நான் அந்த ஆச்ரமத்தில் ஒரு மாதம் தங்கினேன். அங்கே எனது முதல் நாளில், என்னைத் தனது தியான அறையில் அனுமதிக்கவில்லை, ஏனெனில் ப்ரும்ம ஞான சபையின் கட்டுப்பாட்டில் அது ஒன்றாக இருந்தது. அவர் த்யானம் செய்து கொண்டிருந்த போது நான் எனது அறையில் ஆசான் சி.வி.வி யின் ப்ரார்த்தனையில் ஈடுபட்டிருந்தேன்.

நாளின் முடிவில் திரு. ஸாஸ்ஸி அவர்கள் தியானத்தில் இதுவரை தான் காணாத ஆசான் ஒருவரைக் கண்டதாகக் குப்பிட்டார். கனிவும், கம்பீரமும் பொருந்திய தோற்றம் கொண்டிருந்தார் என்றும் விளக்கி, எனது ஆசான் யார், அவரது படத்தைக் காட்ட முடியுமா? என்றும் வினவினார். ஆசான் சி. வி. வி. அவர்களது புகைப்படத்தை அவரிடம் காண்பித்த போது, அவரது உருவத்தைத் தான், தன் தியானத்தில் கண்டதாக உறுதி செய்தார். உடனே ஆசானுக்குத் தன் வணக்கங்களைச் செலுத்தினார். அதிலிருந்து நாங்கள் இருவரும் சேர்ந்தே ப்ரார்த்தித்தோம், தியானித்தோம். நான் அங்கே தங்கியிருந்த போது திரு. ஸாஸ்ஸி அவர்கள் என்னிடமிருந்து ஆசான் சி. வி. வி. யின் யோக முறைகளைப் பற்றித் தெரிந்து கொண்டார். அந்த ஆச்ரமத்தின் உறுப்பினர்கள் எல்லோரும் தியானத்தில் எங்களோடு சேர்ந்து

கொண்டார்கள். யோகத்தைப் பற்றி மட்டுமல்லாமல், ஞான ஆசான்கள் நடத்தும் வேலைத் திட்டத்தின் ஒருமைப்பாடு பற்றியும் நான் விளக்கினேன். திரு. ஸாஸ்ஸி அவர்கள் ஞான ஆசான்களைத் தவிரவும் ஒரு ஆசான் உண்டு, என்று எப்பொழுதும் தான் எண்ணி வந்ததாகவும், அவரைத் தேடிக் கொண்டிருந்ததாகவும் சொன்னார். மேலும், அப்படிப்பட்ட ஆசான் அகஸ்தியர் ஆச்ரமத்தைச் சேர்ந்தவர் என்றும், நீலகிரி குகைகளில் வசிக்கிறவர் என்றும், அவருக்கு ஒரு ஞான ஆசானின் நேரடிச் சீடரிடமிருந்து நிச்சயமான சேதி கிடைத்த தாகவும் குறிப்பிட்டார். அந்த ஆசானை அகஸ்தியர் என்னும் மாபெரும் ஒளியின் ஒரு பொறி என்று விளக்கினார். நான் தியானங்களில் திரு ஸாஸ்ஸி குறிப்பிடுவது திரு. சி. வி. வி. அவர்களே என்று அறிந்து கொண்டேன். ஆசான் சி. வி. வி. 'அக்வேரிய' யுகத் திற்கான ஆசான். அகத்திய மாமுனி மேல்நிலை அக்வேர்யஸின் (AQUARIUS OF HIGHER CYCLES) மைந்தர் என்று மற்ற நூல்கள் பேசும்.

அடுத்த நாள், எனக்கு ப்ரார்த்தனையில் நேர்ந்த இந்த அனுபவத் தைத் திரு. ஸாஸ்ஸி அவர்களிடம் சொன்னேன். அவரும் தன் தியானத்தின் மூலமாக இதை உறுதி செய்து கொண்டு, தான் குறிப்பிட்ட அந்த இதுவரை தெரியாத ஆசான், திரு. சி. வி. வி. அவர்களே என்றும் உறுதிப் படுத்தினார் ஆசானின் புகைப்படத்தை என்னிடமிருந்து வாங்கி, அதை அவரது ப்ரார்த்தனைக் கூடத்தில் உள்ள பீடத்தில் நடு நாயகமாக வைத்தார். அதுபோலவே, பெல்ஜியம் மற்றும் ப்ரான்ஸ் நாட்டில் அவரது சீடர்களின் பூஜை அறைகளிலும் ஏற்ற மாறுதல்களைச் செய்தார். அன்றிலிருந்து ஆசானின் ப்ரார்த்தனை மேலை நாடுகளிலும் பரவத் தொடங்கிற்று.

மூன்றும் பகுதி

யோக விஞ்ஞானம்

யோக நுணுக்கம்

நித்தியானந்தத்தை அனுபவிப்பதே மனிதப் பிறவியின் இறுதி லட்சியம். வாழ்வு முழுதையும் நாடகமாய்க் கழிப்பதே அந்த அனுபவத்திற்குச் சான்று. மாய நிலையில் வாழ்க்கை, அவிழாத புதிராய், பொறுப்புக் களஞ்சியமாய், கட்டுப்பாடு, கடமை போன்ற சுயவிலங்கிட்ட சிறையாய்த் தோன்றும். யோகப் பயிற்சி, மாய நிலையிலிருந்து ஆனந்த நிலைக்கு வழிகோலுகிறது. வலியும் வாதையும் விளைவிக்கும் கடுமையான ஒழுங்கு முறைகள் கொண்டதே யோகம் என்று சிலர் எண்ணி விடுகிறார்கள், இந்தக் கருத்துக்கும் இவ்விதமான பயிற்சிக்கும் மாயையே காரணம். அவலமும் ஆனந்தமும் எதிரும் புதிருமான இருதுருவங்கள். ஆனந்தத்திற்கு அழைத்துச் செல்லும் வழிமுறையும் ஆனந்தமயமாக இருக்க வேண்டும். ஆனந்தமும், இயற்கை நியதிகளும் ஒன்றுக்கொன்று முரணானவை என்ற நினைப்புக்கும் அறியாமையே காரணம். இயற்கை நியதிகளை இயல்பாய் அனுசரிக்கும் அறிவார்ந்த செயல் ஆனந்தத்திற்கு அழைத்துச் செல்கிறது. அங்கே, மனிதன் விளையாட்டுப்போல் முன்னேறுகிறான். இந்த அறிவார்ந்த செயலே யோகம். அதற்குரிய கருவியே அப்பியாசியின் தேகம்.

மனித உடற்கூறு, அமைப்பு, அதன் பண்புகள், தன்மைகள் இவற்றைச் சரியாக புரிந்து கொள்ள வேண்டியது, அப்பியாசிக்கு அவசியமானது. கடிகாரத்தில் வட்டச் சுற்று, காலச் செலவைக் குறிப்பதுபோல், மனித உடலில் காலச் சக்கரங்கள், காலத்தை வயதாய்க் குறிக்கும். யோகியாகும் ஆர்வமுள்ள ஒருவன், கருவி, அதன் முறைமை, பயன், அதை முறையாய்ப் பயன்படுத்தும் வழி ஆகியவற்றை விவரமாய் அறிதல் தலையாயதாகும். அதன் மூலமே ஒருவன் மாயத் தளையிலிருந்து நீங்கி ஆசானாய் ஆனந்தத்தில் வாழ முடியும்.

'மனித உடல்' எனப்படும் இந்த எந்திரம், ஐந்து நிலைகள் கொண்ட பொருளாலானது. அவை, திடம், திரவம், வெப்பம், வாயு, ஆகாயம் எனப்படும். இந்த ஐந்தையும் நிர்வகிக்க, உடலில் ஐந்து மையங்கள் உள்ளன. அவை, சக்கரங்கள் என்றழைக்கப்படும். சக்கரங்கள், முதுகெலும்பை ஆதாரமாய்க் கொண்டு, நரம்பு நிலையங்கள் மூலம் இயங்குகின்றன. அவை, மூளையுள் மனம் போல், முதுகுத் தண்டின் வழியே, இடைவிடாமல் இயங்கும் சக்திச் சுழல்கள்.

அவற்றில் முதலாவது மூலச்சக்கரம். இது முதுகெலும்பின் வேரிலுள்ளது. அங்கே, இந்தச் சக்திச் சுழலின் இயக்கத்தால், உடலிலுள்ள ரசாயனங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டு தேவையான வரிசைக் கிரமத்தில் இயக்கப்படுகின்றன.

இரண்டாவது மணிபூரகம் தொப்புள் சக்கரம். இது உடலின் திரவத் திசுக்களைக் காத்து நடத்துகிறது. மூலச் சக்கரம் திட உணவை ஏற்று, விநியோகித்து, ஒழுங்கு செய்வதுபோல், இது திரவ உணவைப் பொறுப்பேற்று மனித எந்திரம் முறையாய் இயங்க வழி செய்கிறது. இதன் இயக்கத்தால், உட்கொள்ளும் நீரானது, ரத்தம் போன்ற திரவத் திசுக்களுக்கும், மற்ற கசிவு நீர்களுக்கும் பயன் படுத்தப்படுகிறது. பயனுக்குப் பிறகு, அசுத்தமான நீர்கள், வியர்வையாகவும், சிறுநீராகவும் வெளியே எறியப்படுகின்றன. மணிபூரகச் சக்கரம் தொப்புளைச் சுற்றிய இடத்தில் இயங்குகின்றது.

மூன்றாவது சுவாதிட்டானச் சக்கரம் எனப்படும் மண்ணீரல் சக்கரம். மண்ணீரல், கல்லீரல் இவற்றின் இயக்கத்தின் மூலம், இது உடலில் வெப்பத்தை ஒழுங்கு நடத்துகிறது. இந்தச் சக்திச் சுழல் தான், வெளி வெப்பத்திற்கேற்ப, உடல் வெப்பத்தை அனுசரிக்கிறது. பிராண சக்தி, தடையின்றி நடக்கவும், இந்தச் சக்கரத்தின் முறையான இயக்கமே காரணம். இது மண்ணீரலைச் சுற்றிய தலத்தில் இயங்குகிறது.

நான்காவது, அனாகதம் எனப்படும் இதயச் சக்கரம். சுவாசம், நுரையீரல்கள், ரத்த ஓட்டம், பிராண வாயுவை உள்ளிழுத்து அபான வாயுவை வெளிவிடும்போது சுருங்கி விரிதல் போன்றவற்றிற்கு இது பொறுப்பு. இது, நுரையீரல், மற்றும் இதயம் சார்ந்த தலத்திலிருந்து இயங்குகிறது.

ஐந்தாவது, விசுத்தி எனப்படும் தொண்டைச் சக்கரம். இது, தொண்டையின் அடிப்புறத்தில் இயங்குகிறது. ஒலியை உருவாக்குவதன் மூலம், இது வெட்டவெளியோடுள்ள தொடர்பைப் பராமரிக்கிறது. குரல் நாண்களின் உராய்வு மூலம் ஒலியதிர்வுகளைத் தூண்டி, உணர்வெழும் முனையிலிருந்து குரலை (நோக்கமுள்ள ஒலி) உருவாக்குகிறது. இந்த உணர்வெழும் முனையிலிருந்து ஒலிவெளிப்படுதல் வெளியிலிருந்து அணுக்கள் தோன்றும் இயற்கை நியதியோடு ஒத்திருக்கிறது. விசுத்தியின் இயக்கத்தால், உத்தேசம் சொல்லாய் வெளிப்பட்டு, சொல்வோனிடமிருந்து (உணர்வு) வேறுபடுகிறது. சொல் வெளிப்படும் இந்த நான்கு நிலைகளும் இந்தச் சக்கரத்தின் இயக்கத்தால் நிகழ்கின்றன. இதையே

வேத முனிகள், படைப்புக் கடவுளின் நான்கு முகங்களிலிருந்து கலைமகள் (சரஸ்வதி) வெளிப்படுவதாக உவமானிக்கிறார்கள்.

இவ்விதம், பொருளின் ஐந்து நிலைகள், அண்டத்தின் நுணுக்கப் படிவமான பிண்டமென்றும் மனித உடலில், அமைக்கப்பட்டுள்ளன.

ஆறாவது, ஆக்ஞா எனப்படும் புருவ மையச் சக்கரம். இது, புருவங்களுக்கிடையில் மூளைப் பகுதியில் இயங்குகிறது. இந்த சக்தியின் இயக்கத்தால், மனம், சடத்தைத் தாண்டி, ஒளிமின்னுகிறது. ஐம்புலன்களின் பண்புகளைப் பொழிகிறது. அவை, கேள்வி, பார்வை, நுகர்ச்சி, சுவை, தொடுதலுணர்ச்சியாகும். மேலும், இந்த ஒளி மையத்திலிருந்துதான், கீழுள்ள ஐந்து சக்கரங்களின் இயக்கமும் நிர்வகிக்கப்படுகிறது. இந்தப் பிரகாசத்தின் மையம், பீனியல் சுரப்பிக்கும் (மூளையின் மூன்றாவது குழியின் பின்னுள்ள செயல் விளக்கம் உணரப்படாத சுரப்பி) பிட்யூட்டரி எனப்படும் தூம்பற்ற (ductless) கபச்சுரப்பிக்கும் இடையில் நிலவுகிறது. இவ்விரு சுரப்பிகளுக்கும் இடையே பொறி வீசும் ஒளி, மனமாய் உருமாறிப் புலன்களாய்ப் பராவிப் புறத்தே மறைவுறுகிறது. அப்பியாசி, இவ்விரு சுரப்பிகளைப் பாலமிட்டு இணைக்க வேண்டும். இறைவொளியை நிரப்பும் முயற்சியே பாலம். இந்த முயற்சி இருவகையானது. ஒன்று, பொதுப்படையானது. அதன்படி, மனிதன் உள்ளிருந்து வெளியே புறஞ்சார்ந்து செலவாதலால் கீழ்ப்பாலம் அமைகிறது. இன்னொன்று, அகமுயற்சி– ஆசானின் அருளாலும் ஆசியாலும் நடப்பது. ஆசான் சி.வி.வி. தன் பெயரை அழைத்துப் பிரார்த்திக்கும் அப்பியாசிகளுக்கு, மேற்பாலம் அமைத்துத்தர முன்வந்தார். உராய்வில் நெருப்பெழுங்கால், ஒளி தோன்றுகிறது. அதுபோல், ஆசானின் சி.வி.வி.யின் பெயரைப் பிரார்த்திக்கும் அப்பியாசியின் உள்ளத்தில் ஆசானின் சான்னித்யமே தோன்றுகிறது. இதனால், வெளியிலிருந்து அப்பியாசிக்குள், பிராணசக்தி பாய்கிறது. அப்படி உட்பாய்ந்த பிராணசக்தி, அவனுடலின் பாளங்களைச் செயல்படுத்திச் சரிசெய்கிறது. அவனது வானுடலை மீண்டும் நிறுவி, புத்துணர்ச்சியூட்டி தேவையான பகுதிகளில் திருத்தங்களும் செய்கிறது. இவ்விதமாக, அது தேவையான ஒழுங்கு வரிசையை நிறுவி உறுதி செய்கிறது. வானுடல் தூய்மையானபின், யோகநிலை, புத்திப்படிவத்தில் சேர்ப்பிக்கப்படுகிறது. இந்த யோக நிலை எய்துங்கால், இருசுரப்பிகளும் இணைக்கப்படுகின்றன. புத்திப் படிவத்தில் தோன்றும் ஒளி, அப்பியாசிக்குப் பகுத்தறிவுத் திட்டத்தைக் கொடுக்கிறது. அதன் மூலம் அவன் தேவையற்ற ஆட்கள், நிலைமைகள், செயல்களைத் தவிர்த்துக் கொள்கிறான், நிலைப்பு, நிலையாமையைப் பற்றிய அறிவால், துன்ப நிலையைக் கடந்தேறுகிறான். இவ்விதம், அப்பியாசி, நித்யானந்த

நிலையைப் பெறுகிறான். எப்படி, வீட்டில் பொருட்கள், ஒளியின் உதவியால் அடுக்கியமைக்கப் படுகின்றனவோ, அதேபோல் பகுத் தறிவுத் திட்டம் உடலின் கீழ்ப்படிவங்களிலுள்ள அணுக்களில் ஒளி யேற்றுகிறது. இது முழுமை, அழிவின்மை என்றழைக்கப்படும் அமரநிலைக்கு அழைத்துச் செல்கிறது. அண்டம், பிண்டம் இவற்றின் சக்தியும் கூர்மதியும் ஒன்றோடொன்று தொடர்பை நிறுவிக் கொள் கின்றன.

ஏழாவது. சஹஸ்ரஹாரா எனப்படும் தலைச்சக்கரம். இது, பிண்டத்தில் அண்டத்தின் பிரதிநிதி. கோள்கள், கதிரவன், சூரியமண்டலம், பிரபஞ்சம் இவற்றோடு தொடர்புடையன இதன் அறிவுகள். இவை தனிமனிதனைச் சார்ந்தவையல்ல.

பன்னாட்டு அமைப்பு முறைகள், அனுபவங்கள் இவற்றை உள்நாட்டுக்குக் கொண்டுவரும் தலைநகரில் வசிக்கும் அகில உலகப் பிரதிநிதி போலத்தான் இதுவும். எனவே, சஹஸ்ரஹாரச் சக்கரம், அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் நுழைவாயில். இந்த மையத்தைத் தொடும் உயிர், எங்குமுள நிலையை எய்துகிறது. அதன் பிறகு, அந்த ஆத்மா, விடுதலைபெற முயலும் இளைய சகோதர சகோதரி களுக்கு உதவும் பொருட்டுக் கீழிறங்குகிறது. இந்த இறங்குதலும் அதே முதுகுத் தண்டின் வழியேதான்! இறங்கும் போக்கில், உயிரின் எல்லா நிலைகளும், உள்ளும் புறமும் ஒளிமயமாகின்றன. அந்த ஆத்மா, தன்னிருப்பால், தொடுதலால், பேச்சால், அணுக்களில் காந்த மேற்றுகிறது. இது காந்தப் பிரகாச முறை. சஹஸ்ரஹாரத் திலிருந்து, அண்டத்தின் பகுதி உணர்வாய் இறங்கிவரும் ராஜயோகி அனாகதம் என்னும் இதயச் சக்கரத்தில் தங்கி, அங்கே அன்பின் உருவாய்த் திகழ்கிறான். அந்த மையத்தில் இருந்தபடியே, இருபுறமுமுள்ள சக்கரங்களை, அன்பின் காந்தத்தால் ஆள்கிறான். இந்த நிலையில், யோகசாதனை முழுமையடைகிறது. இந்த ஏற்ற இறக்க யோகமே ராஜயோகம் என்று அழைக்கப்படுகிறது. ஞான ஆசான்கள் மனிதர்களிடையேவளைய வருவதெல்லாம், இவ்விதமான நிலையை வழங்கி, உயிர்களைக்காத்து விடுவிக்கவேயாம். இதுவே சி.வி.வி. யின் யோகத் திட்டம்.

'ஆதி இயற்கை என்னும் ஒரே சக்தியிலிருந்து தோன்றுவனவே சக்கரங்கள் எனப்படும் சக்திச் சுழல்கள். அது, ஆதி சக்தி, பிரபஞ்ச சக்தி என்று இன்னும் பல பெயர்காளாலும் அழைக்கப்படும். இதை, ராஜயோகிகள் குண்டலினி என்பர். பகவான் கண்ணன் "என் இயல்பு" என்றான். என்னிலிருந்து தோன்றிய இவ்வியல்பின் மூலம், பல வித உயிர் நிலைகளையும் அவற்றிற்குத் தொடர்பான

ஆக்க அறிவுகளையும் சமைத்தபடி, 'நான்' இறங்கி வருகிறேன் என்ருன். பிரும்மத்தை அனுபவிப்பவன், பிரும்ப நிலையை எய்துகிருன். இதே விதமாகவே ஆசான் சி.வி.வி. யும் "என்னைத் தன்னுள் எழுப்புவோன் நானாகவே மாறுகிருன்" என்று வாக்களித்தார்.

உடலிலுள்ள குண்டலினி சக்தி, ஆறு சக்கரங்கள் மூலம் பரவி இயங்குகிறது. மூலாதாரத்திலிருந்து சஹஸ்ரஹாரா வரை யோக சாதனை மூலம் அது சக்கரங்கள் வழியே மேலேறுகிறது. அதன் போக்கில், ஆன்மா, தன் ஆதி நிலையை அடைகிறது. வேறுவிதம் சொல்வதானல், தனி உணர்வு, பிரபஞ்ச உணர்வாய் உருமாறுகிறது. குண்டலினியின் இதே சக்திதான், பரநிலையிலிருந்து இறங்கி வந்து உணர்வுப் பகுதிகளைப் படைக்கிறது. இதுவே பிரபஞ்சத்தில் அணுக்களாய் இறங்கி வந்து, மீண்டும் பிரபஞ்சத்தில் கலக்கிறது. இதே சக்திதான், கோள்களின் வட்டச் சுழற்சியாகவும், அவற்றிடையே ஈர்ப்பாகவும் நிலவுகிறது. இதுவே சூரியக் கோளத்தின் நிர்வாக சக்தி; பலவகையான சூரிய மண்டலங்களின் சூரிய மையங்களுக்குப் பிறப்பிடம்.

இந்த சக்தியின் இருப்பைத் தேர்ந்து, அதனுடன் ஒத்துழைத்தலே யோகத்தின் நோக்கங்களில் ஒன்று.

யோகமும் சோதிடமும்

சமாதி எனப்படும் நிலையில், படைப்பின் எல்லா உண்மைகளும், ஒருங்கிணைகின்றன. அங்கே அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் இடையே ஒருமைப்பாடு தெளிவாகவும், மிகவும் அணுக்கமாகவும் அமைகிறது. இந்த ஒருமையைப் புரிந்துகொள்ள, சோதிடம் அவசியமாகிறது!. இதனால்தான் வேதத்திற்கான ஆறு முறைகளில், சோதிடம் முதலாய முறையாய்த் திகழ்கிறது.

ராஜ யோகத் தியான முறையில், காலச் சுழற்சி, கோள்கள் மற்றும் விண்மீன்களின் அசைவு இவற்றின் ரகசியத்தை அறிதல் இன்றியமையாதது. இதன் தொடர்பான விஞ்ஞானம் மூன்று வேறுபட்ட காண்டங்களில் போதிக்கப்பட்டது. அவை முறையே (1) வானியல், (2) சோதிடம், (3) இணையறிவு. யோக அனுபவத்திற்கு, முதலிரண்டு காண்டங்களைப் பற்றிய அறிவு தவிர்க்க முடியாதது. சோதிட அறிவு, யோக ஞான மலர்ச்சிக்குத் துணைசெய்கிறது. அவ்வித அறிவின் அனுபவம், யோக அனுபவத்தைத் தருகிறது, முன்னோர் கற்பித்த சோதிடத்தின்படி, புறத்தே அறிவு, அகத்தே அனுபவம். யோகமெனும் ராஜ வீதியில் அனுபவமே அவசியம், அறிவன்று. அனுபவத்தால் விளையும் அறிவு தன்முதலானது; முதல்தரமானது, சத்திய முழக்கமானது. அனுபவ மற்ற அறிவோ புத்திப் புரட்டு; அது முதன்மையானதல்ல. சோதிட அறிவுள்ள பலரிடமும், அதன் பயனைப் பற்றிய தவறான அறிவு இருக்கிறது. ஜாதகம் கணிப்பதிலும், ஆருடம் சொல்வதிலும், ஆதி விஞ்ஞானம் அபசாரம் செய்யப்படுகிறது. இந்த விதமான ஜோசியத்திற்கும் யோக சாதனைக்கும் பொருத்தமே கிடையாது. யோகத்திற்கும் இதற்கும் காததூரம். கோள்கள், யோகிகளை நிர்ப்பந்திப்பதோ பாதிப்பதோ இல்லை. எனவே, யோகிகளுக்கு ஜாதகம் கணிப்பதும், குறிசொல்வதும் பயனற்ற செயல்.

ராஜயோக சாதனைக்கான சோதிடம், ஆருட ஜோசியத்திலிருந்து அறவே வேறுபட்டது. முன்னது. அண்டப் பிண்டப் பிரபஞ்சங்களை, ஒன்றுக்கொன்று தொடர்பு ஏற்படுத்தி ஒருமை காண்பதற்கான வழி. சூரிய ராசிகள் - மனித உடலின் பகுதிகள், கோள்கள்-மனித நடத்தைப் பாங்கு, இவற்றுக்குள்ள தொடர்பை அறிதல் அவசியம். ஒருவனது நடத்தை இயல்பாய்த் தோற்றங்கொள்ளும் முன்வினைத் தொகுப்பை, அவனைப் பொறுத்த கோள்களின் அசைவுகளோடு

தொடர்புபடுத்திப் பார்த்து அறியத் தெளிவான வாய்ப்பிருக்கிறது. ஒத்திசைவு ஞானத்தால் இந்த உறுதிப்பாடு நேர்ந்தபின் செய்யப் படும் பிரார்த்தனையால், முன்வினை சமனமாகிறது.

ஒத்திசைவு ஞானத்தின்படி, ஒவ்வொரு மனிதனும், ஓர் எதிர் காலச் சூரிய மண்டலம். அவனுள், 12 சூரிய ராசிகள், ஒன்பது கோள்கள், விண்மீன்களெனப்படும் ஆயிரக் கணக்கான சூரியன்கள், சந்திரன் செல்லும் 27 நட்சத்திரக் கூட்டம் யாவுமுள்ளன. இந்த ஞானம், ஓர் அப்பியாசி, தன்னுடலிலேயே இவையனைத்தையும் அனுபவிக்கத் துணையாகிறது. உட் பிரதிபலிப்பாய், பிரபஞ்சம் முழுதும் அனுபவிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் வெளிபட்டு, காலப் போக்கில், மெள்ள மெள்ள விரிவதற்காய், முழு வீரியத்துடன் விதையுள் ஆயினும் விருட்சம்போல் தானிது. ஊன்றப்பட்டதும், சிருஷ்டியின் போக்கு மீள முடியாதது. விதை, மரமாய்க் கிளைகளாய் இலைகளாய் மலர்களாய்க் கனியாய் மீண்டும் விதையாய் உருவிரிகிறது.

இந்தப் போக்கும் அசைவும் வட்டச் சுற்ருய் வந்தாலும் ஒவ்வொரு முறையும் புதுமைதான். விவரத்தில் மறுபகர்ப்பில்லை. தத்துவம் ஒன்ருகவும், விவரம், ஒவ்வொரு சுழற்சியிலும் புதுமையான தாகவும் இருக்கிறது.

அப்பியாசி, தன் முன்னேற்றத்தை அறிய, கோள்களின் சுழற்சி அசைவைப் புரிந்து கொள்ளல் வேண்டும், கதிரவன், கண்; சந்திரன், மனம்; செவ்வாய், உறுதி; புதன், புத்தி நடப்பு; வியாழன் ஆனந்தமும் அதனல் விளையும் ஞானமும்; வெள்ளி, அழகுச் சீர்மை அனுபவம்; சனி, தன் வரம்புகளைத் தானறிதல்; யுரேசனஸ், காலங் களில் மாற்றம்; நெப்டியூன், ஆழ்வில், ''நான்'' நிலையை அனுபவித்தல்.

தூல உடல், மனம் மற்றும் ''நான்'' இந்தச் சேர்க்கையே குறிகள். அவை முறையே புவி, சந்திரன், சூரியன் என்னும் தத்துவங்களின் பிரதிநிதிகள். நிலவு, புவியைச் சுற்றுங்கால். புவி சூரியனைச் சுற்றி வருகிறது. நமது சூரிய மண்டலத்தின் சூரியன், வேறு 11 சூரியன் களோடு ஒரு மையத்தைச் சுற்றி வளைய வருகிறது. இவ்விதமாய் 12 சூரியன்கள் கொண்ட ஒரு குடும்பம், 11 வேறு குடும்பங்களோடு (மொத்தம் 12) ஒரு பிரபந்த மையத்தைச் சுற்றி வளைய வருகின்றன. முழுமை உணர்வுள்ள இந்தக் கோள்கள், ஒரு சுழற்சியில் தோன்றி, வளையமிட்டு மீண்டும் அசைவில் லயிக்கின்றன. ஒன்றையொன்று சுற்றுமிந்தக் கோள்களின் வட்டப்பாதை, மலர்க் கொடிகள் பின்னிக் கொள்வது போல் தோன்றுகிறது. அசைவிலேயே தோன்றி லயிக்கும்

அலை, நீர்மேல் எழுத்துக்கு நிகராகும். வேதாந்திகள் இதை நிலையாமை என்றறிவர், யோகிகள், இதைப் பிறக்கும் தருவாயிலுள்ள திகழ்ச்சி என்று காண்கிறார்கள். இதை நிலையாமை என்போர், அவ்விதம் கருதப்படும் நிலையிலிருந்து தப்ப முயன்று மடிகிறார்கள், இதை, எப்போதும் மாறுவதாய், நிரந்தரமாய் பிறக்கும் தறுவாயி லுள்ளதாய் காண்போர், பிறப்பிறப்பைக் கடந்து, அவற்றின் பாதிப்பற்ற நித்தியானந்த நிலையை எய்துகிறார்கள். அவர்கள் போக்கோடு இசைவுற்று, கலக்கும் தறுவாயில் அதிலாழ்கிறார்கள். முதலாமவர், கலக்கும் தறுவாயில் இறக்கிறார்கள். பின்னவரோ. கலக்கும் செயற்போக்கை அனுபவிக்கிறார்கள். அதனால் சிருஷ்டி தோன்றுங்கால், அவர்கள் மீண்டும் உணர்வோடு எழுறுகிறார்கள்.

இந்த அனைத்தும் உள்ளார்ந்த விழுமிய சோதிடமே. ஞான ஆசான்கள் வகுத்த யோக சாதனைக்கு ஆதாரம், அதில், நம் கடமை, பொறுப்பு, அவை தொடர்பான கட்டுப்பாடு இவற்றைக் காண்கிறோம். புவியைச் சுற்றும் நிலவு, உடலுள் நிலவும் மனத்தின் நேர்பகர்ப்பு. இவையிரண்டுக்கும். ''நான்'' எனும் மையமே ஆதாரம். இந்த ''நான்'', சூரியனின் நேர்பகர்ப்பு. இந்த மூன்றின்-புவி, நிலவு, கதிரவன்-அசைவு, பிறைகளைக் கொணர்கிறது. அவையே மனிதனின் மனப்பாங்குகள். மனதில் தோன்றி மறையும் உத்தேசங்கள், இம் மூன்று தத்துவங்களைச் சார்ந்தவையே, இதை, அக்கறையுடன் கவனிக்கும் அப்பியாசி, தன் நடையையும் மனத்தையும் சீர்செய்து கொள்கிறான், அதே விதமாய், மற்றவரது மனங்களை வழிநடத்தி ஒழுங்கு செய்யும் பொறுப்பையும் மேற்கொள்கிறான். காந்த ஈர்ப்பு மறுப்பை, அமாவாசை, பௌர்ணமித் தத்துவங்களென்று புரிந்து கொள்கிறான். அதே போல், விருப்பு வெறுப்புக்கள், கோள்களின் அசைவால் கடலில் தோன்றும் வேலை ஏற்ற இறக்கங்களே என்றும் புரிந்து கொள்கிறான். காலத்தின் செல்திசையைப் புத்திசாலித்தனமாக புரிந்துகொள்வதன் மூலம், தனது மற்றும் மற்றவரது விருப்பு வெறுப்பு அலைகளின் கடுவிசையிலிருந்து அவன் தப்பினான். இவ்விதம். அவன் உணர்ச்சி உலகத்தின் சிக்கல்களிலிருந்து மீண்டு, அவற்றைக் கடந்து வாழ்கிறான்.

இதற்கான மொத்த வழிமுறையும் வேதத்தில் அடிப்படை. புராணங்கள் இதை விளக்குகின்றன. கடவுளின் உதயம் மற்றும் அவன் லயிக்கும் நடுநிசி என்று இவையனைத்தும் ஒருங்கிணைப்பாய், கண்ணனின் கீதையில் காணப்படுகிறது. ஞான ஆசான்களும், ஆசான் சி.வி.வி.யும் இதன் தொடர்பான பிரார்த்தனைகள், பயிற்சிகள் தியானங்களை உலகிற்கு வழங்கியுள்ளார்கள். ஆசான் சி.வி.வி. தனது சோதிட விஞ்ஞானத்தில், கோள் சரிக்கட்டும் பயிற்சிகள்,

கோள் பயிற்சிகள், நட்சத்திரப், பயிற்சிகள் ராசிப் பயிற்சிகள், திருத்தப் பயிற்சிகள் போன்றவற்றைக் கொடுத்துள்ளார். இதன் மூலம், மனித உடலின் தூல சூக்குமப் பாளங்கள் திருத்தம் பெற்றுத் தூய்மையாகி, முன்வினை சமனமாக ஏதுவாகிறது.

மனித உடலின் தூல, ஆவி நிலைகளுக்கும். 12 சூரிய ராசிகள், 9 கிரகங்கள் இவற்றுக்கிடையே இணைத்தொடர்பு ஏற்படுத்தும் வழி முறைகள், ஆசானின் யோகத்திலுள்ளன. அது போல், தூய ஆவி யுருக்களைத் தூய்மை செய்து ஒளியேற்றி யோக நிலையை அனுபவிப் பதற்கான வழி முறைகளும் உள்ளன. ஞான ஆசான்கள், சோதிட விஞ்ஞானத்தைத் தெளிவாகவும், எளிமையாகவும் விளக்கி. தங்களைப் பின்பற்றுவோர், அவற்றை அனுபவிக்குமாறு செய்தார்கள். இதன் விவரங்களை அறிய விரும்புவோர், இந்த விஞ்ஞானத்தை அலைஸ் எ.பெய்லியின், மறை சோதிடம் (Esoteric Astorology) ஆலன் லியோவின் ஒருங்கிணைப்புக் கலை (The Art of Synthesis) போன்ற புத்தகங்களில் காணலாம். ஞான ஆசான்கள் வகுத்த சோதிடத்திற்கும் ஆசான் சி. வி. வி. யின் வழிமுறைகளுக்கும் இடையேயுள்ள பாலம், எனது ஆன்மிக சோதிடம் (Spiritual Astrology) என்னும் நூலில் காணப்படுகிறது.

முன்வினை. நம்மில் நமது தன்னியல்பாய் விளங்குகிறது. கோள் கள், நமது நடத்தை இயல்பில் புரட்சியை ஏற்படுத்துகின்றன; இதனால் முன்வினை சமனமாகிறது: இது, தற்சார்பு தன்னியல்பு இவற்றைக் கடக்க ஏதுவாகிறது. சராசரி மனிதனின் மேல், கோள்கள் அதிகாரம் செலுத்துகின்றன; அப்பியாசிக்கு வழிகாட்டுகின்றன; யோகிகளுக்குச் சேவை செய்கின்றன. உண்மையில், கோள்கள், பரம்பொருளையும் திட்டத்தையும் பணிந்தே இயங்குகின்றன. படைப் புள்ள எந்த உயிருக்கும், கோள்கள் அதிகாரங்களோ எதிரிகளோ அல்ல. இயற்கையோடு இசைவுறாதோர், கோள்கள் தடைகள், இடர் கள், அனுகூலமற்ற அம்சங்களை ஏற்படுத்துவதாய் எண்ணி விடுகிறார்கள். இயற்கையோடு இயைந்து வாழ முன்வருவோர்க்கு, அவை வழிகாட்டி களாய் இயங்குகின்றன. யோகி, வரிசை ஒழுங்கு பெற்ற பிறவியா தலால். திட்டத்தை ஈடேற்றுவதில், அவை அவனோடு ஒத்துழைக் கின்றன. ஆசானின் யோகப் பாதையில், பிரபஞ்ச நேயம், சகோதரத் துவம், பரம்பொருளின் முழுவியாபகம் இவை, அதிக முயற்சியின்றி அதிசுலபமாய் அனுபவிக்கப்படுகின்றன.

ஆசான் சி.வி.வி. சில நேரங்களில் கோள்களைக் குறித்து சில மறையுண்மைகளைச் சொல்வதுண்டு. உதாரணமாய், நமது சூரிய மண்டலத்தின் கோள்கள் சோம்பலானவை, நமது பொறுப்புக்களை

முறையாய் நிறைவேற்றுவதில்லை என்றும் இதைச் சரிக்கட்டவே தானிறங்கி வந்ததாகவும் ஒருமுறை கூறினர். அதுபோல், நமது பூமிக்கோள், ஓர் உருத்திரிவால் அவதியுறுவதாகவும், கோள்களுக்கு இடையேயுள்ள தொலைவு மாறி வருவதாகவும் கூறினர். இன்னொரு முறை. இத்தக் கோட்டம் சரிசெய்யப்பட்டால், எல்லோரும் அமாவாசையற்ற பௌர்ணமியை அனுபவிப்பார்கள் என்றார். இந்தக் கூற்றுக்களெல்லாம், மனித உடலினுள்ளும் வெளியுமுள்ள சூரிய, பிரபஞ்ச மண்டலங்களைக் குறித்தவை. அவை தனி மனிதர்களின் வேறுபட்ட நடத்தை இயல்பையும் குறிக்கின்றன. பக்தியுடன் இந்த வாக்கியங்களைச் சிந்தித்தால், அப்பியாசி உள்ளே மலர்ச்சி பெறுவான். இது, குழுக்களுக்கும் பொருந்தும்.

யோகமும் ஆன்மிகம் மேம்பாடும்

படைப்பின் பரிணாமத்தில், மனிதப் பிறவியே ஒப்பற்ற வாய்ப்பு. மனித உடலின் உருவாக்கத்தில் பௌதிக வளர்ச்சி என்பது, கிட்டத் தட்டச் செம்மை நிலையை அடைகிறது. அதுபோல், சமூகப் பரிணாமும் மனிதப் பிறவியில் உயர்வுகளை அடைகிறது. புவியில் இதுவரை நடந்தேறிய உயிர்களின் வளர்ச்சி, யாக்கையில் சம்ஸ்காரம் எனப்படும் நடத்தைப் பாங்குகளாய் இடம் பெறுகிறது. சிருஷ்டியின் போக்கில் எண்ணற்ற மனித அலைகள், இதுவரை பூமியில் தோன்றியுள்ளன. ஒவ்வோரலையும், அதற்குரிய சிறப்புக்களோடும், ஆன்மிக தர்மங்களோடும் சில ஆயிரம் வருடங்கள் தங்கின. அவ்விதம் ஏழு இனங்கள் வந்து சென்றபின், அதே வரிசையில், சுழலாய் ஏழினங்கள் தோன்றுகின்றன—ஞாயிறு, சனியைத் தொடர்வதுபோல். அவ்விதம் 14 மனித இனங்கள் தோன்றி, வாழ்ந்து மறைந்த பின், மிகவும் ஒளிபொருந்திய மனித அலையொன்று தோன்றுகிறது. வளர்பிறையில் 14 இரவுகளுக்குப் பின் முழுமதி தோன்றுவதுபோல்! இந்த மனிதக் கிரணம் இரவுகளில் பௌர்ணமி போல். அதன்பிறகு 14 மனித இனங்கள் தோன்றுகின்றன. அதைத் தொடர்ந்து ஒரு பிரளயம். இது, நிலவற்ற இரவு போலாகும்.

ஒவ்வொரு மனித இனத்தின் காலவரை. முனிவர்களால் மன்வந்தரம் என்று அழைக்கப்பட்டது. இனத்தை வழிநடத்தும் கூட்டு மனமே மனு. மனு எனப்படும் இவ்வறிவு, ஓர் ஆன்மாவாய், மனித இனத்திற்கு ஒளியூட்ட, தேவைக்கேற்பப் பலப்பல பிறவிகளை எடுக்கிறது. இத்த ஆன்மா. அந்த மன்வந்தரத்தின் மனுவாய்க் கருதப் படுகிறது. தற்போதைய மன்பதை, ஒரு மன்வந்தரச் சுழற்சியில், ஐந்தாவது இனம். இந்த மன்வந்தரத்தை ஆளும் மனுவின் பெயர் வைவஸ்வதா. இவருடைய வழிகாட்டுதலின் படியே தற்போதைய மன்பதை வளர்ச்சிபெற்று வருகிறது. ஒவ்வோர் பிறவியும், ஆன்மிகத்தில் தானே வளர்ந்து, இளைய பிறவிகளின் ஆன்மிக மேம்பாட்டுக்கு ஒத்துழைக்கிறது. அவ்வித மேம்பிறவிகள், (1) ரிஷிகள் (2) தேவர்கள் (3) பித்ருக்கள் என்று வரிசை பெறுவர். ரிஷிகள் மேன்மையில், மனிதப் பிறவிகளைக் காட்டிலும் உயர்ந்தவர்கள். இவர்களில் ஒரு பகுதியினரை ஆசான்கள் என்று பிரும்மஞான சங்கத்தார் அங்கீகரிப்பர் கள். மன்பதைக்கான அவர்களது தொண்டு நிரந்தரமானதால், மரிக்காமல், சூக்குமத்தில் அவர்கள் வாழ்கிறார்கள். தேவைக்கேற்ப தூய

உடல் பூண்டு, தேவைக்கேற்ப விட்டு விடுகிறார்கள். அவர்கள் மரணத்தைக் கடந்தவர்களாதலால், எல்லாப் பிறப்புகளிலும், இறப்புகளிலும் தங்கள் அடையாளத்தை அறிந்தே இருக்கிறார்கள். அவர்கள், திட்டத்தையும், அதில் அவர்கள் பங்கையும் உணர்ந்துள்ளவர்கள்.

ஒவ்வொரு மனிதனிலும், பல ஜனன மரணங்களால் விளைந்த வளர்ச்சி, அவரது நடத்தை இயல்பாய்த் தங்கிவிடுகிறது. இந்த இயல்பே, மரங்களாய் விரியக் கூடிய வீரிய விதை. மனிதனில் இந்த வீரியம்' குண்டலினியில் உள்ளாழ்ந்திருக்கிறது. சிருஷ்டிக்கப்பட்ட எந்த உயிருக்கும் பரம்பொருளே முதல் அனுபவமாதலால் அதுவும் விதையில் முதல் சமஸ்காரமாகத் தங்கியிருக்கிறது. பல ஜனன மரணங்கள் மூலமாய், மற்ற அனுபவங்கள் இந்த அனுபவத்திலிருந்தே கிளைத்து, நடத்தை இயல்பாய் அமைகின்றன. அனுபவங்கள் யாவும் அந்த ஒற்றை அனுபவத்தின் கிளைகளேயாதலின், மனித வாழ்வில் ஒரு கால கட்டத்தில் கடவுள் எனப்படும். அந்த ஒன்றையொன்றை நோக்கி மீளுதல் நடைபெறுகிறது. பெரியோர், இதை ஆனந்த நிலை என்பர். இந்தக் காரணத்தால் தான், ஒவ்வொரு மனிதனும், ஆனந்த நிலையில் வாழ, தனக்கே உரிய முயற்சியில் ஈடுபடுகிறான்.

மேற்சொன்ன குண்டலினி, உள்ளிருக்கும் பிராண சக்தியேயன்றி வேறில்லை. ஆவி, நீராய்த் திரவப்படுதல் போல், வரம்பற்ற உணர்வு குண்டலினியாய்ச் சுருங்கி மனித உடலில் சிறைப்பட்டிருக்கிறது. வெளியே நிலவும் சக்தியோடு நம் உட்சக்தியை (குண்டலினியை) இணைக்கும் ஓட்டம் ஒன்று உண்டு. இந்த இணைப்போட்டம், நதிக்கும் கால்வாய்க்குமுள்ள தொடர்புபோல. இந்த ஓட்டத்திற்கு, உடலிலுள்ள தூலத்தின் பௌதிகத் தன்மைகள் தடையாயுள்ளன. நீர், பனிக்கட்டியாய் உறையும் போது தற்காலிக திடத்தன்மை பெறுவதுபோல், உள்ளிருக்கும் பிராண சக்திக்கு, பரிணாமத்தால் நேர்ந்த வரம்புகள் சில உண்டு. இந்த வரம்பிலிருந்து விடுதலை பெறுவதே 'யோக நிலை" எனப்படும். உடலிலுள்ள போதே, இந்நிலை எய்தற்கான வழியே ஆசான்களின் ராஜயோகமாகும். தன்னிடம், தம்மை ஒப்புவித்தோரைக் காந்தப் படுத்தி, அவர்களை இரும்புத் துகள் நிலையிலிருந்து விடுவிக்கும் யோக முறை. முதலில் கண்ணபிரானால் நிறுவப்பட்டது. மீண்டும் இந்த யோகமுறை மூலம். ஆசான் சி.வி வி. மனித இனத்தை வாழ்வித்தார். அவரைப் பற்றி "நாடி" பேசுகிறது என்னைப் பணிவோன், நானாகவே உருமாறுகிறான்". ஆசானை வணங்குவோர், ஆசான் உணர்வைப் பின்பற்றுவோராய் அவருள் வாழ்ந்து படிப்படியாய், ஆசான்களாகவே மாறிவிடுகிறார்கள். இதுவே "நாடி".

குண்டலினி சக்தி, சுயம்பிரகாசமானது; சுயச் சார்பானது. ஆசானிடம் தங்களை ஒப்புவித்தோரின் தனிப்பட்ட குண்டலினி வெளி

யிலுள்ள மஹா குண்டலினியோடு ஒன்றுகிறது; பூமியின் குண்டலினியோடு சேர்ந்து துடிக்கிறது; மெள்ள மெள்ள, மற்ற கோள்களின் குண்டலினியோடு இசைவுற்று சூரிய மண்டலக் குண்டலினியை எட்டுகிறது. இறுதியில், அது பிரபஞ்சக் குண்டலினியாய்த் தன்னை அடையாளங்கண்டு, முழுமையாகவும், நிறைவாகவும் விரிந்து கொள்கிறது. இவையனைத்தும், ஒருவன் தூல உடலிருக்கும் போதே நடைபெறுகின்றன. இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. ஆசான் வகுத்த யோக வழியில், யோகம், தியானம், சமாதி போன்ற நிலைகள், உணர முடியாத உறக்கம் போன்ற நிலைகளல்ல.

''இது ஒரே சமயத்தில், எல்லா நிலைகளிலும் ஒருங்கி வாழ்தல்'' என்கிறார் ஆசான் சி. வி. வி. இந்த நிலை எய்தற்காய்ச் செயல்படும் குண்டலினியை, ஆசான், ''அறிவுள்ள மின்சாரம்'' என்று விளக்குகிறார்.

புலன்களையும், மனத்தையும் தடைசெய்தல் ஆசானின் யோக வழியன்று. யோக உணர்வென்னும் மலர் உணர்வின் மையத்திலிருந்து விளிம்புவரை, உள்வெளியாய் விரிகிறது. இது, வெளியிலிருந்து மொட்டைத் திறக்கும் முயற்சியன்று. ஆசான் உபதேசிக்கும் சமாதி நிலையில் உணர்வு உண்டு. எங்கே உணர்விருக்கிறதோ, அங்கே மரணத்திற்கு இடமில்லை. உணர்வின் மையத்திலிருந்து, தூலம் பிரிவுபெறுவது, சடத்திற்கு மரணம் என்றழைக்கப் படுகிறது. எனவே, மரணம் பௌதிக நிலைக்கேயன்றி, யோக நிலையிலுள்ள உணர்வுக்கோ, மனதிற்கோ, புலன்களுக்கோ அல்ல.

மனித உயிர்களில், குண்டலினி சக்தி, மும்மையாய் விளங்குகிறது. பரிணாமத்தின் மூன்று நிலைகளான தாது, தாவரம், பிராணி நிலைகளின் அனுபவம் அதற்கிருக்கிறது.

மனித நிலை, நான்காம் நிலையை நோக்கிய வழியில் பாதிவழி. இதனால்தான், தனது மூன்று சுற்றான உடலில், பாதிவழியில் படமெடுக்கிறது. குண்டலினிப் பாம்பு என்கிறார்கள் தந்திர யோகத்து ஆசான்கள். தெய்வீக இயற்கையின் திட்டத்தின்படி, குண்டலினி சக்தி, இந்தப் புதிய யுகத்தில், ஆசான் சி. வி. வி. யில் நான்காம் நிலையை அடைந்தது. இந்நான்காம் நிலையே, ஆனந்த நிலை எனப்படும். அவரது யோக முறையில், ஆனந்த நிலை என்பது, யாக்கை சரிமானம் செய்யப்படுவதிலிருந்து தொடங்குகிறது. நரம்பு நிலையங்கள் மறுபடி நிர்மாணிக்கப் பட்டுப் புதிய நிலையங்கள் அமைகின்றன. இந்தப் புதிய நிலையங்கள் வழியே புகுந்து செல்லும் பிராண சக்தி, ஒரு புதிய, ஒளி பொருந்திய சூக்கும உடலை அமைக்கிறது. இந்த அனுபவ சரீரம்தான் ஆதி விஞ்ஞானிகள் குறிப்பிடும் அந்தக்கரண சரீரம்.

அந்தக்கரண நிர்மாண விஞ்ஞானம், ஆசான் ஜ்வால்குல் அவர்கள் சொல்லி சீடர் அலிஸ் எ பெய்லி அம்மையார் எழுதிய எழு கிரணங்களும் உபதேசங்களும் (THE SEVEN RAYS AND INITIATIONS) என்னும் நூலில் விளக்கப்பட்டுள்ளது. இந்த அந்தக்கரண சரீரத்தால் அனுபவிக்கப்படும் ஆனந்த நிலையில் உள்ளுறையும் செம்மை உயிர், நிரந்தர வாசம் பெறுகிறது.

இந்த யோகத்தால் செம்மையுற்ற மனிதன் நிரந்தரமாய் ஆனந்தத்தை அனுபவித்தபடி தன் அந்தக்கரண (சூக்கும) சரீரத்தில் வாழ்கிறன். இப்படிப்பட்ட பிறவிக்கு, தன் தொழில்களை மாற்றவோ, தியானம் என்ற பெயரில் காடு குகைகளை நாடவோ எந்த அவசியமுமில்லை. வார இறுதிகளில் அமைதி, இன்பத்தைத் தேட வேண்டிய தேவையுமில்லை. திருமணம், குழந்தை பெறுதல், பொருள்முதலான உலகில் உழைத்தல் இவையெதுவும் அவனது ஆனந்த நிலைக்குத் தடைகளாக மாட்டா. மாருக, வாழ்வின் அனைத்து அம்சங்களும், ஒரே அனுபவத்தின் அங்கங்களாகிவிடும். ஆசான்களுக்கெல்லாம் ஆசானுன கண்ணபிரான், இல்லறத்தைத் தவிர்க்கவுமில்லை; காட்டுக்குப் போகவுமில்லை. அதனுல்தான் எல்லா முனிவர்களும் ஆசான்களும், அவனிடத்தில், வேறென்றும் தோன்றாத பரம்பொருள் நிலையைக் கண்டு, தாங்கள் ஆனந்த நிலை எய்த, அவனைப் பின்பற்றினுர்கள். தற்காலத்தில், ஆசான் சி. வி. வி. யைப் பணிவதன் மூலம் எத்தனையோ சன்னியாசிகள், அறிவு ஜீவிகள், வேதவிற்பன்னர்கள், விஞ்ஞானிகள், பாமரன் என்றழைக்கப்படுவோர், எல்லா வகுப்பிலிருந்தும், விடுவிக்கப்பட்டு, இந்த ஆனந்த நிலையை அடைகிருர்கள்.

படைப்பு - அதன் உருவாக்கம்

படைப்பு, ஏழு தளங்களாய் (நிலைகள்) ஆனது என்பது யோக மரபு. அவை:

1.	தூல நிலை	(PHYSICAL)
2.	வான நிலை	(ASTRAL / ETHERIC)
3.	மனோ நிலை	(MENTAL)
4.	புத்தி நிலை	(BUDDHIC)
5.	அனுபவ நிலை	(NIRVANIC)
6.	அக அனுபவ நிலை	(PARA NIRVANIC)
7.	உணர்வு அனுபவ நிலை	(MAHAPARA NIRVANIC)

நீராலான பனிக்கட்டி நீரில் மிதப்பதுபோல், மனிதனின் தூல உடல், உள் மனிதனை ஆதாரமாய்க் கொண்டு தனித்து விளங்குகிறது. எனவே, அக மனிதன் என்ற ஆட்சிஅறிவிலிருந்து தனித்து, தூல நிலையில் தேகமிருக்கிறது. இங்கே, தூல உடலே உலகம்; அக மனிதனே உலகீசன். பனிக்கட்டி, உருகினால், நீரோடு ஒன்றுகிறது. அதுபோல், சூக்கும நிலைகளில், அந்நிலைகளும் அவற்றுக்கான ஈசன்களும் ஒன்றே. ஒவ்வொரு நிலையிருப்பும், அதை ஆட்சி செய்யும் ஈசனுக்கு தேகம் அல்லது வாகனம். பனிக்கட்டி நீராகும் போது, அதனிருப்பு நீரின் இருப்போடு உள்ளாழ்ந்து விடுகிறது. நீர், ஆவியானால், நீரின் இருப்பு, ஆவியின் இருப்பில் ஆழ்கிறது. ஆவி, காற்றில் ஆழுங்கால், தன்னிருப்பைக் காற்றினிருப்பில் இழக்கிறது. இவ்விதம் சடங்கள் சூக்குமங்களில் ஆழ்கின்றன. ஒவ்வொரு நிலையிலும், உலகீசன் அந்தந்த நிலையங்களே தன் தேகமாக வசிக்கிறான். காற்றின் அணுக்கள் வெடிக்கும்போது சக்தி தோற்றப் பட்டு வெளியில் உள்ளாழ்கிறது. அதுபோல், மஹாபர நிர்வாண நிலையில், விசை (பெண்ணுணர்வு அல்லது சக்தி) உணர்வில் ஆழ்ந்து, அந்த ஒற்றை உணர்வு தயார் நிலையில் நிற்கிறது. இந்த இருப்பு நிலையில், பிரபஞ்ச உணர்வும், பிரபஞ்ச இயல்பும் ஒன்றாகவே திகழ்கின்றன. இந்நிலையைத்தான் மறை நூல்கள் விஷ்ணுவின் மார்பிலுள்ள இலக்குமி (தெய்விக அன்னை) என்று கூறும். இது, சிவன் பார்வதி என்றும் அர்த்த நாரீஸ்வரன் என்றும் கூறப்படும். இத்தகைய விழுமிய கருத்துக்கள், கிழக்கிலும் மேற்கிலும் அனேகமாய் எல்லா ஆன்மிகப் பள்ளிகளிலும் நிலவுகின்றன.

இந்த நிலையிலிருந்துதான் சிருஷ்டி நோக்கத்துடன், சக்தியானது, உணர்விலிருந்து, படைப்பாய், -அதிநுண்மை- சூக்குமம்- சடமென்று, மூச்சு வெளியேறுதல் போல் விடுவிக்கப்படுகிறது. இதைத்தான் முனிவர்கள் படைப்புக் கடவுளான பிரும்மாவிலிருந்து வெளிப்படும் சரஸ்வதியாய்க் கண்டார்கள்.

இந்த ஏழுநிலைகளே, ஏழு உலகங்களாகக் கொண்டாடப் படுகின்றன. மன்பதையின் ஒப்பற்ற மனிதர்கள், நான்காவது உணர்வு நிலையான புத்தி நிலையிலுள்ளார்கள். யோக வழிக்குப் புதியவர்கள் மூன்றும் (மனோ) நான்காம் (புத்தி) நிலைகளுக்கிடையே தவிக்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே மூன்றரை நிலைகளின் அனுபவம் பெற்றவர்கள்; இன்னும் மூன்றரை நிலைகளின் அனுபவம் எய்த வேண்டியுள்ளது. இந்த ஆதாரத்தைக் கொண்டே, புராணங்கள். மனித உயிரை ''சராசரி உணர்வு நிலை'' என்று கூறும். ஆசானின் யோக முறையைக் கடைப்பிடிப்பதன மூலம், மனிதர்கள், ஒரே சமயத்தில், ஏழு நிலைகளிலும் இருக்கலாம். இந்த உடன் நிகழ்வான இருப்பை எய்தியோர், செம்மையான சூக்கும சரீரமுள்ளவராய், அமரர்களாயிருப்பார்கள். அவதாரங்கள், இந்த உணர்வு நிலைவரை இறங்குகின்றனர். அதுவரையில், தெய்வீகத்தின் இறக்கம், தடையின்றி, தொடர்ச்சியானதாய், சூக்குமமாய் இருக்கிறது. இதன் பிறகு, வரிசை ஒழுங்கில், திரிபு ஏற்படுகிறது. இதுவும் சிருஷ்டியின் செயற்போக்கே. இந்தத் திரிபிலிருந்து, யோகப் பயிற்சி மூலம் மீள்வதே பரிணமத்தின் செயல்முறை.

இந்த ஏழு நிலைகளுக்கும் ஏழேழு ($7 \times 7 = 49$) துணை நிலையங்கள் உள்ளன. அதுபோல், ஒவ்வொரு துணை நிலையத்திற்கும் ஏழேழு துணை நிலையங்கள் உள்ளன. சிக்கலான இந்தத் துணை நிலையங்கள், பிரிவுகள் இவற்றின் மாட்சிமையையும், மேன்மையையும், ஆசான் அருளால் யோகத்தால் மட்டுமே அனுபவிக்க ஒண்ணும். இதை எழுத்தில் வடிக்க இயலாது. அவ்விதம் செய்தாலும் அதனால் எந்தப் பயனுமில்லை. ஏனெனில், இது அனுபவ நிலைக்கு உரியதே தவிர, அறிவைச் சார்ந்ததல்ல.

யோகம் நிரந்தர லட்சியம்

யோக விஞ்ஞானம் பழமையானது. தோன்றிய நாளிலிருந்தே, மண்ணகத்து மாந்தர்களுக்கு அது வழங்கப்பட்டு வருகிறது. தனக்கே உரித்தான பரிசோதனை ஆதாரமும், ஒழுங்கு முறைகளும் கொண்ட விஞ்ஞானமது. பல யுகத்து முனிவர்களும், காலம், சந்தர்ப்பம், அந்த நேரத்தில் மன்பதையின் வளர்ச்சி நிலை, இவற்றுக்கேற்ப, யோகத்தை தோற்றுவித்தும், விளக்கியும் வருகிறார்கள். காலமறிந்த முனிகள், ஒருமித்த வாழ்வு முறையை, யோக விஞ்ஞானம் மூலமாகவே வழங்கினார்கள். நவயுகத்தில், தற்போதைய நிலைமைகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப, புராதன விஞ்ஞானத்தைப் புதிய ஒருங்கிணைப்பு முறையாகத் தந்தார் ஆசான் சி.வி.வி.

"அண்டம், அணு இவற்றின் சிருஷ்டி முறைகளின் இணைத் தொடர்பை நிறுவதலே யோகம்" என்று வேதங்கள் பிரகடனம் செய்கின்றன. இந்நிலையை எய்தற்கான வழிமுறை, வேதச் சடங்குகளில் விவரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, யோகத்தின் ஒருங்கிணைப்பு வேதகானமான புருஷ ஸூக்தத்தில் காணப்படுகின்றது.

புருஷா (பிரபஞ்ச ஆள்) தேவர்கள் (அறிவு) நடத்தும் யாகத்தில்' பலிமிருகமாய்த் தியாகம் செய்யப்படுகிறான். இதன் விளைவாய் புருஷா (ஆன்மா / பகுதி உணர்வு) பிறக்கிறான். இதுவே ஒழுக்கத்தில் படைப்பு வேள்வி. இந்த வேள்விமூலம் பகுதி உணர்வாய் இறங்க முன்வருவது பிரபஞ்ச ஆளே. ஒன்று பல பகுதிகளாய்ப் பிரியும் சுயத் தியாகச் செயல் முறை இது. ஜீவன் (ஆன்மா) தேவனே (பரம் பொருள்). ஏனெனில், இந்த செயற்பாங்கில், பிரபஞ்ச ஆள் தன்னையே தியாகம் செய்கிறான். இதுவே (உள்முகமான) பரவலாய் அறியப்படும் "நரபலிச் சடங்கு".

பரிணாம முறையிலும், கீழ்மனம், மேல்மனத்தைப் பணிவதன் மூலம் அதனிருப்பில் தன்னைப் பலிகொடுக்கிறது. இது பலிச்சடங்கின் மறுபகுதி. இதில், பகுதி உணர்வு, பிரபஞ்ச உணர்வில் கலந்து, தன் தனித்தன்மையை இழக்கிறது. அது ஒற்றை இருப்போடு ஒன்றி விடுகிறது. வேதத்தைப் பொறுத்தமட்டில் யோகம் என்பது இந்த ஒற்றை இருப்பு நிலையேயாம்.

உடல், மனம், புத்தி, புலன்கள் இவை பிரிந்து அவற்றின் பிரபஞ்சத் தத்துவங்களாவது, உபநிடதங்களில் விவரிக்கப்படுகிறது.

மண்ணோடு மண், நீரோடு நீர், தீயோடு தீ, காற்றோடு காற்று, வெளியோடு வெளி என்று திரும்பிவிடும் இந்த விடுதலையே யோகம் என்று உபநிடதங்கள் கூறும்.

கீதைக் கண்ணன், யோகத்தின் பல்வேறு தளங்களை விளக்கி, அவற்றின் ஒற்றுமையை நிறுவினான். சமநிலையே யோகநிலை என்று விளக்கப்படுகிறது. இதன் பொருள், பார்க்கக்கூடிய ஒவ்வொரு பொருளிலும் ஒரே பகுதிஉணர்வைப் பார்த்தல் என்பதே. அதே உணர்வைப் பொருளாயதென்று கூறப்படும் உலகம், உடல், புலன்கள் இன்னபிறவற்றிலும் பார்த்தலும் இதிலடங்கும். விருப்பு-வெறுப்பு, இன்பம்-துன்பம், தட்பம்-வெப்பம். ஈர்ப்பு-மறுப்பு, போன்ற எதிர் ஜோடிகளில் சமதொலைவில் வாழும் சமபாவனை என்றும் இது பொருள் படும். கீழ்நான் (மனம்) மேல் நானில் (ஆன்மா) நிறுவிக் கொள்வது, (இரு தளங்களும் வரிசை ஒழுங்கமைவது) யோகமென்பது கண்ணன் குறிப்பு.

செயலைப் பற்றிப் பேசுங்கால், கண்ணன் கொடுத்த இன்னொரு விளக்கம் ''யோகம் என்பது செயலில் தேர்ச்சியோடிருத்தல்'' என்பது. செயல்கள், தங்கள் விளைவுகள் மூலம் மனிதனைப் பந்தப் படுத்தினாலும், துணையின்றிச் செயல்புரியும் முறையொன்றுளது. அந்த முறையில் செயல்கள் நடத்தப்படுகின்றன; நாமவற்றைச் செய்வதில்லை, உதாரணமாக, சிலர் பேசும்போது, கை கால்கள் கண்களெல்லாம் வெகுவாய் அசைகின்றன. அவற்றை அவர்கள் வேண்டுமென்றே செய்வதில்லை. அவர்கள் மூலமாக அவை நடக்கின்றன. அவர்கள் செய்யவில்லை; செயல் நடைபெறுகிறது. இதுபோலவே, செயல்களில் செய்வோனின் ஈடுபாட்டின்றியே எல்லாச் செயல்களையும் செய்ய முடியும். குழந்தைக்கு, அதன் விளையாட்டில் ஈடுபாடோ, நோக்கமோ பயனைப் பற்றிய அக்கறையோ இல்லை. செயலில் இருக்குங்கால் மகிழ்வு நுகர்தல் மட்டுமே உண்டு. தன் மூலமும் தன்னைச் சுற்றியும் வாழ்வில் நடந்த எல்லாச் செயல்களிலும், கண்ணன் விளையாட்டாகவே இருந்தான். இம்முறையில். விருப்பு வெறுப்புக்கள் இல்லை; நம்மவர் மற்றவர் என்றேதுமில்லை. வாழ்க்கை, சலிப்புமிகுந்த பொறுப்பாயில்லை; தள்ளமுடியாத விதியாயில்லை. இவ்வழியில், வாழ்வு, நிரந்தரமானதே ஆனந்த நாடகம். இதையே ராஜயோக மார்க்கமாக வகுத்துப் பிரேரித்தார் கண்ணபிரான்.

பதினெட்டுப் புராணங்களையும் இயற்றிய வேதவியாசர், கீழ் மனம், மேல்மனத்தில் லயித்து வேறுபாடு தீர்வதே யோகமொன்று விளக்குகிறார். பதஞ்சலி முனிவர், மனத்தின் நடத்தை அம்சத்தை நிறுத்துவதே யோகமென்கிறார். சிலர், இதை மனத்தை நிறுத்துதல்

என்று தவருய்ப் புரிந்து கொள்கிருர்கள், செயல்களுக்கும், உணர் தலுக்கும் மனமொன்றே தொடர்பு என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதை நிறுத்துவதால், புற உலகில் நடவடிக்கை, தொழில் நடப்பு யாவும் விண்டுவிடும். யோகத்தின் நோக்கம் இதுவல்ல. மனதின் நடத்தை அம்சம், முன்வினைகளால், மனிதனைப் புலன்கள். பொருள்கள், நபர்களில் கட்டிப் போடுகிறது. இந்தக் கட்டிப்போடும் நடத்தை அம்சத்தைத்தான் நிறுத்த வேண்டும். அதன்பிறகு செயல்கள் தொடரினும், நோக்கில் நேர்ந்த மாற்றத் தால், தளையிலிருந்து விடுதலை கிடைக்கிறது. உள்ளாழ்வதால் நடத்தை அம்சங்கள் மறைவதே யோகமென்கிருர் பதஞ்சலி மாமுனி. நினைவுகூறும் செயற்பாங்கால் மனம், உள்ளிருக்கும் ''நானோடு'' தொடர்புகொள்ள வைக்கப் படுகிறது. தொடர்பு வளருங்கால், மனமும் அதன் விஷயங்களும் மெள்ள மெள்ள மறைகின்றன. அதன் பிறகு, ''நானை''ப் பிரதிபலிக்கும் கண்ணுடியாய் ஒளி வீசுகிறது மனம்.

இந்த யோகச் செயல்முறைக்கு, எட்டுப் படிகள்கொண்ட திட்டம் தந்தார் பதஞ்சலி.

அவையாவன :

(1)	யமா	:	மனித வினைத்திறங்களை ஒழுங்கு செய்தல்
(2)	நியமா	:	மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்னும் நான்முகமுள்ள கருவியின் குறைகளைத் திருத்துதல்.
(3)	ஆசனு	:	சுலபத்தில், உறுதியைப் பயிலுதல்
(4)	பிராணுயாமா	:	பிராணனின் நடையை ஒழுங்கு செய்தல்
(5)	பிரத்யாஹாரா	:	மனதில், புலன்கள் உள்ளாழ்தல்.
(6)	தாரணு	:	ஆழ்ந்து நினைதல்
(7)	தியானு	:	தியானம்
(8)	சமாதி	:	எய்துதல்

இந்தத் திட்டமும் கீதையில் முழுமையாய் விவரிக்கப் பட்டிருக் கிறது. ஆசன நுட்பங்களால் உடலை உறுதிசெய்து, அதன்மூலம் உள்ளிருக்கும் நிரந்தரமான ஆன்மாவை அடையாளம் காண்பது ஹடயோகம். மந்திரங்களைப் பயிலும் யோகிகள், மந்திரங்களை உச்சரிப்பதன் மூலம், ஒலியின் மூலத்தைத் தியானித்து, அந்த மூலமே எங்குமுள இறைவன் என்றறிகிருர்கள். ஐம்புலன்களும் வரிசை யொழுங்கு பெறுவதன் மூலம் உள்ளிருப்போனை அறிவது தந்திர யோகம். சக்தி வழியில் செல்வோர் (அன்னையின் அருளால் அத்தனை அடைதல்) உணர்வு ஆண் தத்துவம் என்றும், அதிலிருந்து வெளிப் படும் அதனியல்பான சக்தி, பெண்தத்துவமென்றும் கொள்வர். உணர்வில், மீண்டும் இயல்பு ஒன்றுங்கால், வினையழிந்து, நித்தி யானந்த நிலைக்கு வழி கோலப் படுகிறது.

இந்த நூற்றாண்டில் மனிதனின் ஆன்மிக வளர்ச்சியைக் கவனித்து, ஆசான் சி.வி.வி. தனது யோகத் திட்டத்தை வகுத்தார். அதன்படி மனித உடலின் ஒவ்வோரணுவும் பரம்பொருள். அது சிருஷ்டி என்னும் தனது மஹா நாடகத்திற்காக சக்தியைப் படைத்தது. இந்த சக்தியின் உதவியால், அது "ஆன்மா" என்னும் நிபந்தனைக்குட்பட்ட உணர்வாய் வடிவெடுக்கிறது. ஒரே மூலத்திலிருந்து தோன்றும் இவ்விதமான பகுதிஉணர்வுகள், நாடகாசிரியனின் சிருஷ்டி மனத்திலிருந்து வெளிவரும் பலவிதமான கதாபாத்திரங்கள் போலத்தான். நாடகத்தில் வசனம், இன்பம், விசனம், சிறப்பான பாத்திரங்கள் யாவும் உண்டு. சம்பவங்கள் உண்மையே போல், நடிகர்கள் வந்து செல்கிறார்கள். நடிப்பு என்பதை மறந்தால், சம்பவங்களில் ஈடுபட்டு விடுகிறார்கள்.

அதுபோலவே, ஆன்ம உணர்வு மறந்து போன உயிர்கள், படைப்பு என்னும் மஹா நாடகத்தின் சம்பவங்களில் விழுந்து விடுகிறார்கள். நினைப்பு மீண்டால், நிகழ்வதோ நீளும் இன்பம். இந்த அனுபவத்தில் முன்வினையுமில்லை; தற்போதைய சிருஷ்டி நிலையுமில்லை.

இவ்வழியில், கட்டுப்பாடுகள், ஒழுங்கு முறைகள் இவற்றைக் காட்டிலும், ஒப்புவித்தல் அல்லது பணிதலே தலையாயது. தம்மைச் செம்மைப் படுத்தி, நாம் பின்பற்ற நமக்கொரு பாதை வகுத்ததன் மூலம் ஆசான் நிரந்தரமானார். அவரது தெய்விக ஒளியைப் பணியும் அப்பியாசி, யோக அனுபவத்திற்கு உயர்த்தப்படுகிறான். இவ்வனுபவத்தின் வாயிலாய், படிப்படியாய் ஆன்ம உணர்வுநிலையை எய்தி, அதன் பின்னர், அனைத்திலும் உள்ள ஒரே உணர்வாய்ப் பரவுகிறான், இது, ஆசானைப் பிரார்த்திப்பதன் மூலம் சாத்தியமாகிறது. இவ்வழியில், நிபந்தனைகள், கட்டுப்பாடுகள், மனத்தை வசக்குதல் எதுவுமில்லை. மனதை, ஆசானுக்கு ஒப்புவிப்பதன் மூலம் படிப்படியான உருமாற்றம் விளைகிறது. இந்தப் பாதையில் மனவாதை ஏதுமில்லை. ஆரோக்யமானவர்கள்தான் இந்த யோகத்தைப் பயில வேண்டுமென்ற சட்டம் எதுவும் கிடையாது.

இந்தப் பயிற்சியைத் துவங்குவதாலேயே, உடல்நலம் சீராகிறது. மனித உயிரின் எல்லா நிலைகளும் அமரத்துவம் எய்துகின்றன.

ஆசான் சி.வி.வி.யின் கமலப்
பதங்களுக்கு வணக்கங்கள்.
(NAMASKARAMS MASTER C.V.V.
TO YOUR LOTUS FEET)

ஆசிரியரைப் பற்றி :

"மாஸ்டர் ஈ.கே", என்று வழிபடப்படும் குலபதி திரு. எக்கிராலா கிருட்டிணமாச் சாரியார் நவயுகத்தின் ஆசாரியர்; நலம் தரும் மூலிகை; நவீன யோகி.

பொருள் — ஆன்மா என்று படைப் பைப் பேதம் செய்யும் போக்கைப் புறக் கணித்து, பொருள், ஆன்மாவின் மகவே என்பதைத் தெளிவாக்கினர். பொருளான உலகில் அருளான வாழ்வு வாழ்தல் சாத்தி யம் என்று வாழ்ந்து காட்டினர்.

ஆசான் அன்பின் உரு; ஆனந்த மயம்.

ஆசிரியரைப் பற்றி :

"மாஸ்டர் ஈ.கே", என்று வழிபடப்படும் குலபதி திரு. எக்கிராலா கிருட்டிணமாச் சாரியார் நவயுகத்தின் ஆசாரியர்; நலம் தரும் மூலிகை; நவீன யோகி.

பொருள் — ஆன்மா என்று படைப் பைப் பேதம் செய்யும் போக்கைப் புறக் கணித்து, பொருள், ஆன்மாவின் மகவே என்பதைத் தெளிவாக்கினூர். பொருளான உலகில் அருளான வாழ்வு வாழ்தல் சாத்தி யம் என்று வாழ்ந்து காட்டினூர்.

ஆசான் அன்பின் உரு; ஆனந்த மயம்.